உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 10 திங்கட்கிழமை (24.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 059



கரை ஒதுங்கியது டொல்பின்... 3



ஓரணியில் போட்டியிட அழைக்கிறார் சங்கரி 3



யாழில் தனியார் பல்கலைக் கழகம் எஸ்.பி. 12



முஷாரப்பின் ஆவேசப் பேச்சு 16



தக்கப் பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்கா 21

# இலங்கை மீதான குற்றச்சாட்டு குறித்து ஐ.நா. பேச்சாளர் பதிலளிக்க மறுப்பு

## இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி

யாழ்ப்பாணம், ஜனவரி 23

யுத்தத்தின் இறுதிப் பகுதியில் இலங்கையில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஊடகங்கள் பல வாரங்களாக எழுப்பிவரும் கேள்விகளுக்கு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்டின் நெஸ்கி பதிலளிப்பதைத் தவிர்த்து வருகின்றார் என்று 'இன்னர் சிற்றி பிரஸ்' இணையத் தளம் குற்றஞ்சாட்டி உள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாகப் பேசும் உரிமை ஐ.நாவுக்கு உள்ளது என்று ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ- மூன் தெரிவித்துள்ள போதிலும் அது தொடர்பான விடயங்களை பான் கீ-மூனின் பேச்சாளர் தவிர்த்து வருகின்றார் என்றும் அந்த இணையதளம் கூறியுள்ளது.

'இன்னர்சிற்றி பிரஸ்' இணையதளத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

''மனித உரிமைகள் தொடர்பாகப் பேசும் கடமை ஐ.நாவுக்கு உண்டு'' என்ற தலைப்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ -மூன் கடந்த சனிக்கிழமை ஐ.நா. செய்தி நிலையத்தின் ஊடாக உரை ஒன்றை வழங்கியுள்ளார்.

ஆனால், மனித உரிமைகள் தொடர்பான

(23ஆம் பக்கம் பார்க்க)

## குச்சவெளியில் திடீர் நில வெடிப்பு

பன்குளம், ஜன. 24

திருகோணமலை - குச்சவெளிப் பிரதேசத்தின் பல பகுதிகளில் நேற்று அதிகாலை தொடக்கம் நில வெடிப்பு ஏற்பட்டு இடத்துக்கிடம் மண் குவிந்து வருவதுடன் சில இடங்களில் புதைகுழிகளும் ஏற்பட்டுள்ளன. குச்சவெளி - கலப்பையாறு சுனாமி வீடமைப்புத் திட்டத்துக்குப் பின்னால் அமைந்துள்ள களப்புப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

இதனை அடுத்து அப்பகுதியில் இராணுவமும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். அப்பகுதிக்கு பொதுமக்கள் பிரவேசிக்காதவாறு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் திருகோணமலைக்குப் பயணமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தினால் பிரதேச மக்கள் அச்சம் அடைந்துள்ளதுடன், சிலர் நகரப் பகுதிகளில் உள்ள உறவினர்களது வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என எமது பிரதேச செய்தியாளர் தெரிவித்தார். *(படங்கள் 24ஆம் பக்கத்தில்)* (உ-சி)

## வேட்புமனு தயாரிப்பில் கட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, ஜன.24

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு வேட்பு மனுக்களைத் தயாரிப்பதில் முக்கிய கட்சிகள் இப்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஜே.வி.பி. பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் எதிர்வரும் 26ஆம், 27 ஆம் திகதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமென அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி 27ஆம் திகதி

(23ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - கூட்டமைப்பு இடையிலே பேச்சுக்கான பேச்சே நடக்கிறது

யாழ்ப்பாணம், ஜன.24

''தமிழர் தாயகப் பிரதேசம், தமிழினத்திற்கான அரசியல் தீர்வு என்ற விடயங்களில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லாத நிலையிலேயே இலங்கை அரசுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் ஈடுபடும்.

தற்பொழுது பேச்சுக்கான பேச்சே நடைபெறுகின்றது. இது அரச பிரதிநிதிகள் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் - மூன்றாம் தரப்புப் பிரதிநிதிகள் என்ற நிலையிலும் நடைபெறுகின்றது'' - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

நேற்று மாலை தமிழரசுக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கட்சியின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- (23ஆம் பக்கம் பார்க்க)

## அ' புரம் சிறையில் கைதிகள் கூரை மீது ஏறிப் போராட்டம்

கொழும்பு, ஜன. 24

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் சிலர் அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி சிறைச்சாலை கூரையின் மீது ஏறி நேற்று மாலை 4.00 மணி முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என சிறை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடிதண்ணீர் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை, இடப்பற்றாக்குறை மற்றும் சந்திக்க வருபவர்களிடம் சிறைப் பணியாளர்கள் தகாத முறையில் பேசுவதை நிறுத்துவது போன்வற்றைச் சீர்செய்ய வலியுறுத்தி (24ஆம் பக்கம் பார்க்க)

## மீனவரைச் சுடுவதை நிறுத்துங்கள் இலங்கையிடம் இந்தியா காட்டம்

சென்னை, ஜன. 24

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்த முடியாது என்று இந்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். இலங்கைக் கடற்படை அத்தகைய செயல்களை உடன் நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழக முதல்வர் மு.கருணாநிதியை அவசர அவசரமாக நேற்றுச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

''அவர்களைச் சுடுவதற்கு எந்தவொரு காரணமும் நியாயமும்

(23ஆம் பக்கம் பார்க்க)

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு....

சொல்பெக் EW 050



உயிர்க் கொல்லி டெங்கு நுளம்புகளை அழிக்க சொல்பெக் 80 மி.லீ. இனை 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்

Hayleys ஹேலீஸ் காட்சியறை 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2221292

## ஆஸிக்கான புதிய தூதரை நியமிப்பதில் கடும் நெருக்கடி

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி திஸேர சமரசிங்கவை ஆஸ்திரேலியத் தூதராக நியமிப்பதற்கு அந்த நாட்டில் கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

போர்க் குற்ற சர்ச்சை காரணமாக திஸேரவின் நியமனத்தை நிராகரிக்குமாறு ஆஸ்திரேலிய அரசுக்குக் கடும் அழுத்தங்கள் வழங்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவின் 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்' என்ற பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. ''இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி திஸேர சமரசிங்க ஆஸ்திரேலியாவுக்கான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று ஐ.நா. கூறியுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சு இந்திய மனத்தை பிரச்சினைக்குரியதாகக்

(23ஆம் பக்கம் பார்க்க)

## எகிறும் மரக்கறி விலை பச்சை மிளகாய் ரூ.700

கொழும்பு, ஜன. 24

மரக்கறி வகைகளின் விலை முன்னெப்போதும் இல்லாத்வாறு அதிகரித்துள்ளது. ஒரு கிலோ பச்சை மிளகாயின் விலை 700 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. கடும் மழை காரணமாக மிளகாய்ச் செய்கை கடும் பாதிப்புக்குள்ளானதால், பச்சை மிளகாய் சந்தைக்கு வருவது மிகவும் குறைந்துள்ளதாக தம்புல்ல பொருளாதார நிலைய வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறி வகைகள் அனைத்தும் நூறு ரூபாவுக்கு அதிகமாகவே விற்பனையாகின்றன. கோவா ஒரு கிலோ நூறு ரூபாவாகவும், கறி மிளகாய் 260 ரூபாவாக (24BB £UPB-£ó²UP)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com





அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான 20% சாத்தியமுண்டு

# உயிரிழந்த, வெளிநாடு சென்றோரின் விவரங்களைத் தேர்தலுக்கு முன் திரட்டுக

## கிராம சேவையாளருக்கு ஆணையாளர் உத்தரவு

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னதாக கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் உயிரிழந்த மற்றும் வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் தொடர்பான விவரங்களை திரட்டுமாறு தேர் தல்கள் ஆணையாளரால் அனைத்து கிராமசேவையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட் டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதியளவில் முழுமையான தகவல்கள் திரட்டப்பட்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட தேர்தல் காரியாலங்களில் தகவல்களை ஒப்படைக்க வேண்டும் என செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஏற்படக் கூடிய முறைகேடுகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே தேர்தல்கள் ஆணையாளரின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கிராமசேவையாளர்களினால், உயிரிழந்த மற்றும் வெளிநாடுகளுக்கு சென்றோர் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு விவரங்கள் வழங்கப்பட்ட பின்னர் அது குறித்து தலைமைக்காரியாலத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அதையடுத்து தேர்தல் செயலகத்தினால், மரணித்தவர்களை குறிக்கும் விதத்தில் 'டி' எழுத்தையும், வெளிநாடு களுக்கு சென்றவர்களை குறிக்கும் விதத்தில் 'ஏ' எழுத்தையும் குறிப்பட்டு வாக்களிக்கத் தகுதி பெற்றோர் பெயர்ப்பட்டியல் அடங்கிய புத்தகங்கள் வெளியிடப்படும்.

அவற்றை வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட பொறுப்பதிகாரிகளுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் செயலக வட் டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

## தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க வசதியாக

# வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகளை தளர்த்துமாறு கோருகிறது கபே அமைப்பு

கொழும்பு, ஜன. 24

வடக்கு, கிழக்கில் தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் - என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' வலியுறுத்தியுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சுயாதீனமானதும், நியாயமானதுமான முறையில் நடைபெற வேண்டுமாயின் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகளில் தளர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் எவ்வாறு பிரசாரங்களை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் சார்பில் போட்டியிடுவோர் பிரசாரங்களை முன்னெடுப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் இயல்பு நிலைமைக்குத் திரும்ப வேண்டும் எனவும், பாதுகாப்பு ஏற்பாடுகளை சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தேர்தல் நடத்தப்பட்டால் மக்களுக்கு தேர்தல் மீது நாட்டம் இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு துறைமுகத்தில் ஆஸ்திரேலிய போர்க்கப்பல்

கொழும்பு, ஜன.24

ஆஸ்திரேலியக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எச்.எம்.ஏ.எஸ்.மெல்பேர்ன் கப்பலே கொழும்புத் துறைமுகம் வந்துள்ளது.

138.1 மீற்றர் நீளமும், 4200 தொன் எடையும் கொண்ட இந்தப் போர்க்கப்பலில் 28 அதிகாரிகளும் 191 கடற்படையினரும் கொழும்பு வந்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தப் போர்க் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் அணிவகுப்பு மரியாதைகளை அளித்துள்ளனர்.

## இராணுவச் சிப்பாயிடம் 4 போலி அடையாள அட்டைகள்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்த குற்றங்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரிடமிருந்து நான்கு போலி அடையாள அட்டைகள் மீட்கப்பட்டன என கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிப்பாயும் மற்றொரு நபரும் கல்கிஸை படோவிட்ட பிரதேசத்தில் கைது செய்யப்பட்டனர் என்றும் இவர்கள் ஊரகஸ் மங்கந்தி, நுகேகொடை பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகிறது.

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் - ஜே.வி.பி

கொழும்பு, ஜன. 24

வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் சதவீதத்திற்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் - என்று அகில இலங்கை தொழிற் சங்கன் சம்மேள னத்தின் தலைவர் கே.டி.லாந்த வலியுறுத்தியு ள்ளார். கொள்ளுபிட்டி குருகெதர கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை வங்கிச் சேவையாளர் சங்கத்தின் 6 ஆவது வருடாந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மலிவு விற்பனைகளின்போது பழைய விலையைப் புள்ளடியிட்டு மறைத்துப் புதிய விலைகளைக் காட்சிப்படுத்துவது போன்று சம்பள உயர்வை வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, 9 ஆயிரத்திற்கு சம்பள உயர்வை வழங்குமாறு கோரியபோது 8 ஆயிரமாக இருந்த சம்பளங்களைப் புள்ளடியிட்டு மறைத்து புதிய சம்பளம் என அரசு குறிப்பிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், புதிய சம்பள முறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவுக்கேற்ற சமாந்தரமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற சூத்திரம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அரசு நாட்டு மக்களுக்காக உரிய பலனுள்ள அரசியலை மேற்கொண்டு வருகிறது என நீர்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# வலி.கிழக்கில் முதல் தடவையாக நேற்று கலை பண்பாட்டு விழா

அச்சுவேலி, ஜன.24

வலி.கிழக்குப் பிரதேச செயலக பண்பாட்டுப் பேரவையின் முதலாவது கலை பண்பாட்டு விழா நேற்று சிறுப்பிட்டி கலை, பண்பாட்டு மன்றத்தின் சி.வை. தாமோதரம்பிள்ளை அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்களாக சிறுப்பிட்டி விஷ்ணு துர்க்கா ஆலயத்தில் இருந்து கோலாட்டம், காவடி, கரகம் கும்மி போன்ற பாரம்பரிய நடன முறைகளுடன் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சிறுவை என்ற கலை பண்பாட்டுமலரை யாழ்.பல்கலைக்கழகக் கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.வேல்நம்பி வெளியிட்டு உரை நிகழ்த்தினார். (ஐ-323-11)

# நிகழ்வுகள்

**கும்பாபிஷேகப் பெருவிழா**

தெல்லிப்பளை அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகக் கிரியைகளை மாவை ஆதீன கர்த்தா மகாராஜா சு.து. ஷண்முகநாதக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

கும்பாபிஷேகம் முடிவுற்றதுடன் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் காலை 10 மணிக்கு இடம்பேறவுள்ளது. (ற-313)

**அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்**

புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கட்டாயக் கல்விக்குழு, விளையாட்டுக்குழு என்பனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)

**முதுகலைமாணிக் கற்கைநெறி**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் உயர்பட்டப்படிப்புகள் பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி கற்கை நெறி 2009/2010 ஆம் ஆண்டுக்கான வாய்மொழித் தேர்வு எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணிவரை பரீட்சைகள் நடைபெறவுள்ளது.

மேற்படி கற்கை நெறியிலுள்ள மாணவர்கள் முதுகலைமாணி கற்கை நெறியின் பொது நிர்வாகத்தின் இணைப்பாளரைச் சந்தித்து விவரங்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ற-311)

**காசநோய்த் தடுப்புச் சங்கப் பொதுக்கூட்டம்**

வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று திங்கள் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறுமென யாழ். மாவட்ட காசநேய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் பங்குனிமாதம் 24 ஆம் திகதி உலக காசநோய் தினமாகும். அதனை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பெருகி வருகின்ற காசநோயைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆலோசனைகளையும் அனுபவங்களையும் கூட்டத்தில் கலந்து கொள்வோர் கலந்துரையாடலாம்.

புதிய அங்கத்தவர்களைக் கொண்டு நிர்வாக சபை தெரிவு செய்யப்படவுள்ளதால் பழைய அங்கத்தவர்களையும் புதிதாக இணைய விரும்பும் ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ற-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தமிழ்க் கட்சிகளும் போட்டியிட வேண்டும்

## ஆனந்தசங்கரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து சகல தமிழ்க் கட்சிகளும் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:

தற்போது தேர்தல் களத்தில் நிலவுகின்ற நிலைமைகளை உற்றுநோக்கினால் எமது இனத்துக்கு எந்த ஒரு விமோசனமும் கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் தெட்டத் தெளிவாகின்றது. இவ்வளவு அழிவுகளையும், அனர்த்தங்களையும் சந்தித்த பின்பும் கூடத் தமிழர்கள் ஒன்றுபடவில்லையே என மாற்று இனத்தவர்களும் சர்வதேச சமூகத்தினரும் எள்ளிநகையாடும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. "தமிழீழமே தருகின்றோம். ஒரு கிழமைக்காவது தமிழர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று சம்பந்தப்பட்டவர்கள் கூறினால் கூட எம்மவர்கள் ஒன்றுபடமாட்டார்கள்போல் தெரிகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த காலத்தில் நடந்த சுசப்பான சம்பவங்களை எல்லாம்மறந்து ஒன்றிணைந்து செயற்பட முன்வந்துள்ள நோக்கமே மேலே கூறப்பட்ட காரணங்களாகும். ஒன்றிணைந்து செயற்படுவதற்கு ஆதரவு நல்கத் தயாராக உள்ள சில அமைப்புகளை ஏதோ ஒரு சில காரணங்களைக் காட்டி உள்வாங்கப்படாதிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது என்பதை உணர முடிகின்றது.

நான் இரா.சம்பந்தனுக்குக் கூறியதை ஞாபகமூட்ட விரும்புகின்றேன். அதாவது வரப்போகின்ற தேர்தல் அரச சார்பானவர்களுக்கும் எமக்கும் இடையில் தேர்தல் மட்டுமல்ல, பலப்பரீட்சையும்கூட. அரசுடன் மோதும் அளவுக்கு நாம் பலப் பரீட்சை நடத்தப் போவதில்லை. ஆனால் அரசுடன் பேசுவதற்குப் பலம் மிக்க அமைப்பை உருவாக்கிக் காட்ட வேண்டும் என்பதே.

மீண்டும் ஒரு தடவை நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வினயமாக வேண்டுவதும் மக்கள் விரும்புவதும் ஈ.பி.ஆர். எல்.எப்.பத்மநாபா அணி, சிவாஜிலிங்கம் சார்ந்துள்ள தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, ரெலோ சிறி சபாரத்தினம் அணி, ஐ.தே.க.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா உட்பட அனைத்து அமைப்பினரையும் இணைத்து ஒரு சில ஆசனங்களையேனும் வழங்கி அவர் களை உள்வாங்க வேண்டும் என்பதேயாகும். எம்மைப் பொறுத்தளவில் எது நடப்பினும் எமது தற்போதைய நிலைப்பாட்டில் இருந்து விலகாது தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடும் முடிவில் மாற்றமில்லை. ஏனையோரை ஒன்றிணைக்கும் பணியினை என்னிடம் ஒப்படைப்பின் அதற்கு நான் முழு ஒத்துழைப்பையும் தந்து நிறைவேற்றுவேன். எம்மைப் பொறுத்தளவில் எந்தவித விட்டுக்கொடுப்புகளையும் தரத் தயாராக உள்ளோம். எமது ஆலோசனையை ஏற்றுக் கொண்டு இன்னும் காலம் கடந்து போகவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் பீடம் ஒரு நல்ல முடிவினை எடுத்துத் துன்பத்தில் துவளும் எமது மக்களுக்கு விமோசனம் கிடைக்க வழி செய்ய வேண்டும். விரக்தி ஏற்பட்டு அதிக பலன்தராத ஒரு முடிவினை எடுக்காது பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு இதுவரை அணியில் சேராத அமைப்பினரை எமது மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

# பல்கலை ஆசிரியர் கிழக்குக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் மூலம் எடுத்துச் செல்லப்பட்ட இந்த உலருணவுப் பொதிகள் கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தினர் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன எனப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ-10)

# இத்தாவில் முருகன் ஆலயத்துக்கு செல்லப் படையினர் அனுமதி



யாழ்ப்பாணம், ஜன.24

பளைப் பிரதேச செயலகத்தின்கீழ் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இத்தாவில் முருகமூர்த்தி கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதன் முதற்கட்டமாகக் கடந்த 16ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் பிரதேசப் படை அதிகாரிகளின் உதவியுடன் ஆலயத்துக்குச் சென்று சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதி மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும் ஆலயத்தில் வழமையான பூசை வழிபாடுகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இராணுவத்தினர் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-10)

# குற்றச் செயல்களை ஒழிக்க சைக்கிள்களில் படையினர் ரோந்து

வலி.வடக்கு, ஜன.24

யாழ்ப்பாணத்தில் பொலிஸ், இராணுவத்தின் வீதி ரோந்து நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் துவிச்சக்கர வண்டிகளில் வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கிராமங்களின் உட்புறங்களில் உள்ள ஒழுங்கைகளிலும் கடமைகளை மேற்கொள்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதேவேளை பொலிஸார் துவிச் சக்கர வண்டிகளில் சிவில் உடைகளில் பரவலாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினர் வீதிச் சோதனைகளை மேற்கொள்வதுடன் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் இளம்வயதினர் மறிக்கப்பட்டு சோதிக்கப்படுகின்றனர்.

மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

இராணுவத்தினர் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் பரவலாக வீதி ரோந்துப் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். (ஐ-86)

# வெற்றிலை சின்னத்தில் ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஜன. 24

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடப் போவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அறிவித்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை, சுதந்திரம், அபிவிருத்தி மற்றும் வாழ்வியல் உரிமைகள் அனைத்தையும் அடைவதற்குச் சாத்தியமான ஒரேயொரு வழிமுறையான இணக்க அரசியலுக்கான கதவுகளை மூடிவிட விரும்பாத நாம் நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகளுடன் இணைந்து கொள்ளும் பொதுச் சின்னமான வெற்றிலைச் சின்னத்தில் எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதே ஆரோக்கியமாகும்.

- என்று ஈ.பி. டி.பி. தெரிவித்துள்ளது. (ஐ)

# மட்டக்களப்பு மாங்கேணியில் கரையொதுங்கிய டொல்பின்

மட்டக்களப்பு, ஜன.24

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் உள்ள மாங்கேணிக் கடற்கரையில் டொல்பின் மீன் ஒன்று கடந்த சனிக்கிழமை பகல் கரை ஒதுங்கி உள்ளது.

மாங்கேணிக் கடலில் பெரிய உருவமுடைய மீன் ஒன்று வருவதைக் கண்ட மீனவர்கள் அதனைப் பிடித்துள்ளனர். காயமுற்ற அதனால் நீந்துவதற்கு இயலாமல் போயுள்ளது. அதனால் அந்த டொல்பினை கரைக்குக் கட்டி இழுத்து வந்துள்ளனர்.

சனிக்கிழமை மாலைவரை உயிருடன் இருந்த இந்த மீன் தற்போது இறந்துள்ளது. இதனைப் பார்வையிடுவதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக மாங்கேணிக் கடற்கரைக்குச் செல்கின்றனர்.



இது 14அடி நீளமும் 3அடி சுற்றுவட்டத்தையும் கொண்டுள்ளது. இது சுமார் 1,400 கிலோகிராம் நிறைகொண்டது.

இந்த டொல்பினை கொழும்பு மட்டக் குளியில் அமைந்துள்ள தேசிய நீரியல் வள முகாமை ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை வாகரை கடற்றொழில் பரிசோதகர் கு.தர்ஜனன், நாரா நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகஸ்தர் சி.நந்தேஸ்வரன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

அருகிவரும் டொல்பின் இன மீன்களைப் பாதுகாப்பதற்காக பல சர்வதேச அமைப்புகள் முயற்சி எடுத்து வருகின்றன. மாங்கேணிக் கடற்கரையில் இதற்கு முன்னரும் ஒரு டொல்பின் கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

# மருதங்கேணி, காவலூரில் பொலிஸ் நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜன.24

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியிலும் ஊர்காவற்றுறையிலும் பொலிஸ் நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

வடபிராந்தியப் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுசில் பெரோரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருதங்கேணியில் பொலிஸ் நிலையம் அமைக்கப்படவில்லை என்றும் ஊர்காவற்றுறையில் பொலிஸ் நிலையம் அமைக்கப்படவில்லை என்றும் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்குப் பதில் அளிக்கையில் அவர் விரைவில் அந்தந்தப் பகுதியில் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

சங்கானை நகர் மற்றும் சந்தைப் பகுதியில் பொலிஸாரின் பணி இல்லை எனப் பிரதேச செயலாளர் சுட்டிக் காட்டினார்.

அந்தப் பகுதியில் பொலிஸ் ரோந்தை நடைமுறைப்படுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# தொடரும் சைக்கிள் திருட்டுகள்

யாழ்ப்பாணம், ஜன.24

உடுவில் பிரதேச செயலகத்தில் பொதுமக்களின் சைக்கிள்கள் தொடர்ந்து களவாடப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமையும் பிரதேச செயலகத்துக்குச் சென்ற இளம் விதவைப் பெண்ணின் சைக்கிள் ஒன்று திருடிச் செல்லப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிரதேச செயலகத்தில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் களவுபோயுள்ள நிலையில் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

தற்போது மீண்டும் இந்தச் சைக்கிள் திருட்டுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சைக்கிள் திருட்டுச் சம்பந்தமாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழல் திணைக்களத்தில் 56 அதிகாரிகளின் இடமாற்றும் தீர்மானம் பாதுகாப்பு அமைச்சால் நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 24

இலஞ்ச ஊழல் திணைக்களத்தில் பணி புரியும் 56 பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கு பொலிஸ் மா அதிபர் எடுத்த தீர்மானத்தை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

ஆணைக்குழுவில் ஐந்து வருடங்களுக்கு மேலாக சேவை செய்த பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய எடுத்த தீர்மானம் ஆணைக்குழுவின் செயற்பாடுகளைப் பாதிக்கும் என அதன் பணிப்பாளர் நாயகம் திருமதி. லக்ஷ்மி ஜயவிக்கிரம ஜனாதிபதியினதும் பாதுகாப்புச் செயலாளரினதும் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்ததே இந்த இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டன என ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 56 அதிகாரிகளையும் இடமாற்றம் செய்ய பொலிஸ் மா அதிபர் தீர்மானம் எடுத்த போதிலும், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை சம்பந்தமான இரகசிய அறிக்கைகள் பெறப்படவில்லை.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கே உண்டெனவும், அதில் தலையிட பொலிஸ் மா அதிபருக்கு அதிகாரம் இல்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் இரண்டு பற்றிய விசாரணைகள் ஏற்கனவே ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி இந்த அதிரடி இடமாற்றங்கள் மூலம் அந்த விசாரணைக்கு பங்கம் ஏற்படலாம் என சுட்டிக்காட்டப்படுகிறது.

அதேசமயம், ஐந்து வருடம் சேவையாற்றிய 56 உத்தியோகத்தர்கள் மட்டுமே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும், அதே காலப்பகுதியை பூர்த்தி செய்துள்ள மேலும் 13 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

## அடுப்பு தீப்பற்றியதில் தாய் உயிரிழப்பு

மண்ணெண்ணெய் அடுப்பை பற்ற வைக்க எத்தனித்த 25 வயதுப் பெண்ணொருவர் அடுப்பு எதிர்பாராத விதமாக புரண்டதால் தீப்பற்றி பெண்ணொருவர் மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் கந்தளாய் பேராறு கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயே மரணமானார்.

மேசை மீதிருந்த அடுப்பு புரண்டபோது விசிறிய மண்ணெண்ணெய் ஆடையில் பற்றித் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கந்தளாய்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (சி)

## ஓட்டோக்களில் மாணவரை ஏற்ற தடை வரும்

கொழும்பு, ஜன.24

மாணவர்களை ஓட்டோக்களில் பாடசாலைக்கு ஏற்றிச் செல்வது எதிர்காலத்தில் தடை செய்யப்படும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க கூறியவை வருமாறு:-

பாடசாலை மாணவர்களின் பயணம் தொடர்பான பாதுகாப்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம். அந்த வகையில் அளவுக்கு அதிகமாக பஸ்களில் மாணவர்களை ஏற்றிச் செல்வது தடை செய்யப்படும்.

மாணவர்களை அளவுக்கு அதிகமாக பஸ்கள் மற்றும் வாகனங்களில் ஏற்றிச்செல்வதன் மூலம் மாணவர்கள் பல ஆபத்துகளை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த காலங்களில் உரிய பாதுகாப்பில்லாத பஸ் மற்றும் வான்களில் ஏற்றிச் செல்லப்பட்ட மாணவர்கள் விபத்துகளை எதிர்கொண்டமை எமக்கு நன்கு தெரியும்.

அதேபோல், மாணவர்களின் பயணத்துக்கு ஓட்டோக்களும் உகந்ததல்ல. ஆகவே, ஓட்டோக்களில் மாணவர்களை ஏற்றிச்செல்வதும் பஸ்கள் மற்றும் வான்கள் ஆகியவற்றில் அளவுக்கு அதிகமான மாணவர்களை ஏற்றிச் செல்வதும் எதிர்காலத்தில் தடைசெய்யப்படும் - என்றார். (சி)

### ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்புடனான பேச்சு தோல்வி

## ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட மலையக ம. முன்னணி முடிவு

கொழும்பு, ஜன. 24

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் மலையக மக்கள் முன்னணிக்குமிடையில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக நேற்று நடைபெற்ற பேச்சு தோல்வியடைந்துவிட்டது. மலையகமக்கள்முன்னணி ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடப்போவதாக அதன் அரசியல் பிரிவுத் தலைவர் வி.எஸ். இராதாகிருஷ்ணன் நேற்று மாலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நுவரெலிய மாவட்ட எம்.பி. ஜெ. ஸ்ரீரங்காவுடன் இணைந்து பிரஜைகள் முன்னணியின் 'பஸ்' சின்னத்தில் போட்டியிடவேண்டிய தேவை மலையக மக்கள் முன்னணிக்கு இல்லை. அவர் வேண்டுமானால் எம்முடன் இணைந்து எமது சின்னத்தில் போட்டியிடட்டும் என 'உதயன்' எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது அவர் காட்டமாகத் தெரிவித்தார்.

நுவரெலிய பிரதேச சபையில் மலையக மக்கள் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஏழு உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால், ஐ.ம.சு. கூட்டமைப்பு நுவரெலிய பிரதேச சபைக்கு மலையக மக்கள் முன்னணிக்கு மூன்று இடங்களை மாத்திரமே தர முன்வந்தது. அதேபோல் அம்பகமுவ பிரதேச சபை உட்பட ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கும் மலையகமக்கள்முன்னணிக்கு மிகக் குறைந்த இடங்களையே வழங்க முன்வந்தது. இதன் காரணமாகவே பேச்சுகள் முறிந்தன.

ஐ.ம.சு. முன்னணி நேற்று அலரி மாளிகையில் தங்களது பங்காளிக் கட்சிகளுடன் தேர்தல்களில் இட ஒதுக்கீடு தொடர்பாக பேச்சு நடத்தியது. நேற்றுக்காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகிய இப்பேச்சுகள் மாலை 5.30 மணி வரை நீடித்தன. (சி)

எமது நிறுவனத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT, HDIT, DIT பட்டம் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் --Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும். MCS
BIT
கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT, DIT ,HDIT பெறும் எமது நிறுவன மாணவர்கள்



BIT : P.Kobikrishna, J.Satheeshan, R.Naresh HDIT : A.Thirumagal
DIT : T.Subaharan,Mary Nithanjali, S.Sumathy, V.Vanaja, S.Priyengah,S.Logeswary,N.Nalayini,A.Abitha

BIT? கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
☞A/L 2010 தோற்றியோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
☞A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
☞1ம் ஆண்டின் முடிவில் DIT ம் , 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
☞கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் பயில முடியும்.
☞முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
☞பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 75,000 ரூபா மட்டுமே.

MCS? ☞ஐநா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
☞BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
☞BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
☞ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு

BIT @ MCS?
* ICDL (International Computer Driving License)
* OCJP (Oracle Certified Java Programmer)
* MCSE (Microsoft Certified Systems Engineer)
* BCS (British Computer Society)
CCNA (Cisco Certified Network Associate)

100% *OFF

SMS your name & course to 0772 395 895

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764
பதிவுகள் 31.01.2011க்கு முன்னர்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.ந.ஸ்ரீமுருகதாஸ் காந்தன்

எமது பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் ஸ்ரீமுருகதாஸ் காந்தன் அவர்கள் யாழ்.வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

வெள்ளிவிழா வாழ்த்துக்கள்
24.01.2011



அருட் சகோதரி அன்ரனீற்றா மாற்கு

நன் நாளாம் இப்பொன்நாளிலே
துறவற வாழ்விலும் கல்விப் பணியிலும்
வெள்ளி விழாக்காணும் எம் அதிபரே!
சேவையால் உயர்ந்த அருட் சகோதரியே!
தங்களின் பணியின் பயனாய் எம் பாடசாலை
பெரும் பேறு பெற்று உயர்ந்துள்ளது.
தங்கள் இறைபணியும், சேவையும் இனிதே
தொடர்ந்து கிடைத்திட
இறையாசி வேண்டி வாழ்க வாழ்க வென
வாழ்த்தி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/புனித பற்றிமா றோ.க. பாடசாலை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்களின் நிலையான அமைதிக்கு ஆக்கபூர்வமான செயற்பாடாக இருக்கட்டும்

குடாநாட்டில் சமீபகாலமாகத் திடீரென ஒரு வியாதிபோல் பரவிப் பொதுமக்களை திகிலுக்குள் ஆழ்த்திவிட்டிருந்த குற்றச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி அமைதியும் சுமுகமும் ஏற்படுத்தும் முயற்சியில் பொதுப் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரிகள் தீவிர செயற்பாடுகளில் இறங்கத் தீர்மானித்திருப்பது ஆறுதல் அளிப்பதாகும்.

அச்சத்திலும் அங்கலாய்ப்பிலும் நாள்களைக் கடத்திவந்த இப்பிரதேசத்திலுள்ள மக்கள் குறிப்பாகப் பெண்களை அதிகமாகக் கொண்ட குடும்பங்களுக்கு அதிகாரிகளின் இந்த நடவடிக்கை ஓரளவு நிம்மதிப் பெருமூச்சை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அந்த வகையில் இந்தப் பத்திகளில் நாம் சுட்டிக்காட்டிவந்துள்ள விடயம் கவனத்தில் எடுக்கப் பட்டிருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் இவை நீடித்த பலனைத் தரும்போதுதான் - அதாவது பொதுமக்கள் அச்சமின்றி, அங்கலாய்ப்பின்றி வாழும் நிலைமை நிலை பெற்றால்தான் திருப்தியளிப்பதாய் இருக்கும்.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் குடாநாட்டில் சமீபகாலமாக இடம் பெற்றுவந்த அராஜக நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இந்த மாநாட்டில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள், பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள், முதலியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட வடபிராந்தியப் பதில் பொலிஸ் மா அதிபர் சுசில் பெரேரா மற்றும் யாழ். படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் சில பல உறுதிமொழிகளை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ள சம்பவங்களின் பின்னணி குறித்து விஷேட பொலிஸ் புலனாய்வுக்குழுவும் சிவில் உடையில் செல்லும் பொலிஸ் குழுவும் விசாரித்துத் தகவல் சேகரித்துவருவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் கூறியிருக்கிறார். அதேசமயம் இராணுவம் பொலிஸ் தவிர்ந்த வேறு எவரும் ஆயுதங்கள் வைத்திருக்காத வகையில் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக இராணுப் பிரிவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்து ஒருநாள் தங்கியிருந்த ஜனாதிபதியும் இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டியதாக மேஜர் ஜெனரல் தெரிவித்துள்ளார். இங்கு அமைதி நிலையைத் தோற்றுவிக்கும்படி பொலிஸ் மா அதிபர் விஷேட பணிப்புரை விடுத்திருப்பதாக அக் கூட்டத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

சில பகுதிகளில் பொலிஸார் கிராமங்களுக்குச் சென்று விசாரணைகளில் ஈடுபடுகிறார்கள் என்று பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ள அதேவேளை சோதனை நடவடிக்கைகளிலும் இரவு ரோந்து நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் ஈடுபடுவார்கள் என்று படைகளின் கட்டளைதளபதி தெரிவித்துள்ளார்.

இவ்விதமான பொலிஸ், இராணுவ நடவடிக்கைகளுக்கு அவர்கள் பொதுமக்களின் ஒத்துழைப்பை கோரியிருப்பது நியாயமாகும். பொதுமக்களுக்கான நடவடிக்கையொன்றில் இறங்கும் பாதுகாப்பு தரப்பினருக்கு அவர்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை. இதை மக்கள் மனம் கொள்ளவேண்டும்.

இப்பொழுது போர் எதுவும் நடைபெறவில்லை. பொது மக்கள் போர் நடவடிக்கைகளின்போது இடையில் சிக்கிவிட்டார்கள் என்ற நிலை ஏற்படமாட்டாது. அதனால் ஆயுதப்படையினரைக் கண்டு பொதுமக் கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. அந்தவகையில் படைதரப்பினர் உறுதிதந்துள்ளார்கள்.

மேலும் செயலகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் குடா நாட்டுக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தொடர்ந்து பேசுகையில் குடாநாட்டில் இடம்பெறும் சம்பவங்களில் படையினர் சம்பந்தப் பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எந்தவித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது. அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று உறுதியளித்திருக்கின்றார். அதுமட்டு மல்ல படையினர் எவராவது மக்களுக்கு எதிராகச் செயல்படுவார்களா னால் தமக்கு எந்நேரமும் நேரடியாகத் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார் - அவர்.

இந்த வித உறுதிமொழிகள் இங்குள்ள உயர்மட்டத்தில் இருந்து வருவதாலும் குடாநாட்டில் அமைதி திரும்ப வேண்டும் என்பதில் அரசின் உயர் மட்டத்தில் அக்கறை ஏற்பட்டிருப்பதாலும் நிச்சயமாக மீண்டும் இங்கு அமைதிச் சூழ்நிலை ஏற்படும் என்று நாம் நம்ப வேண்டும்.

இத்தனை காலமாகக் கொலை, கொள்ளைகளில் சர்வ சாதாரணமாக ஈடுபட்டுவந்த சக்திகள், அல்லது குழுக்கள் பாதுகாப்புத்தரப்பின் இந் தத் திடீர் நடவடிக்கைகளால் நிச்சயம் பதுங்கிவிட முயல்வார்கள் - நல்லபிள்ளைகள் போல் நடந்து கொள்ளவும் முயல்வார்கள். ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கும் போது மீண்டும் கைவரிசையைக் காட்டமுற்படுவார்கள்.

அதற்கு இடம் தராமல் நடவடிக்கைகளை எடுக்கப்படவேண்டும். பதுங்கிவிட்டவர்களைக்கண்டு பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான் நிலைமை கட்டுப்பாட்டில் வரும். அதற்கு பொதுமக்கள் மத்தியில் விழிப்பும் ஒத்துழைப்பும் இருப்பது அவசியம்.

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை 20 ஆயிரம் பேர் கண்டு களித்தனர்

யாழ்ப்பாணம், ஜன.24

கடந்த மூன்று தினங்களாக இடம் பெற்று நேற்றுடன் நிறைவுபெற்ற யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை இருபதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பார்வையிட்டுச் சென்றுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வியாபாரத்துக்கான உங்கள் நுழைவாயில் எனும் தொனிப்பொருளில் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் இந்தக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை கோலாகலமாகப் பிரதான வீதியில் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக ஆரம்பமாகியது.

இறுதி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை பத்தாயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் திரண்டிருந்தனர்.

இந்தியா, இந்தோனிஸியா நாடுகளின் காட்சியறைகளில் திரண்டிருந்த மக்களை விட தென்னிலங்கைக் காட்சியறைகளில் திரண்ட மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், தொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் என வயது வேறுபாடின்றிப் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இரண்டாம் முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் சிங்கள, முஸ்லீம் மக்கள் புலம்பெயர்ந்தவர்கள், வெளிநாட்டவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் அதிகம் பங்கேற்றிருந்தனர்.

(ஜ-14)

# யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் இதுவரை எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளோ, சுயேச்சைக் குழுக்களோ வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவில்லை என தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன் 'உதயனுக்கு' தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் வேட்பு மனுத்தாக்கல் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது. இருப்பினும் 4நாள்களில் வேட்பு மனுத்தாக்கல்களை எவரும் செய்யவில்லை.

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காகக் ஒரேயோரு சுயேச்சைக் குழு மாத்திரம் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. ஆனாலும் அந்தச் சுயேச்சைக் குழு வேட்புமனுவை இதுவரை தாக்கல் செய்யவில்லை.

பெரும்பாலான கட்சிகள் நமது வேட்பாளர்கள் பெயர்ப் பட்டியலினையே தயாரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஏனெனில் தேர்தலில் போட்டியிடுவதற்கு பெரும்பாலானவர்கள் ஆர்வம் காட்டாமையினால் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இதேவேளை கடந்தமுறை இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஜ-15)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு விசேட லீவு

வவுனியா, ஜன.24

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக சேவைக்கு வருகை தராத அரச உத்தியோகத்தர்களுக்கு விஷேட லீவு வழங்குவதற்கான சுற்றறிக்கை ஒன்றை அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்களுக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது.

அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனவரி மாதத்தில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மண் சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் விளைவாக வதிவிடம் சேதம் அடைந்து, பொதுப் போக்குவரத்தில் தடைகள் ஏற்பட்டதன் விளைவாக அல்லது இடம்பெயர்ந்து வேறோர் வதிவிடத்தில் வசித்ததன் விளைவாகக் கடமைக்கு சமுகமளிக்காத காரணத்தை தமது பகுதிக்குரிய பிரதேச செயலாளர் சான்றுப்படுத்திய, கிராம சேவையாளர் கடிதத்தைப் பெற்று உரிய திணைக்களத்தலைவர்க்கு சமர்பித்து திணைக்களத் தலைவர் பிரதேச செயலர் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தரின் கடித்ததின் உண்மையைத் தன்மையை கருத்திற்கொண்டு உண்மையில் அவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து திருப்தி படுமிடத்து அந்த நாள்களுக்கு மட்டும் விசேட லீவை அங்கீகரிக்க முடியும். லீவுப்பதிவேட்டில் இந்த விவரங்கள் காட்டப்படவேண்டும் - என்றுள்ளது.

(ஜ-501)

# பிரி.மகாராணியின் அம்பாந்தோட்டை விஜயம்: அமைச்சர் பீரிஸ் கருத்துக்கு எதிர்ப்பும் மறுப்பும்

கொழும்பு, ஜன.24

2013ஆம் ஆண்டு கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டுக்கு வருகை தரும்போது பிரிட்டிஷ் இரண்டாவது எலிசபெத் மகாராணி அம்பாதோட்டைக்கும் விஜயம் செய்வார் என்று இலங்கை வெளி உறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருப்பதை கொமன்வெல்த் செயலகம் மறுத்திருப்பதுடன் கண்டித்தும் இருக்கிறது.

இந்தத் தகவல் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்ருப்பதாவது:

கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் மாநாடு 2013ஆம் ஆண்டு இலங்கையில் நடக்கும்போது அதற்கு தலைமை வகிப்பதற்காக இலங்கைக்கு வரவிருக்கும் பிரிட்டிஷ் அரசி இரண்டாவது எலிசபெத் அம்பாந்தோட்டைக்கும் விஜயம் செய்வார் என்று தெரிவிக்கட்டிருப்பதை அந்த நாடு மறுத்துள்ளது.

தங்காலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டமொன்றில் பேசுகையில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கொமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டில் 53 உலகத் தலைவர்கள் கலந்து கொள்வார்கள். அப்போது இலங்கை வரும் எலிசபெத் மகாராணி அம்பாந்தோட்டைக்கும் விஜயம் செய்வார் என்று தெரிவித்திருந்தார்.

இக்கருத்து வெளியிடப்பட்டதின் பின்னர் லண்டனிலுள்ள கொமன்வெல்த் செயலகத்திடமிருந்து கோபத்துடனான பிரதிபலிப்பு வெளியாகியது. லண்டனிலுள்ள இலங்கை பதில் ஸ்தானிகர் பி.எம்.அம்ஸா காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டு, செயலகத்தின் அரசியல் பணிப்பாளர் அமிர்தாப் பெனார்ஜியினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார். செயலகத்தின் கடுமையான விசனத்தை அவர் வெளியிட்டதாகத் தெரிய வருகின்றது.

அமைச்சரின் கருத்துகள் உயர்ந்த பட்சம் அவசியமற்றவை. அப்படியான விடயம் எதுவும் பக்கிம்ஹாம் மாளிகையிலிருந்து வெளியிடப்படவில்லை என்று கூறிய அவர் தமது ஆச்சரியத்தையும் வெளியிட்டார் என்று கூறப்படுகின்றது.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் கல்வி நிலை வீழ்ச்சி

வலி. வடக்கு, ஜன. 24

வடமாகாணத்தின் கல்விச் செயற்பாடுகள் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படு கின்றது. இந்தநிலை வெகு விரைவில் மாற்றம்பெற வேண் டும். அந்த நிலையில் மாற் றத்தைக் கொண்டு வருவது டன் மீண்டும் யாழ்ப்பாண மும் வடமாகாணமும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். கல்வியில் முதலாம் இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண ஆளுநரின் செயலா ளர் எஸ்.இரங்கராஜன்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்:

கடந்த நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் கல்வி யில் சிறந்த நிலையில் காணப் பட்டதுடன் இலங்கை யில் முதலாம் இடத்தையும் வகித்தி

**வடமாகாணத்தின் கல்வி நிலை மீண்டும் முதலி டத்தைப் பெற வேண்டும் என்று கூறினார் வட மாகாண ஆளுநரின் செயலாளர்.**

ருந்தது. எனினும் அந்தக் காலத்தில் கல்வியைப் பொறுத்த வரையில் பெரிய குறைபாடு கள் காணப்பட்டன. ஆனால் அவ்வாறு குறைபாடுகள் இருந் தாலும் முதல் நிலையிலேயே யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை விளங்கியது. ஆனால் தற்போது அத்தகைய நிலைமை இல்லை. பௌதிகவள ரீதியாக மிகவும் உயர்ந்த இடத்தில் வடமாகாணக் கல் வித்திணைக்களம் சிறந்து விளங்குவதுடன் வடமாகாணப் பாடசாலைகளும் காணப்படு கின்றன. கல்வி என்பது வெறு மனே பொதுப்பரீட்சைகளில் நான்கு 'ஏ' அல்லது மூன்று 'ஏ' பெறுவது அல்ல. அனைவரும் கல்வியியலாளர்களாக மாற வேண்டும் எனவும் கூறினார்.

யாழ்ப்பாணம், மருதனார் மடத்தில் வட மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகங்கள் அண்மையில் திறந்து வைக் கப் பட்டன. இந்த நிகழ்வில் விருந் தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்மேற் கண்டவாறு உரையாற்றினார்.

கல்வியமைச்சின் அலுவல கங்கள் இடமாற்றம் செய்யப் பட்டதைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் ஊழியர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் இடம்பெற் றது. வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சின் செய லாளர் இ.இளங்கோவன் ஆளு நரின் செயலாளர் இரங்கராஜன் வட மாகாணப் பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி உட்பட மற்றும் பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். (201-86)

## சிதம்பராமூர்த்தி வீதியை புனரமைக்க கோரிக்கை

காரைநகர், ஜன.24

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடி வீதியைப் புனர மைக்க நடவடிக்கை எடுக்கு மாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச மக்க ளின் குடிதண்ணீர் தேவையின் பெரும் பகுதியைப் பூர்த்தி செய்யும் நன்னீர் கிணறு காரை நகரிலுள்ள மல்லிகைப் பிரதே சத்தில் அமைந்துள்ளது.

மேற்படி பிரதேச மக்களில் அதிகமானோர் அந்தக் கிணற் றில் நீர் அள்ளுவதற்காகத் தின மும் இந்த வீதியூடாகவே சென்று வருகின்றனர்.

அண்மையில் தொடர்ந்து பெய்த மழையால் பெரும் சேதத்துக்குள்ளாகி மழைநீர் தேங்கி நிற்கும் மேற்படி வீதி யால் செல்லும் மக்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே தமது சிரமங்களை நீக்கும் முகமாக இந்த வீதியை புனரமைக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக் குமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-250)

## மிருசுவில் சந்தையை மீள இயக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி, ஜன.23

தென்மராட்சிப் பகுதியில் ஏ-9 கண்டி வீதியை அண்டிய உசன் சந்தியில் அமைந்துள்ள மிருசுவில் பொதுச்சந்தையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அந் தப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிருசுவில், தவசிக்குளம், கெற்பேலி, பலாலி, விடத்தற் பளை, உசன், பழைய வாய்க்கால் கரம்பன் ஆகிய பகுதி மக்கள் உற்பத்தி செய்யும்பொருள் களும் பலாலி, கச்சாய், கிளாலி பகுதி கடலோரிகளில் பிடிக்கப் படும் கடல் உணவுகளும் இந்தச் சந்தையில் விற்பனை க்குக் கொண்டுவரப்பட்டன. அத்துடன் இறைச்சிக்கடைக ளும் இயங்கின.

1996 ஆம் ஆண்டு தொடக் கம் இந்த சந்தை அமைந்துள்ள கட்டடங்கள் படையினரின் களஞ் சியப் பிரிவாக இருந்து அண் மையில் படையினர் வெளி யேறி உள்ளதால் வெறுமை யாக உள்ளது.

இந்தச் சந்தை இயங்காத தால் அந்தப் பகுதி மக்கள் கொடிகாமம் சந்தைக்குத் தமது உற்பத்திப் பொருள்களை விற் பதற்கும் பொருள்களைக் கொள் வனவு செய்வதற்கும் செல்ல வேண்டியுள்ளது.

இந்தச் சந்தையை மீண் டும் இயக்குவதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (த-207)

### மீன்கள் அகப்படுமா?...



நல்லமுயற்சி: செம்மணி கடல் நீரேரியில் இளைஞர்கள் ஆர் வத்துடன் மீன் பிடித்துக்கொண்டிருக்கின்றனர்.

## செம்மணிக் கடல் நீரேரியில் மீன்பிடிப்போர் அதிகரிப்பு

கைதடி, ஜன.24.

நாவற்குழி, செம்மணிக் கடல் நீரேரியில் அண்மைக் காலமாக வலை வீசிப்பிடிக் கப்படும் மீன்கள் அங்கு வைத்து விற்பனை செய்யப் படுவதால் பெருமளவான மக் கள் அதனை வாங்கிச் செல் வதை அவதானிக்க முடிகின் றது.

மேற்படி நீரேரியில் அண் மையில் பெய்த கடும் மழை யைத் தொடர்ந்து பெருமளவு மீன்கள் வலை வீசிப்பிடிக்கப் படுவதால் அந்தமீன்களை அங்குவரும் பொதுமக்கள் மிகக்குறைவான விலையில் வாங்கிச் செல்கின்றனர். இத னால் தாம் சாப்பிடக்கூட நேரம் இல்லாது தொடர்ந்து மீன் களைப் பிடித்து பெரும் இலா பம் அடைவதாக அங்கு மீன் பிடிக்கும் இளைஞர் ஒருவர் தெரிவித்ததார்.

இதேவேளை இங்கு சிறு முரல், பாலை, கௌிறு உள்ளிட்ட பலவகை மீன்கள் வலைகளில் அகப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (201-288)

## மின்வெட்டால் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.24

நல்லூர்ப் பகுதியில் தினமும் பிற்பகல் 5.30 மணிக்கு மின் சார விநியோகம் துண்டிக்கப்ப டுவதாகப் பொதுமக்கள் கூறு கின்றனர்.

பிற்பகல் 5.30 மணிக்கு ஸ்தம்பிதமடையும் மின்விநி யோகம் பிற்பகல் 6.30 மணி வரை நீடித்திருக்கின்றது.

தினமும் இவ்வாறு மின் விநியோகம் தடைப்படுவதால் இந்தப் பகுதியில் ஒரு மணி நேர மின்வெட்டு அமுல்படுத் தப்படுகிறா எனப் புரியாத நிலை யில் மக்கள் தடுமாறுகின்றனர்.

இதேவேளை மின்சார விநி யோகம் சில சமயங்களில் இர ண்டு மணித்தியாலங்களுக்கு அதிகமாகக் தடைப்படுகின்றது. இதனால் இரவு வேளையில் வீதி களில் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் ஏற்படுவதாகவும் நல் லூர் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் மின் விநியோகம் தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக் கைகளும் பாதிக்கப்படுவதாக வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (201-7)

## சைக்கிள் திருடிய சிறுவன் பொலிஸாரிடம்

சுன்னாகம் புதிய சந்தைப் பகுதியில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட சிறுவன் ஒருவன் பொதுமக்களால் பிடிக்கப் பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நண் பகல் சுன்னாகம் பகுதியில் உள்ள கடை ஒன்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட சைக் கிளைத் திருடிச் சென்ற வேளை யில் பொது மக்கள் சந்தேகம் கொண்டு அந்தச் சிறுவனைப் பிடித்து விசாரித்துள்ளார்கள்.

விசாரித்தபோது குறிப்பிட்ட சிறுவன் சைக்கிளைத் திருடிச் செல்லும் உண்மை தெரியவந் துள்ளது.

இதனைத் தொடர்ந்து சிறு வன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (201-86)

# மைதானத்துக்கு விமோசனம் கிடைக்குமா?

கைதடி, ஜன.24

யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானம் பாட சாலைச் சமூகத்தினால் உரிய முறையில் பேணப்பட்டு வரு வதில்லை எனப் பலராலும் விச னம் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பாடசாலையின் மைதானம் கல்லூரியின் கிழக் குப் பக்கமாக உள்ள போதிலும் மைதானத்தின் சுற்றுமதில்கள் உயரமாக இல்லாததாலும் வாச லுக்கு ''கேற்'' போடாத கார ணத்தினாலும் வெளியாள்கள் மைதானத்திற்கு நேர காலம் பாராது வந்து அதனைப் பயன் படுத்துகின்றனர்.

இதனால் பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் மாலை வேளைகளில் மைதா னத்தை தமது செயற்பாட்டிற்கு பயன்படுத்த முடியாது திரும்பு வதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை மைதான வளா கத்தில் பாடாசலை நேரத்திலும் அயலில் உள்ளோரின் கால் நடைகள் மேய்ச்சலில் ஈடுபடு கின்றன. பாடசாலை தவிர்ந்த நேரத்தில் அந்தப் பகுதியில் ஒன்றுகூடும் சில கும்பல்கள் மது அருந்திவிட்டு வெற்றுப் போத்தல்களை மைதானத் திலும் வெளியிலும் வீசுவத தையும் காணக்கூடிய தாகவுள் ளது.

எனவே, இந்த விடயத்தில் பாடசாலை நிர்வாக மும் கல்வித் திணைக் களமும் உடனடியாக நடவடிக்கை எடுத்து மைதானச் சுற்றும திலை உயர்த்தி அமைக்க வேண்டும். அத்துடன் வெளியாள் கள் மைதானத்தைப் பயன்படுத்தக் கட்டுப் பாடுகள் விதிக்க வேண் டும் எனவும் கல்லூரி யின் வளர்ச்சியில் அக் கறை கொண்டோரால் வேண்டு கோள் விடுக் கப்பட்டுள்ளது. (201-285)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்தக் கோரிக்கை

கொடிகாமம், ஜன.24

ஏ-9 கண்டி வீதியின் கொடிகாமம் சந்தியில் இருந்து கொடிகாமம் புதிய பஸ் நிலையம் வரையான பிரதான வீதியில் பயணிக்கும் வாகனங்கள் அதிவேகத்துடன் செல்கின்றன.

இதனால் பல விபத்துக்கள் ஏற்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுத்து மக்களுக்கு உதவுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொடிகாமம் புதிய பஸ் நிலையப் பகுதியில் தனியார் சிற்றூர்திகள் அதிகமாக தரித்து நிற்கின்றன. இந்த பஸ் நிலையத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கு பயணிப்பதற்கு அதிகமானோர் நாளாந்தம் கூடி நிற்கின்றனர்.

வாகனங்கள் தரித்து நின்று தமது சேவையை நடத்துவதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. இதன் காரணமாக பஸ் நிலையத்துக்கு எதிர்ப் பக்கதிலும் வாகனங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றுகின்றன. இதனால் பயணிகள் இருபக்கமும் மாறி மாறி பிரதான பாதையைக் கடக்கும் நிலை ஏற்படுகின்றது. இந்த நிலையில் பிரதான பாதையில் பயணிக்கும் பலதரப்பட்ட வாகனங்கள் அதிவேகத்தில் பயணிக்கின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை ஏற்படுவதாக பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவாரம் இவ்வாறு வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி ஒருவர் இப்பாதையால் அதிவேகத்துடன் பயணித்த ஹயஸ் வாகனம் ஒன்றில் மோதி சிறுகாயங்களுடன் உயிர் பிழைத்துள்ளார்.எனவே பொலிஸார் இவ் விடயத்தில் உரிய நடவடிக்கையை எடுத்துவாகனங்கள் வேகக்கட்டுப்பா டுடன் பயணிக்க வழிசெய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-122)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகம் இன்று



வலி.வடக்கு, ஜன.24

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் இன்று முற்பகல் 10.09 மணி தொடக்கம் 11.03 மணிவரை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 5 மணிக்கு இடம்பெறும் யாக பூசையைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, திருமுறைப் பாராயணம், கிரகப்பிரதி யாத்திர தானம், அந்தர்பகிர் போன்றன இடம்பெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு கும்பங்கள் யாகசாலையில் இருந்து புறப்பட்டு மு.ப. 10.30 மணிக்கு தூபிகளுக்கு கும்பாபிஷேகமும் 10.53 மணி தொடக்கம் மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகமும் தொடர்ந்து தசதர்சனம் மஹா அபிஷேகம், விசேட பூசை, தீபாராதனை, திருமுறை பாராயணம்,யாகசாலையில் விசர் ஜனம், எஜமான் அபிஷேகம், சம்பாவனைகள், சிவாச்சாரியார்களுக்கு கௌரவிப்பு, மஹா சீர் வாதம் என்பன இடம்பெறும்

கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் வெளி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத்தொடர்ந்து 45 நாள்கள் தினமும் மு.ப. 10 மணிக்குமண்டலாபிசேகம் இடம்பெறவுள்ளது.

(சிறப்பு மலர் - VII, VIII பக்கங்களில்)

(201-86-313)

# கருகம்பனை மக்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.24

கிராமத்தின் இழப்பீடுகளை மதிப்பீடு செய்யவுள்ளதால் கருகம்பனைக் கிராமக் குடும்பங்களின் தலைவர்களை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கருகம்பனை வாசிக சாலையில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கருகம்பனை மீள்குடியமர்வு அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் தெல்லிப் பழைப் பிரதேச செயலர், செயலக அதிகாரிகள் கலந்து கொண்டு இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதுடன் மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறியவுள்ளனர். (ஒ-10)

# கட்டாக்காலிகளால் நெற்பயிர்கள் சேதம்

கொடிகாமம், ஜன.24

வரணிப் பகுதியில் இடைக்குறிச்சி மேற்கு, தம்பளை வயல் வெளியில் கட்டாக்காலி கால்நடைகள் நெற்பயிர்களுக்கு சேதம் விளைவித்து வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கட்டாக்காலி மாடுகளின் கூட்டம் தினமும் நெற்பயிர்களை மேய்ந்து சேதம் விளைவிக்கின்றன.

இந்தமாடுகளின் உரிமையாளர்களை இனங்காண முடியாத நிலை உள்ளது. குறிப்பாக இவை இரவு வேளைகளில் வயல்களில் சேதம் விளைவிப்பதுடன்பகலில் இடைக்குறிச்சி நியாப் மண்டபத்தின் அருகில் தமது பொழுதைக் கழித்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

எனவே கமக்கார அமைப்புக்கள் இவற்றைக் கட்டுப்படுத்தத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-122)

# மாணவர்களுக்கு இறுவட்டுக்கள்

யாழ்ப்பாணம், ஜன.24

மடிக்கணினிகளைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர்களுக்கு இறுவட்டுகள் வழங்கப் படவுள்ளன.

இறுவட்டுக்களை மேலதிக மாகாணக் கல்விப்பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# காரைநகர் பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டங்கள்

## சபைச் செயலாளர் தகவல்

காரைநகர், ஜன. 24

காரைநகர் பிரதேச சபையால் கடந்த வருடம் சபை நிதியில் இருந்து பல லட்சம் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் காரைநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதேச சபைச் செயலாளர் சி. லோகநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மேலும் கூறுகையில்:-

காரைநகர் கசூரினாக் கடற்கரையில் 5 லட்சம் ரூபா செலவில் இளைப்பாற்று மண்டபம் மூன்று லட்சம் ரூபா செலவில் ஆண், பெண் ஆகியோருக்கான உடை மாற்றுமிடம் என்பன அமைக்கப்பட்டுள்ளதுடன்-

5 லட்சம் ரூபா செலவில் அல்லின் வீதிக்குத் தார் ஊற்றும் பணி மேற்கொள்வதுடன் 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான குடிதண்ணீர் பவுஸர் ஒன்றும் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 18 மில்லியன் ரூபா செலவில் சிவகாமி அம்மன் கோயிலடி வீதி, பொன்னாவளை வீதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் 60 வீதமான நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியும் 40 வீதமாக நிதி சபை நிதி மூலமும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கமநெகுமத் திட்டத்தின்கீழ் 7 லட்சம் ரூபா செலவில் மருதபுரம் வீதியும், 15 லட்சம் ரூபா செலவில் மொந்திபுலம் வீதியும், புனரமைக்கப் பட்டுள்ளதுடன்-

பட்டியெல்லை பேரம்பலம் முன்பள்ளியில் இரண்டு லட்சம் ரூபா செலவில் மலசல கூடமும் 5 லட்சம் ரூபா செலவில் கசூரினா கடற்கரையில் உணவகம் மற்றும் 9லட்சம் ரூபா செலவில் விடுதி ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 6 லட்சம் ரூபா செலவில் வேதரடைப்பு சனசமூக நிலையமும் 5லட்சம் ரூபா செலவில் பேரம்பலம் முன்பள்ளி கட்டடமும் புனரமைக்கப்பட்டுள்ளன. (201-250)

# தார்க் கலவைகளால் வீதிகள் புனரமைப்பு

வலி.வடக்கு, ஜன.24

யாழ்.குடாநாட்டில் உள்ள சேதமடைந்த வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புனரமைப்புப் பணிகள் பகல் வேளையில் மட்டுமல்லாது இரவு வேளையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மாதங்களில் தொடர்ச்சியாகப் பெய்த மழையை அடுத்து குடாநாட்டில் உள்ள முக்கிய பிரதான வீதிகள் உட்பட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகளும் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்வாறு சேதமடைந்து காணப்படும் முக்கிய வீதிகளான கே.கே.எஸ்.வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி போன்ற வீதிகள் தார்க் கலவைகள் கொண்டு செப்பனிடப்பட்டு வருகின்றன.

இந்த வீதிகளின் புனரமைப்புப் பணிகள் நேரகாலம் பாராது வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தொழிலாளர்களால் இரவுவேளை வரை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி வீதிப்புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளதால் [illegible]ரளவுக்குச் சிரமமின்றி பயணிக்க முடிவதாகப் பொது மக்கள் கூறுகின்றனர். (201-86-26)

# மாட்டுக்கன்றைத் திருடியோர் பொலிஸாரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜன.24

மாட்டுக்கன்று திருடிச் சென்ற இருவர் அதனைப் பிரதான வீதி வழியாகக் கொண்டு சென்ற வேளை இராணுவத்தினரிடம் வசமாகப் மாட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 6.30 மணியளவில் கணக்கர் சந்திப்பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கள்வர் இருவரும் திருடிய மாட்டுக்கன்றைப் பிரதான வீதி வழியாகத் தமது இருப்பிடத்தை நோக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தனர்.

அவ்வாறு சென்றுகொண்டி[illegible] பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் திருடர்கள் இருவரையும் வழிமறித்து விசாரணை செய்த போது இருவரும் பதில் கூறாது தயக்கமடைந்து நின்றனர்.

தொடர்ந்து தாம் கொண்டு வந்த மாடு திருடப்பட்ட மாடு எனப் படையினரிடம் ஒப்புக் கொண்டனர்.

வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர். அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மாட்டுத் திருடர்கள் இருவரையும் கைது செய்து அழைத் துச் சென்றனர். (201-23)

# பண்ணைப் பாலம் சேதம்

யாழ்ப்பாணம், ஜன.24

மண்டைதீவுச் சந்தியில் இருந்து அல்லைப்பிட்டி வரையான பண்ணைப் பாலம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்துக்களை அடுத்து வீதிகளில் பெரிய குழிகள் ஏற்பட்டு வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். - மண்டைதீவு வரையான வீதி ஏற்கனவே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் வீதித்திருத்த வேலைகள் உரிய முறையில் இடம்பெறாததால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துக்கள் மேற்கொள்வது சிரமமாக உள்ளது என வாகனச் சாரதிகள், பொதுமக்கள் கூறுகின்றனர். (201-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாங்கண்டி ஆற்றில் மணல் அகழ்வு

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி மருதநகர் கிழக்கு பன்னங்கண்டி ஆற்றில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த ஆற்றில் வரி எதுவும் செலுத்தாமல் மணல் அகழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தச் சட்டவிரோதச் செயல்கள் குறித்துப் பொது மக்கள் தரப்பிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து மணல் அகழ்வதற்கான அனுமதியைப் பெற்ற பின்னர் மணலை அள்ளலாமெனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.


காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் இந்த ஆற்றிலிருந்து பெருமளவு மணல் அகழப்படக் கூடிய நிலை காணப்படுகின்றது. இதில் சட்ட விரோதமாகப் பலர் மணல் அகழ்ந்து செல்வதால் பெருமளவு நிதியிழப்பு ஏற்படுகின்றது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் மணலுக்கான தேவையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிளிநொச்சியில் மீள்குடியமர்ந்த மக்கள் தமக்கு வழங்கப்பட்ட புதிய வீடுகளை அமைப்பதற்கும் பகுதி வீடுகளைச் சீர் செய்வதற்கும் மற்றும் அழிந்தவற்றை புனரமைப்பதற்கும் மணலைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சிலர் அதிக பணத்தைச் செலுத்தி மணலைப் பெறவேண்டிய அவலநிலையில் காணப்படுகின்றனர்.

இதனால் உரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதியைப் பெற்ற பின்னர் இந்த ஆற்றிலிருந்து குறிப்பிட்டளவு மணலை அகழ்ந்து ஏற்றிச் செல்லலாமெனத் தற்போது அறிவிக்கப்பட்டள்ளது. (க-313)

மரணப் பொறி...



வாய் பிளந்த நிலையில்: கிளிநொச்சி றெய்லர் வீதியின் ஆரம்பத்தில் நீர்ப்பாசன வாய்க்காலுக்கு மேலுள்ள பாலம் உடைந்த நிலையில் மரணப் பொறியாகக் காட்சியளிக்கின்றது. (405)

# கல்மடுவிலும் கால்நடைகள் இறப்பு

வட்டக்கச்சி, ஜன.24

அண்மையில் பெய்த கடும் மழை, வெள்ளம் காரணமாக கல்மடுப் பிரதேசத்திலும் நூற்றுக் கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன.

தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான கால்நடைகள் பரிதாபகரமான முறையில் இறந்துள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தநிலையில் கல்மடுப் பிரதேசத்திலும் நூற்றுக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேய்ச்சல் நிலங்கள் யாவும் வெள்ளத்தினால் சூழப்பட்டதால் கால்நடைகள் தமக்கான உணவைப் பெறமுடியாத நிலையில் காணப்பட்டன. அத்துடன் கால்நடைகளை அடைக்கும் பட்டிகளும் வெள்ள நீரால் நிரம்பியிருந்தன. இதனால் கடும் குளிரில் கால்நடைகள் விறைத்த நிலையில் காணப்பட்டன.

இறந்த கால்நடைகள் ஆங்காங்கு சிதறிக் காணப்பட்டதால் துர்நாற்றம் வீசியதோடு தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் தோன்றியுள்ளது. வெள்ளம் காரணமாக இறந்த கால்நடைகளின் உடல்களைப் புதைக்கவோ அல்லது எரிக்கவோ முடியாத நிலையில் கால்நடை உரிமையாளர்கள் உள்ளனர். அத்துடன் தமது கால்நடைகள் இறந்த துக்கத்தில் அவர்கள் புலம்புவதைப் பார்ப்பதற்கு வேதனையாக உள்ளது.

தமது பரிதாபகரமான நிலையை உணர்ந்து உரியவர்கள் கால்நடைகளின் இழப்புக்கான நட்டயீட்டினைத் தமக்கு வழங்க வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-450)

# சேதமடைந்துள்ள புதுமுறிப்புப் பாலம்

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி புதுமுறிப்புப் பாலம் சேதமடைந்து காணப்படுவதால் கனகபுரம் வீதியால் பயணங்களை மேற்கொள்ள முடியாது பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கனகபுரம் வீதி, கிளிநொச்சி நகரம், கந்தபுரம், உருத்திரபுரம் போன்ற பிரதேசங்களை இலகுவாகச் சென்றடையக் கூடிய பிரதான வீதியாகும். புதுமுறிப்புப் பாலம் சேதமடைந்து காணப்படுவதால் சுற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி கனகபுரம் ஊடாக ஏனைய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் அதிக நேரம் விரையமாவதோடு பாதுகாப்பில்லாத நிலையும்தோன்றுகின்றது.

எனவே பொதுமக்களின் நலன் கருதி புதுமுறிப்புப் பாலத்தினைத் திருத்தியமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-313)

**கார் விற்பனைக்கு**

வைத்தியரின் தனிப்பாவனையில் சிறிது காலமே பாவித்த புதிய 2007 Model TOYOTA Passo, Peral White நிறமான KL xxxx தொடரிலக்கமுடைய Full option (A/C, Power Steering, Power Mirror, Power window, Remote Key, Central Locking) கார் உடன் விற்பனைக்கு (Very Economic 15 - 20 k.m/L.)

தொடர்பு: 0779611993, 0212263682 (9575072)

**உடனடி வேலை வாய்ப்பு**

எமது ஸ்தாபனத்திற்கு முன் அனுபவம் உள்ள பணியாளர்கள் உடனடியாகத் தேவையாகவுள்ளனர்.

1. Accounts Clerk
2. Counter Cashier (பெண்கள்)
3. Store Keeper
4. Daytime Security Guard

சுயவிவரக் கோவையினை 01.02.2011 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

VARNAAS ENTERPRISE
# 484, Hospital Road, Jaffna. (109226)

**TVகள் மலிவு விற்பனை**

100 இற்கும் மேற்பட்ட Sony Wega Flat TV, TG 21-16,500/=, 21Q-13,000/=, AR25-22,000/=, 29 - 25,000/=, குளிர்சாதனப் பெட்டிகள், DTS அம்பிளிபயர்கள், JBL Box வகைகள், RX றேடியோக்கள், DVD, VCR என்பன மிக மலிவு விலையில் விற்கப்படும். தொடர்பு: 0771393670, இ.மகேஸ்வரன் (அப்பனக் கொம்பனி), சின்னப்புளியடி (ஆரம்ப பாடசாலை அருகில்), கே.கே.எஸ். வீதி, இணுவில்.

**மணமகள் தேவை**

இந்து கௌரவ 80 ஆம் ஆண்டில் சதய நட்சத்திரத்தில் 8 இல் செவ்வாய் உடைய, அரச பணியில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்குப் படித்த குடும்பப் பாங்கான, அழகான, நற்குணம் உடைய யாழில் வதியும் மணமகள் தேவை.

தொடர்பு: 0779851609

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.01.21

නිල ප්‍රතිඵල
දිනුම් වාරය 2347

ජයග්‍රාහී අක්ෂරය A ජයග්‍රාහී අංක 0 8 8 2 2 2

අග සිට මුලට තෑග රටාව

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| සුපිරි තෑගය | A | 0 | 8 | 8 | 2 | 2 | 2 | රු. 13,838,930/= | තෑග - |
| 1 වැනි තෑගය | | 0 | 8 | 8 | 2 | 2 | 2 | රු. 2,000,000/= | තෑග 01 |
| 2 වැනි තෑගය | | | 8 | 8 | 2 | 2 | 2 | රු. 100,000/= | තෑග 11 |
| 3 වැනි තෑගය | | | | 8 | 2 | 2 | 2 | රු. 10,000/= | තෑග 138 |
| 4 වැනි තෑගය | | | | | 2 | 2 | 2 | රු. 1,000/= | තෑග 1336 |
| 5 වැනි තෑගය | | | | | | 2 | 2 | රු. 100/= | තෑග 13517 |
| 6 වැනි තෑගය | | | | | | | 2 | රු. 20/= | තෑග 134390 |

මුල සිට අගට තෑග රටාව

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 වැනි තෑගය | | 0 | 8 | 8 | 2 | 2 | | රු. 10,000/= | තෑග 15 |
| 8 වැනි තෑගය | | 0 | 8 | 8 | 2 | | | රු. 1,000/= | තෑග 144 |
| 9 වැනි තෑගය | | 0 | 8 | 8 | | | | රු. 100/= | තෑග 1314 |
| 10 වැනි තෑගය | | 0 | 8 | | | | | රු. 50/= | තෑග 13460 |
| 11 වැනි තෑගය | A | | | | | | | රු. 20/= | තෑග 53718 |

දිනා ඇති මුළු තෑග මුදල
Rs. 12,028,260.00

රුපියල් ලක්ෂ 5 හෝ ඊට වැඩි තෑග රජයේ බදු වලට යටත් වේ. තෑග මුදල් ලබා ගැනීමේදී හැඳුනුම්පත අනිවාර්ය වේ. ජයග්‍රාහී ලොතරැයි පත් වලංගු වන්නේ දිනුම් අදින දින සිට මාස 06 ක කාල සීමාවකට පමණි.

ඔබත් හදන - රටත් හදන
ජාතික ලොතරැයි මණ්ඩලය
අංක 234/2, ගාලු පාර, කොළඹ 03. දුරකථන: 2470662, 4607000, වෙබ් අඩවිය: www.nlb.lk

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## முருகன் சிவபுண்ணியம்

பிறப்பு - 06.12.1940
இறப்பு - 25.12.2010



அன்புத் தெய்வமே! எங்கள்
நல்வாழ்வுக்காய்
உமையுருக்கி, உம் சிந்தனையை
உரமாக்கி

ஒளி தந்தீர் ஐயா!
வறுமையிலும் செம்மையாக
எம்மை வளர்த்தீர் ஐயா!
பொறுமை வழி நின்று என்றும்
எம் வாழ்வில்
பசுமை நினைவுகளாக நிலைத்
திருப்பீர் ஐயா!

இன்று (24.01.2011) திங்கள்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"பவளவனம்"*
*கலைமதி சனசமூக நிலையம்,*
*நவிண்டில்.*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மருத்துவ சேவை விருத்தி

கிளிநொச்சி,ஜன.24

தற்போது வன்னி மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவர் களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளதனால் கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் சிறந்த வைத்திய சேவையைப் பெற்று வருகின்றார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண நலவாழ்வுப் பணிப்பாளர் க. அகிலன்.

வன்னியில் போர் உக்கிரம டைந்த காலப்பகுதியில் 3 லட் சம் மக்களுக்கு ஆறு மருத்து வர்களே சேவையில் ஈடுபட்டு வந்தார்கள். 10 ஆயிரம் மக்களுக்கு ஆகக்குறைந்தது ஒரு மருத்து வராவது இருக்க வேண்டும்

**வன்னி மாவட்டத்தின்**
**மருத்துவமனைகளில்**
**மருத்துவர்கள்**
**அதிகரித்துள்ளதால்**
**மக்கள் பயன்**
**பெறுகின்றனர்.**

என்று உலக நலவாழ்வு நிறு வனத்தால் பரிந்துரைக்கப்பட் டுள்ளது. தற்போது 50 ஆயிரம் மக்களுக்கு ஒரு வைத்தியர் எனும் நிலை வன்னிப் பிரதே சத்தில் மாற்றம் அடைந்துள்ளது.

பல்கலைக்கழகங்களிலிருந்து புதிதாக 76 மருத்துவர்கள் வெளி யேறியதையடுத்து 50 மருத்து வர்களுக்கு வன்னிப் பிரதே சத்தில் நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு மே மாதத் துக்கு முன்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 250 மருத்துவர்களும் 50 நல வாழ்வுக் கண்காணிப்பாளர் களும் நியமிக்கப்படவுள்ளார் கள். அத்துடன் 50 நலவாழ்வு நிலையங்களும் புதிதாக அமைக் கப்படவுள்ளதாகவும் வடமா காண நலவாழ்வுப் பணிப்பா ளர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தின் போது வன்னிப் பிரதேச மக்கள் மருத்துவ சேவை யைப் பெறுவதற்கு மிகுந்த சிரமங்களை அனுபவித்தனர். இதனால் பலர் உயிரிழக்க வேண் டிய பரிதாபகரமான நிலையும் ஏற்பட்டது. இந்தமக்கள் மீள் குடியமர்ந்த ஆரம்ப நிலையிலும் இதுவே தொடர்ந்தது. தற்போது இந்தநிலை மாறியிருப்பது அவர்களுக்குச் சற்று ஆறுதலாக உள்ளது. (க-313)

# கிளிநொச்சி - முல்லைத்தீவு இறப்பு வீதத்தில் வீழ்ச்சி

கிளிநொச்சி,ஜன.24

கிளிநொச்சி மற்றும் முல் லைத்தீவு மாவட்டங்களில் சிறுவர் இறப்பு வீதம் குறை வடைந்துள்ளமைக்கு அப்பி ராந்தியங்களின் நலவாழ்வுச் சேவைகள் மேம்படுத்தப்பட் டுள்ளமையே காரணமென அரசதரப்புத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இப்பிரதேசங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நலவாழ்வு அமைச்சு என்பன இணைந்து நடமாடும் மருத் துவ சேவைகளை வழங்கி வரு கின்றன.

மருத்துவர்களும் மருத்து வப் பணியாளர்களும் சிறப் பான முறையில் செயற்பட்டு வருகின்றனர். இதுவே சிறுவர் கள் இறப்பு வீதம் வீழ்ச்சிய டைந்துள்ளமைக்குக் காரண மாகும்.

மக்கள் மீள்குடியமர்ந்துள்ள பகுதிகளில் தொற்று நோய்கள் பற்றிய கண்காணிப்புத் தொடர் பாக மருத்துவ ஊழியர்களுக்கு உலக நலவாழ்வு நிறுவனம் பயிற்சிகள் வழங்கி வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (க-313)

# வழங்கப்பட்டது முத்திரை வழங்கப்படாதது பால்

வட்டக்கச்சி,ஜன.24


கல்மடு நகரில் பால் வழங் குவதற்கான முத்திரை வழங் கிப் பல மாதங்களாகிய போதி லும் பால் விநியோகம் நடை பெறவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தினால் இடம்பெயர் ந்து மீள்குடியமர்ந்த இரண்டு வயதுக்கும் ஐந்து வயதுக்கும் இடைப்பட்ட நலிந்த சிறார் களுக்கு அவர்களின் போசாக் கினை மேம்படுத்தும் பொருட்டு பால் வழங்குவதற்கான ஏற் பாடுகள் கூட்டுறவுச் சங்கத் தினால் மேற்கொள்ளப்பட்டன. இதன்பிரகாரம் பால் வழங்கு வதற்கான முத்திரைகளும் வழங் கப்பட்டன. ஆனால் பால் விநி யோகம் மட்டும் இதுவரை கூட்டுறவுச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நலிந்த சிறார்கள் தொடர்ந்தும் நலிவுற்ற நிலையி லேயே காணப்படுகின்றனர்.

சிலரின் அசமந்தப் போக்கி னால் பாதிக்கப்படுவது தமது சிறார்களே என்று கூறும் இப் பகுதிப் பெற்றோர்கள் தாம் இது தொடர்பாகப் பலமுறை முறை யிட்ட போதிலும் பலன் கிடைக் கவில்லையெனக் கவலை யுடன் கூறுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களில் அநேக மானோர் மிகவும் வறிய நிலை யில் உள்ளனர். இதனால் கர்ப் பிணிகள் சத்தான உணவுகளைப் பெறமுடியாததால் பிறந்த குழந் தைகளும் நலிவடைந்த நிலை யில் போசாக்கின்றிக் காணப் படுகின்றனர். இவர்களுக்குத் தேவையான உயர்ரகப் பால்மா வகைகளை வாங்கிக் கொள் வதற்கு இவர்களுக்கு வசதிகள் இல்லாத நிலைமை காணப் படுகின்றமை குறிப்பிடத்தக் கது. (க-450)

## தெய்வமே துணை...



*விநாயகர் அருளாட்சி: கற்சிலைமடுவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விநாயகப் பெருமான் விஷேடமான சோடனைகளுடன் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக் கின்றார். (500)*

# பாடசாலையில் கால்கோள் விழா

வட்டக்கச்சி, ஜன.24

கிளிநொச்சி, வட்டக்கச்சி மகாவித்தியாலய தரம் 1 மாண வர்களை உள்வாங்கும் கால் கோள் விழா கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. முத லில், தரம் ஒன்று மாணவர் களுக்கு தரம் இரண்டு மாண வர்களால் மாலை அணிவிக் கப்பட்டு சிவிக் சென்ரர் வைர வர் கோவில் முன்பாக இருந்து நிகழ்விற்கு வருகை தந்த விருந்தினர் சகிதம் பாடசாலை மண்டபத்திற்குள் அழைத்து வரப்பட்டனர்.

அங்கு தரம் இரண்டு மாணவி செல்வி இ. தமிழினி தலைமை யில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக ஆரம்பக்கல்வி ஆசி ரிய ஆலோசகர் பொ. விஜய நாதன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.சிறிதரனின் செயலாளர் திரு.பொன். காந் தன், திரு.நீ.ஜோன் ஜெக நாதன், சிவிக் சென்ரர் கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சில்வா வீதி, ஐயப்பன் ஆலய பிரதமகுரு சாந்திரகேசக் குருக் கள், வட்டக்கச்சி பங்குத்தந்தை வண. யூட்தாஸ் அடிகளார் ஆகி யோர் ஆசியுரையை வழங்கி னர். இந்த நிகழ்வில் ஏராளமான பெற்றோர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (க-450)

# ஆலய அன்னதான மடத்தை ஒப்படைக்க படையினர் மறுப்பு

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி கந்தசாமி ஆல யத்தின் அன்னதான மடத்தினை மக்கள் பயன்படுத்துவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை இரா ணுவத்தினரால் மறுக்கப்பட் டுள்ளது.

இந்த ஆலயத்தின் கும்பாபி சேஷகம் இடம்பெற இருப்ப தால் ஆலய பரிபாலன சபை யினர் இராணுவத்தினரிடம் அன்னதான மடத்தினை மக் கள் பயன்பாட்டிற்கு அனுமதிக் குமாறு கோரியிருந்தனர். ஆனால் இந்தக் கோரிக்கை இராணுவத் தினரால் மறுக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் திருவிழாக் க்காலங்களில் வன்னிப் பிரதே சத்தைச் சேர்ந்த பெருந்தொகை யான மக்கள் நேர்த்திக்கடன் களைத் தீர்ப்பதற்காக ஆலயத் திலேயே அதிகநேரம் தங்கிச் செல்கின்றனர். இந்நிலையில் அன்னதானமடம் பாவனை யில் இல்லாததால் இவர்களுக் கான உணவுத் தேவையினை ஆலய நிர்வாகத்தினர் உரிய முறையில் நிறைவேற்ற முடியா மல் பல சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

ஆலயச் சூழலை மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவகை யில் பெற்றுத்தருமாறு ஆலய பரிபால சபையினர் கோரிக்கை விடுக்கின்றனர். (க-313)

# பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள்

வட்டக்கச்சி,ஜன.24

வட்டக்கச்சி மகாவித்தியா லயப் பழைய மாணவியொரு வரால் பாடசாலை மாணவர் களுக்குச் சைக்கிள்கள் அன் பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி மகாவித்தியா லயப் பழைய மாணவி திருமதி சிவநிதி பன்னீர்செல்வம் சுவிற் சர்லாந்தில் வசித்துவருகின் றார். அவர், அங்குள்ள ஏனைய இப்பாடசாலைப் பழைய மாண வர்களிடம் இருந்து திரட்டிய நிதியில் இருந்து இப்பாட சாலையில் கல்வி கற்கும் தாய், தந்தையரை இழந்த மற்றும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் தூர இடங்களில் இருந்து வருகின்ற மாணவர்கள் 25 பேருக்கு சைக்கிள்களை வழங் கியுள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கலந்து கொண்டு சைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்கிவைத்தார். (க-450)

# முல்லை மாவட்ட பண்டார வன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை

முல்லைத்தீவு, ஜன.24

முல்லை மாவட்டத்தில், அம் மாவட்ட மக்களுக்கும் ஏனைய மாவட்ட மக்களுக்கும் பயன் தரக்கூடிய மட்பாண்டத் தொழிற்சாலையாகவும் 500 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடியதாகவும் விளங்கியது பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை. இந்தத் தொழிற் சாலை ஆரம்பிக்கப்பட்டு 1960 ஆம் ஆண்டில் செங்கல், மட் பாண்டங்கள் என்பனவற்றைக் குறிப்பிட்ட சில தொழிலாளர் களைக் கொண்டு இயங்கிய போதிலும் காலப்போக்கில் நவீன இயந்திரங்களைப் பொருத்தி ஓடுகள் தயாரிக்கும் பணியில் மிகவும் சிறப்பாக ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டது.

இம்மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்ட மக்களும் ஓடுகளையும் செங்கற்களை யும் கொள்வனவு செய்[illegible] வந்தனர்.

கூழாமுறிப்பில் உள்ள குளத் தின் மண் ஓடு, செங்கற்கள் தயாரிப்பதற்கு மிகவும் பொருத் தமானதாக அமைந்துள்ளதால் அம்மண்ணினைக் கூடுதலாகச் சேகரித்து ஓடுகளைத் தயாரிக் கத் தொடங்கினர். தென்பகுதி ஓடுகளை விடப் பண்டாரவன் னியன் ஓட்டுக்கே மிகவும் கிராக்கி ஏற்பட்டு அவற்றை ஏற்றுவதற்குத் தினமும் வாகனங் கள் நீண்ட வரிசையில் காத்து [illegible] களை மேற்கொண்டுவிட்டு சென்றதும் உண்டு.

இத்தொழிற்சாலையில் கூழாமுறிப்பு - கருவேலன் கண்டல், புளியங்குளம், ஒட்டு சுட்டான், கற்சிலைமடு, சமளங் குளம், முள்ளியவளை, தண் ணீர் ஊற்று போன்ற கிராமங் களில் உள்ள 500 இக்கும் மேற் பட்ட பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இதனால் 500 இக்கும் மேற்பட்ட குடும் பங்களுக்குத் தொழில் வாய்ப் புக் கிட்டியதுடன் அவர்களின் வாழ் வாதாரத்துக்கு மிகவும் ஊன்று கோலாகவும் அமைந் திருந்தது. உழவு இயந்திர உரிமையாளர்கள் மண் ஏற்றிப் பறிப்பதால் அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளும் கிடைத் திருந்தது. பணியாளர்களுக் கான முற்பணக் கொடுப்பனவு மேலதிக வேலைக்கான பணம் அவர்களுக்கான ஓய்வூதியம் என்பனகூட நடை முறையில் இருந்து வந்தன.

**சிலையூர் தனம்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24 ஜனவரி 2011 திங்கட்கிழமை



திறப்பு:- மாவனெல்லைப் பிரதேச சபையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை பிரதமர் டி.எம்.ஜயரத்ன நாடா வெட்டித் திறந்து வைக்கின்றார். அருகில் கிராமிய அபிவிருத்தி சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரத்ன காணப்படுகின்றார். (204)

# கம்பளையில் ஏற்பட்ட இனப் பதற்றம் கலவரம் ஆகாமல் பிரதமர் தடுப்பு

கம்பளை, ஜன.24

கம்பளை - கஹட்டப்பிட்டிய பிரதேசத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் ஏற்படவிருந்த இனக்கலவரம் உரிய நேரத்தில் பிரதமர் டீ.எம். ஜயரத்னவின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

சம்பவதினம் தனிப்பட்ட பகை காரணமாகத் தாக்கப்பட்ட இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இதன் காரணமாகக் குறித்த பிரதேசத்தில் இரு இனங்களுக்கிடையில் பதற்றம் நிலவியது. அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்கள் பதற்றத்தைத் தூண்டி இனக்கலவரத்தை உருவாக்கு வதற்கு முனைந்திருந்தனர்.

எனினும் சம்பவம் குறித்துக் கேள்வியுற்ற பிரதமர் டீ.எம். ஜயரத்ன உடனடியாகத் தலையிட்டு, இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தார்.

மேலதிகமாக பிரதியமைச்சர் ஏ.ஆர். எம். அப்துல் காதர் மற்றும் கம்பளை முன்னாள் நகராதிபதி எம் .ஹாரிஸ் ஆகியோரும் நேரடியாக இருதரப்பினருடனும் பேசி சமரச முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்காரணமாகக் கடுங்கொந்தளிப்புடன் காணப்பட்ட கம்பளை நகரம் கடந்த வியாழக்கிழமை மாலை வழமைக்குத் திரும்பியது - எனத் தெரிய வருகின்றது. (ளி)

# நுவரெலியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் எம்.உதயகுமாரின் வேண்டுகோளுக்கமைய, மத்திய மாகாண முதலமைச்சரின் நிதியொதுக்கீட்டிலிருந்து நுவரெலியா மாவட்டத்தின் சிறு அபிவிருத்தித் திட்டத்திற்காகப் 12 லட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது பூர்த்தியாகும் நிலையிலுள்ளன.

பொகவந்தலாவை மேற்பிரிவுத் தோட்டப் பாதையைச் செப்பனிடுவதற்காக 2 லட்சம் ரூபாவும் நம்பொடை புரட்டொப் தோட்ட நீர் விநியோகத்திற்காக 2 லட்சம் ரூபாவும் கொட்டகலை ஸ்டோனிக் கிளிப் கீழ்ப்பிரிவு தோட்டத் திற்கான நீர் விநியோகத்திற்காக 2 லட்சம் ரூபாவும் தலவாக்கலை கிரேட் வெஸ்டன் கல்கந்தை தோட்டத்தின் நீர் விநியோகத்திற்காக 2 லட்சம் ரூபாவும் டயகம ஈஸ்ட் தோட்டப் பாதையைச் செப்பனிடுவதற்காக 2 லட்சம் ரூபாவும் கந்தப்பளை தோட்டப் பாதையைப் புனரமைப்பதற்காக 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

# குளிக்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் ஆற்றில் தவறி வீழ்ந்து பரிதாப மரணம்

இரத்தினபுரி மாவட்டம், எரந்த வார்ணகல பிரதேசத்தில் உள்ள களுகங்கையில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் அங்கிருந்த 65 அடி உயரமான பாறையில் ஏறியபோது கால் வழுக்கி ஆற்றுக்குள் விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனக் குருவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவிசாவளை, புவக்பிட்டிய எஸ்வத்த தெற்குப்பிரதேசத்தைச் சேர்ந்த அபேரத்ன பண்டார (வயது-19), சுனேத் ஜானக (வயது-22) என்ற இருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமான இருவரும் மேலும் சில நண்பர்களுடன் பகலுணவை எடுப்பதற்காக களுகங்கைக் கரைக்குச் சென்றுள்ளனர். அங்கு அவர்கள் நீர்வீழ்ச்சியின் பாறையில் ஏறி நின்று சிவனொளிபாதமலையைப் பார்க்க முயன்றுள்ளனர்.

அப்போது அவர்கள் 65 அடி உயரமான அந்தப் பாறையிலிருந்து கால் வழுக்கி கங்கைக்குள் விழுந்து பலத்த காயங்களுக்குள்ளாகி மரணமாகியுள்ளனர்.

STUDY & WORK IN UK

விசா கிடைத்த பின்பே கல்லூரிக்கட்டணம் செலுத்தும் அரிய வாய்ப்பு

★ பகுதிநேர வேலைவாய்ப்புக்கான 100% உத்தரவாதம்
★ 3 நாள்களுக்குள் CAS LETTER கிடைக்கும் வகையில் துரிதஏற்பாடுகள்
★ குடும்பமாக செல்லக்கூடிய வாய்ப்புகள்
★ தற்போது UK யில் கல்வி கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு கனடாவில் கல்வியைத் தொடரும் வசதிகளை செய்துதருகிறோம்.

அலுவலக நேரம்:
கிழமை நாள்களில்
காலை 9-மாலை 4வரை

அலுவலக விலாசம்:
245, பலாலி வீதி,
(Baby Photoஅருகில்), கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0770871616.

உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 585
திகதி 2011/01/22

சுப்பர் இலக்கம்: 04
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 05 07 24 62

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| வீசி பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 36,513,101.60 வீகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீகிதம் | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீகிதம் | 15 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீகிதம் | 356 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீகிதம் | 704 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீகிதம் | 17,521 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீகிதம் | 10,114 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 253,331 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 40,762 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 12,204,520.00
சுப்பர் பரிசு தொகை ஜிப் வெண்டியுடன் மிகுதி தொகை மாறாமல்

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 36,654,616.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

# வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கு ஓய்வூதியத் திட்டம்

நுவரெலியா, ஜன, 24

வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான விசேட ஓய்வூதியத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி மற்றும் சேமநலன் அமைச்சினால் இத்திட்டத்துக்கான ஆரம்ப ஒழுங்குகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் அதிகரிப்பதற்கு வெளிநாட்டில் வேலைசெய்யும் இலங்கையர்களும் பங்களிப்பு வழங்குகின்றனர். அவர்களது பணிக்கு கௌரவம் அளிக்கும் விதத்தில் இந்த ஓய்வூதியத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சேமநலன் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (204-5)

# பொலிஸில் தஞ்சம்

அநாதரவான நான்கு குழந்தைகள் ஆதரிப்பார் யாருமின்றித் தவுலகெலபொலிஸில் புகலிடம் கோரித் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்தப் பிள்ளைகளின்தந்தை குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று விட்டதாகவும் தாய் ஒரு மன நோயாளி என்றும் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

தஞ்சமடைந்த பிள்ளைகளில் 14 வயதான சிறுவனும் முறையே 11, 10,8 வயதான சிறுமிகளுமாக 4 பேர் காணப்படுகின்றனர். (204-5)



◀ பரத நாட்டியம்

சாஸ்திரிய இந்திய நடன அமைப்பாக விளங்கும் பரத நாட்டியம் இலங்கையில் பிரபல்யம் பெற்றதொரு நடனமாகும். பண்டைய இந்தியாவில், பரத நாட்டியத்தினை தமிழ் நாட்டிலுள்ள தேவதாசிகள் ஆடி வந்தனர். பெண்கள், நாட்டியத்திற்கே உரித்தான முறையில் சேலைகளை அணிந்திருப்பர். ஆண்கள் வெற்று மார்புடன் வேட்டி போன்ற வடிவிலான உடையினை இடுப்பில் அணிந்து காணப்படுவர். இந் நாட்டியத்தினை நடனக்கலைஞர்கள் முழங்கால்களை வளைத்து ஆடுவதுடன் கை அசைவுகளின் மூலமாகவும் பல்வேறு அபிநயத் தோற்றங்களினூடாகவும் சபையோருக்கு வேறுபட்ட உணர்வுகளை வெளிக்காட்டுவர். இதில் பயன்படுத்தப்படும் பிரதான கருவி மிருதங்கமாகும்.

மிருதங்கம் ▶



இரண்டு பக்கமும் அடிக்கக்கூடிய மிருதங்கம் பரத நாட்டியத்துடன் சேர்த்து இசைக்கப்பட்டு வருகின்ற ஒரு வாத்தியமாகும். இது கர்நாடக இசைக் கச்சேரிகளில் இசைக்கப்படுகின்ற கருவிகளில் முதன்மையானதாக விளங்குகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

CENTRAL BANK OF SRI LANKA
60 growth & stability

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரசபை எல்லைக்குள் ஒரு கோடி ரூபா உதவியில் மடுவம்

கல்முனை மாநகரசபை எல்லைக்குள் மாடு அறுத்தலுக்கான மடுவம் சாய்ந்தமருது மேற்கு, கரைவாகு வட்டைக்குள். அபயா குறூப் ஒப் கம்பனியின் காணியில் கட்டப்படவுள்ளது.

கட்டப்படவுள்ள மடுவத்தை குறித்த தனியார் கம்பனியே பராமரிப்பதுடன் மாநகர சபைக்கு மாதாந்தம் 5,000 ரூபாவை வாடகையாகச் செலுத்துவது என கல்முனை மாநகரசபையுடன் குறித்த தனியார் கம்பனி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் படி ஒரு கோடி ரூபா பெறுமதியான புதிய மடுவம் அபயா குறூப் ஒப் கம்பனியல் நிர்மாணிக்கப்படவுள்ளது.குறித்த ஒப்பந்தத்தில் கல்முனை மாநகரசபை மேயர் மசூர் மௌலானாவும் அபயா குறூப் ஒப் கம்பனியின் பணிப்பாளர் எம்.அஷ்ரப்பும் கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதி மேயர் ஏ.ஏ.பஷீர், கல்முனை மாநகரப்பதில் ஆணையாளர் ஏ.ஜே.எம்.இர்ஷாட, மாநகரசபை பிரதம பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜவ்ஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பட்டிமுனை மற்றும் இஸ்லாமாபாத் ஆகிய பகுதிகளிலுள்ள 40 மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களுக்காக ஒரு நாளைக்கு 100 இற்கும் மேற்பட்ட மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன.

எனினும் கடந்த பல வருடங்களாக கல்முனை மாநகர சபை எல்லைக்குள் மாடு வெட்டுதலுக்கான மடுவம் இல்லாமை பெரும் பிரச்சினையாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பாதிக்கப்பட்ட இடங்களை கட்டியெழுப்ப ஐ.நா. உதவும்

அடைமழை, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றால் பாதிப்படைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஐ.நா. உதவும் என மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகமும் அவசர நிவாரணப் பிரதி ஒருங்கிணைப்பாளருமான கதரின் பிராக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல மாவட்டங்களில் வெள்ளம், மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் மூன்று நாள்கள் பயணத்தை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை இலங்கை வந்தடைந்த ஐ.நா.வின் உதவிச் செயலாளர், வெள்ளத்தினால் அதிகளவு பாதிக்கப்பட்ட மட்டக்களப்பிற்குக் கடந்த வியாழக்கிழமை பயணித்துள்ளார்.

இவர் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டார். இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகக் கலந்துரையாடினார். இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், பாதிக்கப்பட்ட பிரதேசத்தைக் கட்டியெழுப்ப ஐ.நா. உதவும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மாகாணசபை உறுப்பினருக்கு நீதிமன்றம் பிணை

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலாளரை அச்சுறுத்திய சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றில் சரணடைந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் கடந்த வியாழக்கிழமை மாலை சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பிரசாந்தனும் சம்பவத்துடன் தொடர்புடைய ஐவரும் ஆஜரானபோது மட்டக்களப்பு நீதிவான் அப்துல்லா இவரைச் சரீரப்பிணையில் செல்வதற்கும் ஏனைய ஐவரையும் இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

மக்களுக்கு வழங்கப்பட்ட, வழங்கவிருந்த நிவாரணப் பொருள்களை வழங்குவதில் எழுந்த சர்ச்சையை அடுத்து மாகாணசபை உறுப்பினர் பிரசாந்தன் ஆரையம்பதி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரத்தைத் தாக்க முற்பட்டார் எனக் காத்தான்குடிபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தெரிவு....



பரீட்சை: காரைதீவு பிரதேசசபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை சாய்ந்தமருது கொம்டெக் கல்வி நிலையத்தில் இடம்பெறுகின்றது. (204)

## பொருள்களில் மோசடி: கூ. சங்க முகாமையாளர் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு,ஜன.24

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவரணப் பொருள்களில் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரை இடைநிறுத்தியுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு மற்றும் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தான் கொக்கட்டிச்சோலைப் பகுதிக்கு பயணம் செய்தபோது அப்பகுதி மக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து குறித்த கூட்டுறவுச் சங்கத்தில் நிறுத்து வைக்கப்பட்டிருந்த பொருள்களைதான் பரிசோதித்தபோது ஒவ்வொன்றிலும் 200 மற்றும் 300 கிராம் நிறை குறைந்ததை கண்டேன் என அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்தே குறித்த பலநோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளரை வேலையிலிருந்து நிறுத்தியதாக அமைச்சர் சுபைர் தெரிவித்துள்ளார். (204)

# கிழக்கில் புதிய வைத்தியர்கள் நியமனம்

மட்டக்களப்பு,ஜன.24

கிழக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறையாகவுள்ள 33 வைத்தியசாலைகளுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிதாக வைத்தியர்களை நியமிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுகாதார அமைச்சில் கடந்தவியாழக்கிழமை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைருக்குமிடையிலான சந்திப்பின்போதே, மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிழக்கில் சுகாதாரத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பாராட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 வைத்தியசாலைகளுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 05 வைத்தியசாலைகளுக்கும் அம்பாறை மாவட்டத்தில் 15 வைத்தியசாலைகளுக்கும் மேற்படி தீர்மானத்திற்கமைய வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரிதிதென்னை, காங்கேயனோடை, வாழைச்சேனை, காயங்கேணி, காத்தான்குடி, மண்டபத்தடி, மகிழவெட்டுவான், நாவற்காடு, வாழையடி வட்டை, உன்னிச்சை, மாங்கேணி, கதிரவெளி, காவத்தமுனை ஆகிய பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கும்

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு, ஒழுவில், நிந்தவூர், சொறிக்கல்முனை, திருக்கோவில், பொத்துவில், கல்முனை அஸ்ரப் வைத்தியசாலை, கல்முனை வடக்கு வைத்தியசாலை, அம்பாறை தொகுதியில் 04 வைத்தியசாலைகளுக்கும் திருகோண மலை மாவட்டத்தில் மூதூர், கும்புறுப்பட்டி, மனல்சேனை, கட்டைபறிச்சான், ஈச்சிலம் பற்று ஆகிய பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகளுக்கும் புதிய வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார். (204)

## கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்கள்

மூதூர் கரையோரக் கிராமங்கள் கடலரிப்புக்கு உட்பட்டு வருகிறன. கரையோரக் கிராமங்களான ஹபீப் நகர், தக்வா நகர், பஹ்ரியா நகர், நாவலடி முதலான கிராமங்களிலேயே கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களில் விரைவாக ஏற்பட்டு வரும் கடலரிப்பைத் தடுக்காத பட்சத்தில் இன்னும் 50 வருடங்களில் இந்தக் கிராமங்கள் முற்றாக அழிந்துவிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (204)

## தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

*கிழக்கு மாகாணத்தில் தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதேவேளை பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதற்கு அவசியமாகும் எனக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.*

*கிழக்கில் வெள்ளம் வழிந்தோடியுள்ளது. இதையடுத்து தொற்றுநோய் பரவும் ஆபத்து உள்ளது. எனவே பொதுமக்கள்இந்த விடயத்தில் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் சுபைர் தெரிவித்துள்ளார்.*

*தொற்றுநோய் பரவல் உயிரிழப்புகளை மாத்திரமின்றி நாட்டின் பொருளாதாரத்தையும் சீரழிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை கிழக்கில் நிலவிய காலநிலையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு அர்ப்பணிப்புடன் உதவி புரிந்த அனைவருக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். (204)*

# அதாவுல்லாவின் மகன் மேயர் பதவிக்குப் போட்டி

அம்பாறை, ஜன.24

தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவின் புதல்வரான சக்கி அதாவுல்லா எதிர்வரும் அக்கரைப்பற்று மாநகர சபைத் தேர்தலில் மேயர் பதவிக்குப் போட்டியிடவுள்ளார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது சக்கி அதாவுல்லா அமைச்சர் அதாவுல்லாவின் அந்தரங்க செயலாளராக செயற்படுகின்றார்.

அக்கரைப்பற்று மாநகர சபைத்தேர்தல், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அக்கரைப் பற்றுப் பிரதேச சபைத் தேர்தல் ஆகியவற்றில் மாத்திரம் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் போட்டியிடவுள்ளது எனத் தேசிய காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரைப்பற்று பிரதேசசபை மாநகரசபையாக அண்மையில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவினால் தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையில் ஓர் அமைச்சரையும் தவிசாளர் உட்பட நான்கு உறுப்பினர்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அக்கரைப் பற்று மாநகரசபைத் தேர்தலிலு சம்மாந்துறை பிரதேச சபைத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் சேர்ந்து போட்டியிடவுள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ)

Digitized By Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்கள் பெருமையாக நினைப்பதற்காகத் தாராளமாகச் செலவு செய்வீர்கள். நண்பர்கள் சிலர் சொல்லும் அறிவுரைகளைக் கேட்கலாம். பணி புரிவோர் சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் நிர்வாகத்தினரின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். சக ஊழியர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். குழப்பம் நேரும்.

**இடபம்:**
வீட்டில் வசதி வாய்ப்புக்களை அதிகரிக்க முற்படுவீர்கள். புதிய திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். உங்களைப் பயன்படுத்தி சிலர் காரியம் சாதிக்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள்.

**மிதுனம்:**
மற்றவர்கள் உயர்வாக நினைக்கும் வகையில் நடந்து கொள்வீர்கள். செலவுகளில் சிக்கனம் காட்டிச் சேமிப்பை அதிகரிப்பீர்கள். என்ன ஆகுமோ எனச் சந்தேகப்பட்ட காரியம் ஒன்று நல்ல விதமாக முடிவுக்கு வரும். பல நாள்களாகச் சந்திக்காத ஒருவரைத் திடீரெனச் சந்திக்கலாம்.

**கடகம்:**
நண்பர் அல்லது சக ஊழியர் ஒருவரிடம் கடுமையாகப் பேச நேரிடலாம். மாற்று மத நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். பெரிய அளவில் திட்டமிட்ட காரியம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். புதிய முயற்சிகளில் பொறுமை, நிதானம் அவசியம். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் ஓய்வெடுப்பீர்கள்.

**சிங்கம்:**
செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற வரவுகள் வந்து சேரும். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட உடன் பிறப்புக்கள் அன்பாக நடந்து கொள்வர். பிரபலங்கள் சந்திப்பு நிகழ வாய்ப்பு உண்டு. சில விடயங்களில் துணிச்சலாக முடிவெடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம்.

**கன்னி:**
எதிலும் குறுக்கு வழிச்சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மை, நாணயமாகச் செயற்பட வேண்டும். வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உற வினர்கள் அல்லது நண்பர்கள் சிலரின் வருகையை எதிர்பார்த்து வீட்டில் மாற்றங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். நண்பர்களிடம் கோபத்தைத் தவிர்க்கவும்.

**துலாம்:**
கவனக் குறைவைத் தவிர்த்து எதிலும் சாமர்த்தியமாகச் செயற்படும் நாள். கடுமையான அலைச்சலை உண்டாக்கலாம் என நினைத்த காரியம் ஒன்று எளிதில் முடியலாம். உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். இனம் புரியாத சந்தோஷம் மனதில் குடி கொள்ளும் நாள். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல திட்டம் போடுவீர்கள்.

**விருச்சிகம்:**
சாதாரணமாகச் செய்த காரியங்கள் கூட உங்களுக்குப் பாராட்டைத் தேடித் தரலாம். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் கூடும். பிள்ளைகள் நலன் கருதி சில காரியங்களைச் செய்வீர் கள். வரவாக வந்த பணத்தில் ஒரு பகுதியைக் கடன் கொடுப்பீர் கள். தேக பயிற்சிகளில் அக்கறை காட்டுவீர்கள். உதிரி வருமானம் கிட்டும்.

**தனுசு:**
மற்றவர்களின் அரைகுறையான செயற்பட்டால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகளை வசூலிப்பதில் அக்கறை காட்டுவர். ஒன்றுமில்லாத ஒரு விடயத்திற்குப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். இறைவழிபாடு அமைதி தரும்.

**மகரம்:**
ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் பிடிவாதக் குணங்களைக் கண்டு கடும் கோபம் கொள்வீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் அவர்கள் வேலையையும் சேர்த்துச் செய்யலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். தண்டச் செலவு நேரும்.

**கும்பம்:**
ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்குப் பணி நெருக்கடி உண்டு. வெளியூரில் இருக்கும் சிலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

**மீனம்:**
சிறிய விடயத்திற்கு சக ஊழியர்கள் உங்களிடம் கோபித்துக் கொள்ளலாம். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு ஒன்று வராமல், எதிர்பாராத பணவரவு கிடைக்கலாம். குடும்ப விடயங்களில் பெரியவர்களின் தலையீட்டால் பிரச்சினைகள் உண்டாகலாம்.

# யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக்கழகம்

புலம்பெயர்வாழ் தமிழ்ப் புத்திஜீவிகள் மீண்டும் வந்து யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக் கழகங்களை அமைக்க விரும்பினால் அதற்குத் தேவையான காணிகள் வழங்கப்படும். பட்டங்களை வழங்குவதற்கான அங்கீகாரமும் பாதுகாப்பும் வழங்கப்படும். தமது பிரதேசம், தமது சமூகம் என்பனவற்றின் மேம்பாட்டில் அக்கறை உள்ளவர்கள் முன்வரவேண்டும்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மேற்கண்டவாறு அழைப்பு விடுக்கின்றார்.

உதயன் செய்தியாளர், அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிய போதே இந்த அழைப்பை விடுத்தார்.

அதேவேளை யாழ்.குடாநாட்டு மக்களின் பெரும் சொத்தாக மதிக்கப்படுவது கல்விதான். ஆனால் கடந்த முப்பது வருடத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்ட அமைச்சர் திஸநாயக்க அதற்கான காரணம் மாறி மாறி வந்த அரசுகளோ அல்லது அரசியல் கட்சிகளோ அல்ல. அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழீழ விடுதலைப் புலிகளே ஏற்க வேண்டும் எனவும் குற்றம் சாட்டுகின்றார். இந்த சந்திப்பின் போது அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:



கே: கடந்த முப்பது வருடங்களாக வடமாகாணம் அரசினால் கைவிடப்பட்ட ஒரு பிரதேசமாகவே இருந்து வந்துள்ளது. குறிப்பாக கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் எந்தவிதமான அளவும் அரசின் பங்களிப்பும் கிடைக்கவில்லை என்ற நடு ஆதிக்கம் நிலவுகின்றது?

ப: நாட்டில் மூளைசாலிகள் நிறைந்த பிரதேசம் யாழ். குடாநாடு என்பதிலும் அவர்களிடமுள்ள விலைமதிக்க முடியாத சொத்து கல்வி என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. ஆனால் இன்று இப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சீரழிவுகளுக்கும் கல்வி அபிவிருத்தியில் ஏற்பட்ட பின்னடைவு களுக்கும் புலிகள் இயக்கம்தான் காரணம் இதை மறுக்க முடியாது.

கே: எடுத்த எடுப்பிலேயே புலிகள் மீது மட்டும் குற்றஞ்சாட்டி விட்டால் சரியாகிவிடுமா?

ப: கொஞ்சம் பொறுங்கள். இதற்கு அரசோ அரசியல்கட்சிகளோ காரணம் அல்ல. இவ்விடயம் தொடர்பாகச் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தப் பிரதேசங்களில் பெரிய அபிவிருத்திக்கு வழங்கப்பட்ட நிதியில் ஐம்பது வீதத்தையும் திருகோணமலை பல்கலைக்கழக வளாகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 90 வீதத்தையும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் அனைத்தையும் புலிகள் துப்பாக்கி முனையில் அபகரித்துள்ளார். இப்படித் தொடர்ந்து கூறமுடியும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அனுப்பப்படும் நிதி மக்களைச் சென்றடையாவிட்டால் எப்படி அபிவிருத்தி ஏற்படும்.

கே: புலிகள் இப்படி செய்கின்றனர் என்பதால் அப்படியே கைவிட்டு விடுவதா?

ப: உங்களுடைய குற்றச்சாட்டு தவறானது யுத்த நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் போதிய நிதி செலவிடப்பட்டுள்ளது. உதாரணமாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது, மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம் புதிதாக உருவாக்கப்பட்டது, யாழ்.பல்கலைக்கழகத்திலும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மறுக்கக்கூடாது.

கே: அப்படியானால் ஏனைய பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் இருக்கும் சகல வசதிகளும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகத்திலும் இருக்கின்றன என்கீறீர்களா?

ப: நான் அப்படிக் கூறவில்லை. யாழ். பல்கலைகழகத்தில் போதிய நிதிகள் இல்லை. திருகோணமலை, வவுனியா வலயங்களில் எவ்விதமான வசதிகளும் இல்லை என்று கூறப்படுகின்றது. இக்குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்காக வரவு செலவுத் திட்டத்திலும் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.


கே: பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக்குப் பல வெளிநாடுகளும் பெருமளவில் உதவிகளை வழங்குவதாகச் செய்திகள் கூறுகின்றன?

ப: உண்மைதான், யாழ். பல்கலைக்கழக அபிவிருத்திக்காக இந்திய அரசு உதவிகளை வழங்கி உள்ளது. தொடர்ந்தும் வழங்க முன்வந்துள்ளது.

அதேபோன்று தென்கிழக்கு ஒலுவில் பல்கலைக்கழக அபிவிருத்திக்கு இலங்கை அரசு சென்ற ஆண்டில் 900 மில்லியனும், இந்த ஆண்டில் 1200 மில்லியன்களையும் வழங்கி உள்ளது.

கே: வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் காணப்படும் மூலவளங்களுக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் அப்பிரதேசங்களில் பல்கலைக்கழக வளாகங்களை உருவாக்கவேண்டும். திருகோணமலை வளாகம் தனிப்பல்கலைக்கழகமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனைப் பரிசீலனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்வீர்களா?

ப: கிளிநொச்சியில் விவசாயப்பீடம் அபிவிருத்தி செய்யப்படும். அங்கு பொறியியல் பீடமும் தனியாக அமைக்கப்படவுள்ளது. ஏனையவை பரிசீலனை செய்யப்படும். உடனடியாகத் தீர்மானிப்பது சற்றுக் கடினம். நிதி நிலைமையையும் பார்க்கவேண்டும் அல்லவா!

கே: வரவு செலவுத் திட்டத்தின்போது சில தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்கள் சர்வதேசத்திற்கு ஏற்ப அபிவிருத்தி செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. இதில் யாழ். பல்கலைக் கழகமும் உள்ளடக்கப்படுமா?

ப: ஏன் இல்லை. யாழ். பல்கலைக்கழகத்துக்கு அமைக்க எவரும் முன்வரவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க் கல்விமான்களுக்கும் ஆர்வலர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். உங்கள் மக்களினதும் பிரதேசத்தினதும் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக் கழகங்களை அமைக்க முன்வரவேண்டும்.

கே: புலம்பெயர்ந்து வாழும் புத்தி ஜீவிகள் யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க முன்வந்தால் அரசு அவர்களுக்கு எந்தவகையில் உதவும்?

பதில்: சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்படும் வகையில் பட்டங்களை வழங்க அங்கீகாரமும்,

# புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கிறார் எஸ்.பி.

முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஒரே பிரச்சினை காணி - இடவசதிகளை ஏற்படுத்தும் வகையில்தான் யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து விவசாய பீடத்தையும் பொறியியல் பீடத்தையும் கிளிநொச்சிக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. யாழ். பல்கலைக்கழகம் சர்வதேச தரமிக்க ஒரு பல்கலைக்கழகமாகக் கட்டியெழுப்பப்படும்.

கே: மலையகத்தில் குறிப்பாக நுவரெலியாவில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என மலையக அரசியல்வாதிகள் நீண்டகாலமாகக் குரல் எழுப்பிவருகின்றனர். நீங்களும் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர். மேலும் உயர்கல்வி அமைச்சர் என்ற வகையில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

ப: மலையத்தில்தான் இலங்கையிலேயே தலைசிறந்த பல்கலைக்கழகமான பேராதனைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. நுவரெலியாவில் தனியான பல்கலைக்கழகம் அமைப்பதென்றால் ஆகக் குறைந்தது 500 ஏக்கர் காணி தேவை. இதனை அங்கு பெறமுடியாது. அப்படியே பெறுவதென்றால் ஏதாவது ஒரு தோட்டத்தைத்தான் சுவீகரிக்க வேண்டும். இதனால் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே இதற்கு மாற்றீடாகக் கொத்மலைப் பிரதேசத்தில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கப் பரிசீலனை செய்து வருகின்றேன்.

கே: பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்குத் தேவையான தகுதியும் குறிப்பிட்ட வெட்டுப் புள்ளிகளும் இருந்தும் கூட இட ஒதுக்கீட்டின்படி தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பு கிட்டாதுள்ளது. இளைஞர்களின் கிளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது என்று கூடக் குறிப்பிடலாம். இதனால் இவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக் கழகம் அமைக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

ப: இது நல்லதொரு கேள்வி. இதுவரை 15 நிறுவனங்கள் இங்கு தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க முன்வந்துள்ளன. சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று மட்டக்களப்பில் அமைக்கவும் முன்வந்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பும் வழங்கப்படும். தேவையான காணிகளும் வழங்கப்படும். இப்பொழுது கிளிநொச்சியில் 400 ஏக்கர் காணி இருக்கின்றது. அதே போன்று திருகோணமலையிலும் காணிகள் இருக்கின்றன. இதனை வழங்கத் தயார். அதேவேளை யாழ்ப்பணத்தில் காணிகள் இருப்பின் அவற்றை விலைகொடுத்து வாங்கித்தரவும் முடியும். பிற மாவட்டங்களில் அமைக்கப்படும் தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அரசினால் வழங்கப்படும் அனைத்து வசதிகளும் பரபட்சமின்றி வழங்கப்படும்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து மத நிறுவனங்களுக்குச் சொந்தமாகப் பெரிய காணிகளும் நிதியும் இருக்கின்றதாக அறிகின்றேன். அறக்கட்டளை நிறுவனங்களும் சமூக அமைப்புகளும் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தை இவர்களும் பயன்படுத்தலாம்.

**செவ்வி: புத்திரசிகாமணி**

உலகிலேயே தரமிக்க ஒரு பல்கலைக்கழகமான ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் கிறிஸ்தவ பாதிரியார்களினால் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் பகவான் சத்திய சாயிபாபாவினால் தனியார் பல்கலைக்கழகமும் தனியார் வைத்தியசாலையும் இயங்குகின்றன. இங்கும் கூட இஸ்லாமிய அமைப்புக்களும், தனவந்தர்களும் தமது மக்களின் கல்வி அபிவிருத்திக்காகப் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

இவற்றை எல்லாம் முன் உதாரணமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இருக்கும் இந்து மத நிறுவனங்கள், தொழில் அதிபர்கள் ஒன்றிணைந்து ஒரு அறக்கட்டளை நிலையத்தை உருவாக்கி அதன் மூலம் தனியார் பல்கலைக் கழகங்களை அமைக்க முன்வந்தால் வரிச் சலுகைகள் கூட கிடைக்கும். சமுதாய அக்கறை உள்ளவர்கள் முன்வரவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

வடமாகாணத்தில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உயர்கல்வி அமைச்சின் இணைப்பாளராக முன்னாள் உபவேந்தரும் பேராசிரியருமான ஆர். ஹூலை நியமித்துள்ளேன் என்று கூறினார்.

# மரமா? மனிதனா?



கோபத்தில் திட்டுகிற போது, "ஏன் இப்படி மாடு மாதிரி நிற்கிறாய்?, மரம் மாதிரி வளர்ந்துவிட்டாய்" என்று ஏசுகிறோம். இயற்கையையும் பிற உயிர்களையும் தகுதியற்ற மனிதனோடு ஒப்பிட்டுப் பேசுவது அநீதி அல்லவா? காரணம் மாடு இன்றைக்கு ஐயாயிரம் ரூபா விலைபோகிறது. இவன் போவானா? மரம் நிழல் தரும், காய் தரும், கனிதரும், இறந்தாலும் விறகாகத் தன்னையே தரும் ஆனால் இந்த மனிதன் இறந்தாலும் தானாக எரியமாட்டான். கொஞ்சம் விறகு வைத்துத்தான் எரிக்கவேண்டியுள்ளது.

எனவே மரம் போல, மாடுபோல என்று மனிதனைத் தாழ்த்துவதாக நினைத்துப் படைப்பைத் தாழ்த்தக் கூடாது. எனக்கு இந்தக் கோபம் எப்போது ஏற்பட்டது தெரியுமா? திருக்குறள் படிக்கும்போது திருவள்ளுவர் மீது ஏற்பட்டது. உரம் என்கிற ஊக்கம் இல்லாத ஒருவனை மரம் என்று திட்டுகிறார் திருவள்ளவர். இதோ திருக்குறள்-

*"உரம் ஒருவர்க்கு உள்ள வெறுக்கை*
*அஃது இல்லார் மரம் மக்கள் ஆதலே வேறு"*

ஒருவருக்கு ஊக்கம் மிகுதியே வலிமையாவது அவ்வூக்கம் இல்லாதார் மக்களாகார்; மரங்கள் ஆவார். என்பது இதன் பொழிப்புரை.

ஊக்கம் இல்லாத மனிதனை மரம் என்கிறார் வள்ளுவர் நியாயமா? கண்டிப்பாக நியாயம் இல்லை. ஏன் மரம் கூட உயிர் வாழ வேண்டும், உயரவேண்டும் என்ற வேட்கையும், முயற்சியும் ஆவேசமும் உடையது. எதுவும் இல்லாத மனிதனை மரம் என்று எப்படிச் சொல்லலாம்.

எல்லா மரமும் ஒளியை நோக்கியே தன் பயணத்தைத் தொடங்கும். எப்படியாவது வெளிச்சத்தில் பிரவேசிக்க ஏங்கும் தாவர தர்மம் கூட இன்றி இருட்டில் புதைய விரும்பும் மனிதன் மரமா? மரத்தை விட மட்டமா?

மாமரத்தின் ஒரு கிளையை எப்போதாவது முறித்தது உண்டா? அப்படி முறித்தாலும் மாமரம் மௌனமாக உங்கள் அழிப்பை ஆமோதித்தது உண்டா? "மனிதா! என் ஒரு கிளையையா முறித்தாய்?.. பார் பார் பத்துக் கிளையாய் படர்ந்து நான் தழைத்து நிற்கிறேன் பார்" என்று காற்றில் தலையாட்டும் மாமரத்தின் மமகாரம் மகத்துவம் மிக்கது.

பலமற்ற மரம் முருங்கை. ஆடிக்காற்று அதை ஆட்டிப்பார்ப்பது மட்டுமல்ல, அடியோடு வீழ்த்தியும் விளையாடும் மொளுக்கென்று முறியும் முருங்கைக்குக் கூட மூர்க்கம் உண்டு. கவனித்தது உண்டா? வெட்டியெறிந்த வெற்றுத் துண்டு கூட மண்ணில் புதைந்து வேர்விடத்துடிக்கும், தளிர்களை விரிக்கும் விருட்டென்று எழுந்து விருட்சமாய் விஸ்வரூபம் காட்டும். மாமரம் வெட்டிய இடத்தில் முளைக்கிறது! முருங்கையோ வெட்டியெறிந்த துண்டு கூடத் தழைக்கிறது! வாழவேண்டும் என்கிற வைராக்கியம், வெறி, வேகம் மரத்திற்கு இருக்கிறதே! எத்தனை மனிதருக்கு இருக்கிறது?

அவுஸ்திரேலியக் காடுகளில் ஒருவகைப் புல்மரம் இருக்கிறது. அப்புல்மரம் கொடிய தீ பரவிக் காட்டையே அழித்தாலும் அது மட்டும் அழிவதில்லை.... மேற்பகுதி கருகினாலும் அதன் குருத்துமட்டும் அழிவதே இல்லை. என்றாவது மழை பெய்தாலும் குருத்துகிளம்பும் தாவரம் சிலிர்க்க முடிகிறது. இந்த மரங்கள் என்ன மனிதனை விட மட்டமா?

வாழ வேண்டும், வாழ்ந்தே ஆகவேண்டும் என்கிற வைராக்கியமும் ஆவேசமும் மரம் நடத்தும் மகத்தான பாடம். இந்த உயர்ந்த மரங்களை ஊக்கம் இல்லாத மனிதனோடு வள்ளுவர் ஒப்புமைகாட்டி விட்டாரே. வள்ளுவரை மறுக்கலாமா? ஏன் மறுக்கக் கூடாது?

ஒரு மருத்துவமனையில் இறந்து போனவர்களின் பிணங்களை போஸ்ட் மார்ட்டம் செய்துவிட்டு வானில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள். பாதிவழியில் ஒரு பிணம் எழுந்து உட்கார்ந்து டிரைவர் தோளைத் தட்டிக் குடிக்கத் தண்ணீர் கேட்டது. டிரைவர் அலட்சியமாக, "செத்தவனுக்கு எதுக்குத் தண்ணீர் பேசாமல் படு" என்றார் .பிணம் அலறியது. "ஐயா நான் சாகவில்லை, உயிரோடு இருக்கிறேன்" என்றது. மீண்டும் டிரைவர் அலட்சியமாக "எவ்வளவு பெரிய வைத்தியர் அவர்... அவரே சொல்லிவிட்டார் நீ செத்துவிட்டாய்... என்று. அவர் சொன்னால் சொன்னதுதான், நீ உயிரோடு இருக்கிறேன் என்று சொன்னால் நம்புவோமா?" என்றார்.

இந்தக் கதைமாதிரி வள்ளுவர் சொன்னால் சொன்னதுதான் என்று சாதிக்க வேண்டாம். அழிப்பை எதிர்க்கும் ஆவேசத்தை மரங்களிடம் இருந்து படியுங்கள்...! ஒரு மரத்துக்கு இருக்கும் ஊக்கம் உங்களுக்கும் இருக்குமென்றால் வெற்றி நிச்சயம். மாமனிதன் வள்ளுவர் எதிர்பார்க்கும் ஊக்கம் உங்களுக்கு இருந்தால் வெற்றி சர்வ நிச்சயம்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24 ஜனவரி 2011 திங்கட்கிழமை

# வாழைச் செய்கையில் பாரம்பரிய, நவீன தொழில்நுட்பங்களின் விரிவாக்கம்

( தொடர்ச்சி)

### 6. வாழைப்பழத்துக்கான சந்தை வாய்ப்பு சந்தை முறைகள்

திருநெல்வேலி , மருதனார்மடம், சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, சங்கானை, பருத்தித்துறை ஆகிய முக்கிய சந்தைகளுக்கு வாழைக் குலைகள் எடுத்துச்செல்லப்பட்டு சந்தைப்படுத்தப் பட்டு வருகின்றது. மேலும் நீர்வேலியில் அமைந்துள்ள வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்க நிலையத்திலும் இதன் யாழ். நகர் கிளையியலும் வாழைக் குலைகள் சந்தைப்படுத்தப் பட்டு வருகின்றது. அதேவேளை தனிப்பட்ட வியாபாரிகள் மற்றும் சில கம்பனிகள் நேரடியாக வாழைச் செய்கையாளர்களின் தோட்டங்களுக்கு சென்று குலைகளை கொள்வனவு செய்கின்றனர்.

### சந்தையில் வாழைப்பழ விலை

போட்டி அடிப் படையிலான சந்தைப் பொருளாதார முறைமை மேம்படுத்தப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் வாழைப் பழத்தின் விலையானது வர்க்கம், குலையின் தரம், விற்பனை மாதங்கள் என்பவற்றின் அடிப் படையில்மாறுகின்றது.


மூன்று இன வாழைப்பழங்களினதும் விலை 2009 ஆம் ஆண்டு மற்றைய இரு ஆண்டுகளினை விட மிக அதிகமாகவிருந்தது. 2008 நவம்பர் மாதத்திலேற்பட்ட நிசாப் புயலுடனான உயர் மழை வீழ்ச்சி காரணமாக வாழைச் செய்கை முற்றாகச் சேதமடைந்தமையே இதற்குரிய பிரதான காரணம் ஆகும். இந் நிலையில் 2009 ஆம் ஆண்டுக்குரிய விலை போக்கு வழமையில் இருந்து பாரிய விலகலைக் காட்டுகின்றது.

உரு 5 ஆனது 2010 இல் வாழைப்பழத்தின் விலை உயர்வடைந்துள்ளதை வெளிப்படுத்துக்கின்றது. ஏ-9 வீதியானது போக்குவரத்துக்கு திறக்கப்பட்ட பின்னர் வாழைப்பழத்துக்கு கூடிய சந்தை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேவேளை மாதங்களுடன் வாழைப்பழத்தின் விலை குறிப்பிடத்தக்களவு மாறியுள்ளது. வாழைப்பழத்தின் விலை ஆவணி, புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் அதிகமாக இருந்தது. வைகாசி, ஆனி, ஆடி, மாதங்களில் உயர் வேகத்துடனான சோளகக் காற்று வாழைச் செய்கையை பாதிப்புறச் செய்கின்றது. இதன் காரணமாக அடுத்துவரும் மாதங்களில் வாழை உற்பத்தி அளவு, தரம் என்பன வீழ்ச்சி அடைகின்றது.

வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு சுற்றுலாப் பயணம் வருபவர்களின் எண்ணிக்கை வாழைப்பழத்தின் விலைப் போக்கினைத் தீர்மானிக்கும் மற்றொரு காரணியாகவுள்ளது. இவ் வருகையானது ஏ-9 வீதி திறக்கப்பட்டதும் மிக அதிகமாகவிருந்தது. எனினும் அது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது. இவ்வருகையானது ஓர் சமநிலையை எட்டும் வரை விலைப் போக்கினை சரியாக எதிர்வு கூறல் கடினமானதாகவிருக்கும்.

வன்னி மாவட்டத்தில் தற்பொழுது ஆரம்பித்துள்ள வாழைச் செய்கையும் யாழ்.மாவட்டத்தில் வாழைப் பழத்தின் விலையை தீர்மானிக்கும் காரணியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆவணி, புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் கோயில்களில் திருவிழாக்களுக்கு கூடியளவு கதலி வாழைப்பழம் பயன்படுத்தப்படுகின்றது. இக்காரணியும் கதலி வாழைப்பழத்தின் விலை




அதிகரிப்புக்குரிய காரணியாகும்.

கப்பல் வர்க்க வாழைப்பழங்களின் விலை மற்றைய வர்க்கங்களின் விலையை விட கூடுதலாக இருந்தது. இவ் விலை வித்தியாசமானது எல்லா மாதங்களிலும் கூடியளவு வேறுபாட்டைக் கொண்டுள்ளது. எனவே கப்பல் வர்க்க வாழைச் செய்கையை அதிகரித்தால் கூடியளவு வருமானத்தை விவசாயிகள் பெற உதவியாக அமையும் எனினும் விலை அடிப்படையில் இம் மாற்றத்தினை செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. இவ் வர்க்கத்தினை கூடியளவில் பாதிக்கும் வாழைக் குருக்கன், பனாமா வாடல் ஆகிய நோய்கள் இதன் விரிவு படுத்தலை மட்டுப்படுத்தும் பிரதான காரணிகளாக உள்ளது.தொற்றற்ற வாழைக் குட்டிகளை பயன்படுத்தல் இந்நோய்களை முகாமைத்துவம் செய்வதில் அடிப்படை முறைமையாக உள்ளது. எனினும் நோய்கள் அற்ற ஆரோக்கியமான நடுகைக் குட்டிகளை உள்ளூரில் பெற முடியாத நிலை காணப் படுகின்றது.

### 7. பிரதேச ரீதியாக வாழைப்பழ உற்பத்திப் பரம்பலும் நுகர்ச்சித்தேவையும்

ஆண்டொன்றில் 24020 மெற்றிக்தொன் வாழைப் பழம் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

உற்பத்தி மற்றும் நுகர்ச்சிப் பகுப்பாய்வானது நாளொன்றுக்கான வாழைப்பழ தலா நுகர்ச்சி 100 கிராம் என்னும் அடிப்படையில் மாவட்டத்தின் ஆண்டுக்கான நுகர்ச்சித் தேவை 22060 மெற்றிக் தொன் என்பதையும் மிகை உற்பத்தி 1960 மெற்றிக்தொன் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. அதேபோல நாளொன்றுக்கான வாழைப்பழ தலா நுகர்ச்சி 75 கிராம் என்னும் அடிப்படையில் நுகர்ச்சித் தேவை 16545



மெற்றிக்தொன்னாகவும் மிகை உற்பத்தி 7475 மெற்றிக் தொன்னாகவும் காணப்படுகின்றது. வாழைப்பழ தலா நுகர்ச்சியானது பிரதேசரீதியாக வேறுபடுகின்றது. வாழைப்பழம் கூடுதலாகக் கிடைக்கும் பிரதேசங்களில் வாழைப்பழ நுகர்ச்சி கூடுதலாகவும் மற்றைய பிர தேசங்களில் நுகர்ச்சி குறைவாகவும் காணப்படு கின் றது.

பிரதேசரீதியாக உற்பத்தி மற்றும் நுகர்ச்சித் தேவையை நோக்கும் போது கோப்பாய் மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் மாத்திரமே மிகையான வாழைப்பழ உற்பத்தி காணப்படுகின்றது. அதே நேரத்தில் நாளொன்றுக்கான வாழைப்பழ தலா நுகர்ச்சி 75 கிராமாக இருக்கும் நிலையில் தெல்லிப் பழை பிரதேச செயலர் பிரிவிலும் மிகையான வாழைப் பழ உற்பத்தி காணப்படுகின்றது.

மிகையான வாழைப்பழ உற்பத்தி காணப்படும் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து உற்பத்தி குறைந்த பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்குரிய போக்கு வரத்து வசதிகளை ஏற்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் அப்பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் பழங்களைத் தற்காலிகமாகச் சேமிப்பதற்குரிய களஞ்சியங்களையும் விற்பனை செய்வதற்குரிய கட்டமைப்புக்களையும் உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோல் மாவட்டத்தின் மிகையான உற்பத்தியினை தம்புள்ள, கொழும்பு போன்ற வெளி மாவட்டங்களுக்கு சேதம் ஏற்படுத்தாதவாறு கொண்டு செல்வதற்குரிய வசதிகளையும், எடுத்துச் செல்லப்பட்ட பழங்களை அங்கு விற்பனை செய்வதற்கும் உரிய கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்ட வேண்டும்.

மேலும் தற்பொழுது கொள்வனவு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்த வேண்டும். தனியார் நிறுவனம் ஒன்று எளிதில் பழுதாகக் கூடிய விவசாய உற்பத்திகளை குளிரூட்டப்பட்ட ஊர்திகளை பயன் படுத்தி நாட்டின் பலவேறு பகுதிகளில் அமைந்திருக்கும் விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச்சென்று விநியோகம் செய்யும் நடைமுறை ஒன்றை உருவாக்கவுள்ளதாகத் தெரியப்படுத்தியுள்ளது.

### 8. நடுகைக்கான குட்டிகள் (உறிஞ்சிகள்)

வாழைக்குருமன், பனாமா வாடல் நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வாழை அடியிலிருந்து பெறப் படும் குட்டிகளை நடுகைக்குப் பயன்படுத்துகின் றனர். இது நோய் பரம்பலுக்கும் உற்பத்தி இழப்புக்கும் வழி வகுக்கின்றது. பல வாழைச் செய்கையாளர்கள் 6-7

**சி.சிவகுமார்**
*பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)*
*யாழ்ப்பாணம்.*

மாத வாழைக் குட்டிகளை நடுகைக்கு பயன்படுத்து கின்றனர். இது வாழையின் பூக்கும் பருவத்தில் காணப் படுவதனால் வாழையின் முதலாவது சந்ததியில் தரம் குறைந்த சிறிய வாழைக்குலைகளையே பெறுவதற் குரிய காரணிகளிலொன்றாக அமைகின்றது.

புதிதாக நடுகை செய்யப்படும் வாழைக்கு அருகில் உருவாகும் குட்டிகள் கன்னிக்குட்டிகள் (முதலாவது சந்ததி) எனப்படும். இவற்றை நடுகை செய்யப் பயன் படுத்தாது கன்னிக்குட்டிகள் வளர்ந்து பொத்தி தோன்றும் போது அதிலிருந்து உருவாகும் குட்டிகள் மற்றும் அதனைத் தொடர்ந்து உருவாகும் குட்டிகளில் பொத்தி தோன்றும் போது உருவாகும் குட்டிகளும் நடுகைக்கு உகந்ததாகும். இவை நாம்பன் குட்டிகள் எனப்படும். சிறந்த விவசாயிகள் ஆரோக்கியமான நோய்களற்ற 3-4 மாத வயதுடைய $2\frac{1}{2}$ - 3 அடி உயரமுடைய வாழைக் குட்டிகளை (நாம்பன் குட்டிகள்) நடுகை செய்கின் றனர். இது நல்ல தரமான பெரிய குலைகளை பெறுவதற்கு உதவியாக அமைகின்றது.

நோயற்ற வாழைக் குட்டிகளை நடுகைக்குப் பயன் படுத்துதல் நோய்களை முகாமைத்துவம் செய்வதற் குரிய ஒரு முறையாகும். ஆனாலும் போதியளவு நோய் களற்ற தரமான குட்டிகளை பெற முடியாத நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் யு.என்.டி.பீ நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் விவசாயத்திணைக்களம் விரிவாக்கம் யாழ்.மாவட்டத்தில் வாழைச் செய்கையை மேம்படுத் தல் தொடர்பான வேலைப்பட்டறை ஒன்றை 12.05.2007 ஆம் திகதி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடத்தியது. இந்த வேலைப்பட்டறையில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி, துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், விவசாய திணைக்கள ஆராய்ச்சி பிரிவின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், விவசாய திணைக்கள விரிவாக்க உத்தியோகத்தர்கள், வங்கியாளர்கள், வலி.கிழக்கு வாழைக் குலை விற்பனை கூட்டுறவுச் சங்க நிர்வாகசச் சபை உறுப்பினர்கள் மற்றும் வாழைச் செய்கையாளர்கள் ஆகியோரது பங்குபற்றலுடன் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் ஆய்வு செய்யப்பட்டன. இவ் வேலைப் பட்டறையில் கலந்து கொண்ட விவசாயிகளினால் முன்வைக்கப்பட்ட நோய்களற்ற தரமான நடுகைக் குட்டிகளை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்ற பிரச்சினைக்கு தீர்வாக இழைய வளர்ப்புக் குட்டிகளை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என தீர் மானிக்கப்பட்டது.

| இரசாயனப் பெயர் | கலவை அளவு | 16 லீற்றர் தாங்கிக்கு |
|---|---|---|
| பிப்றோனில் 50கிராம் /லீற் எஸ்.சி | 12மிலீ/10லீற்றர் | 19 மி.லீ |
| ரெபியூபெனோசைட் 240கிராம் /லீற் எஸ்.சி | 20மிலீ/10லீற்றர் | 32 மி.லீ |
| மெதொக்சி பெனோசைட் 240கிராம்/லீற் எஸ்.சி | 10மிலீ/10லீற்றர் | 16 மி.லீ |
| குளோர் புளுசரோன் 50கிராம்/லீற் ஈ.சி | 8மிலீ/10லீற்றர் | 12 மி.லீ |
| குறோமோ பெனோசைட் 50கிராம் /லீற் எஸ்.சி | 10மிலீ/10லீற்றர் | 16 மி.லீ |
| நவலுறோன் 100கிராம/லீற் ஈ.சி | 10மிலீ/10லீற்றர் | 16 மி.லீ |
| குளோர்பைறிபொஸ் 200கிராம்/லீற் ஈ.சி | 40மிலீ/10லீற்றர் | 64 மி.லீ |
| குளோர்பைறிபொஸ் 400கிராம்/லீற் ஈ.சி | 20மிலீ/10லீற்றர் | 32 மி.லீ |
| பென்தியோன் 500கிராம்/லீற் ஈ.சி | 50மிலீ/10லீற்றர் | 80 மி.லீ |
| எசபேற் 75% எஸ்.பி | 10கிராம்/10லீற்றர் | 24 கிராம் |

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை



ஒரு சமுதாயத்தின் விருத்திக்கு மாணவர்களைத் தயார் நிலைப்படுத்துகின்ற பெரும் பங்களிப்பினை பாடசாலைகளே ஏற்படுத்திக் கொடுகின்றன என்பது வெளிப்படையான தொன்றே.

அந்தவகையில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையானது மாணவர்களிடையே அறிவு, ஆற்றல், அமைதி, பண்பாடு போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்வதில் பெரும் பங்களிப்பாற்றுகின்றது.

மக்களின் அழியாச் சொத்தாகிய கல்வியை வளப்படுத்துகின்ற அடிப்படைப் பணியை ஆரம்ப நிலைப் பாடசாலைகளே ஆற்றுகின்றன. அவ்வரிசையில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையானது தனக்குரித்தான அப்பணியைச் செவ்வனவே மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பாரம்பரிய பண்புகளையும் கலாசார விழுமியங்களையும் தமிழ்ப் பண்பாட்டினையும் கொண்டு விளங்கும் யாழ்.மண்ணில் நகர்ப் பகுதியின் மையத்தில் அரசடி வீதியில் யாழ் .இந்து மகளிர் கல்லூரியின் தென் கிழக்கு மூலையில் அமையப்பெற்றுள்ளது இந்தப் பாடசாலை.

சிறுவயது முதல் பண்பு நிறைந்த மகளிரை உருவாக்குகின்ற இப்பாடசாலை இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையாக விளங்குவது சிறப்புடைய அம்சமாகும். 1978 ஆம் ஆண்டு வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக இருந்து கல்வி மறுசீரமைப்பிற்கு அமைவாக 1979 ஆம் ஆண்டு விசாலாட்சி சிவ குருநாதர் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு வழங்கிய காணியில் தென் கிழக்கு மூலைப் பகுதியில் இப்பாடசாலை தோற்றம் பெற்றது. 1979 ஆம் ஆண்டு 5ஆசிரியர் களுடனும் 153 மாணவர்களுடனும் தனது கல்விச் சேவையை செம்மையாக வழங்கத் தொடங்கியது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இருந்து பாடசாலை தனியாக்கப்பட்ட போது பௌதீகவளங்கள் மிகவும் குறைவாகவும் இருந்தன. மாணவர் தொகை குறைவாகவும் இருந்தபடியால் சில ஆசிரியர்களே கடமை புரிந்தார்கள்.

இந்தப் பாடசாலையின் முதல் அதிபராகத் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா பதவியேற்றார். பாடசாலையின் வளங்கள் சீராகக் கிடைக்கப் பெறாவிட்டாலும் அதிபர், ஆசிரியர்களால் ஒன்றிணைந்து வழங்கப்பட்ட சேவை மாணவர்களின் கல்வித் தரத்தையும் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும் உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்தது.

நல்லூர் அயலிலும் மாநகர சபைக்கு உட்பட்ட பிள்ளைகள் மட்டும் இப்பாடசாலையின் ஆரம்பத்தில் கல்வி கற்றார்கள். ஆனால் தற்போதைய பாடசாலை வளர்ச்சிப் போக்கில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை என்பதால் பல பிரதேசங்களைச் சேர்ந்த சிறுமிகளும் இப் பாடசாலையில் தமது கற்றலை ஆரம்பித்துள்ளார்கள்.

இடப்பெயர்வு, வளத் தட்டுப்பாடு, ஆசிரியர் பற்றாக்குறை, அரசுகளின் மாற்றாந்தாய் மனப்பான்மை என்பன இருந்தபோதும் கற்றல், கற்பித்தல் இணைப்பாடச் செயற்பாடுகள் தளம்பல் அடையாமல் தொடர்ச்சியாகத் தனது கல்விச் சேவையை இந்தப் பாடசாலை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் ஒரு சிறிய பாடசாலையாகக் காட்சியளித்த யாழ். இந்து மகளிர் பாடசாலை மாடிக் கட்டடங்கள் , அழகிய சிறுவர் பூங்கா, மனங்கவர் விளையாட்டு முற்றம் செயற்பாட்டறை எனப் பல கொண்டதாய் அமையப் பெற்று பாடசாலையின் வளர்ச்சிப் பாதையை எடுத்துக் காட்டுகின்றது.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்ற முதுமொழி எமக்கு உணர்த்துவது யாதெனில் சிறுபராயத்தில் நாம் பெற்ற கல்வியே பசுமரத்தாணி போல் எம் மனதில் பதிந்து எமது உயர்கல்விக்கு அடித்தளம் இட்டது போலாகும். கல்லூரியின் அன்றைய பெற்றோர், ஆசிரியர் சங்கச் செயற்குழுவுடன் சமூகமாகியிருந்த வட்டாரக் கல்வியதிகாரி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் நிர்வாக அடிப்படையில் மட்டும் இப்பாடசாலை பிரிக்கப்படுகின்றபடியால் யாழ். இந்து மகளிர்

நிஸா,வாணி

கல்லூரியின் வளவுக்குள் அமைந்திருக்கும் இந்தப் பாடசாலைக்கு ''யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை'' எனப் பெயர் உருவானது.

1980 ஆம் ஆண்டு 251 மாணவர்களும் அதனைத் தொடர்ந்து, 1981 ஆம் ஆண்டு 343 மாணவர்களும் 1995 ஆம் ஆண்டில் 775 மாணவர்களும் 2004 ஆம் ஆண்டு 531 மாணவர்களும் கல்வி கற்றார்கள்.

(தொடரும்)

# கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தை வளர்க்கும் சுண்டுக்குளி புனித அருளப்பர் ஆலயம்

யோகதாஸ்

(சென்றவாரத்தொடர்ச்சி.....)



யாழ்ப்பாணம், கச்சேரியை அண்மித்த வரலாற்றுப் பழைமை வாய்ந்த சுண்டுக்குளி கிராமத்தில் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயம் அழகுற காட்சியளிக்கின்றது.

இந்த ஆலயத்தில் அருட்திரு யோ. பிரான்சிஸ் சேவியர் அடிகள் துணைப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். இவரது முயற்சியால் பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட ஆலயசபை உருவாக்கப்பட்டது. சிறுவயது முதல் பீடப் பணியாளர் சபை, பாடகர் குழு, இளைஞர் அமைப்புக்களில் ஊக்கமுடன் உழைத்தவரான சொலமன் சூ.சிறில் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். யாழ்.மாநகரசபை உறுப்பினராகவும் நாடளுமன்ற உறுப்பினராகவும் இருந்த இவர் ஆலயம் பலதுறைகளிலும் வளர்ச்சி பெற உதவியுள்ளதோடு கால் நூற்றாண்டுக்கு மேலாகச் செயலாளராக இருந்தும் வருகிறார். இவ் ஆலயத்தைச் சேர்ந்த அ.யோ.சுவாம்பிள்ளை, நீ.அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் மாநகரசபை உறுப்பினர்களாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1969 ஆம் ஆண்டு ஆயர் மேதகு ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை நற்கருணைப் பக்தியை வளர்க்கும் பொருட்டு தோலகட்டி செபமாலைத் தாசர்சபைத் துறவியரைக் குருமனையில் குடியமர்த்தினார். சபையின் அதிபராக இருந்த ஜே.பி.இ.செல்வராஜா அடிகளும் பங்குந்தந்தை ஏ.இ.இராசரட்ணம் அடிகளும் இணைந்து, கட்டடப் பொறியியலில் விற்பன்னரான அருட்திரு வேதநாயகம் அடிகளாரின் உதவியுடன் குருமனையை விஸ்தரித்தனர்.துறவிகளின் உள் இருக்கைகளும் அமைக்கப்பட்டன. துறவிகளின் செபவாழ்வும் நல்வழிகாட்டலும் பல குருக்களின் உருவாக்கத்துக்கு வழிகோலின.

1971 ஆம் ஆண்டு யாழ். ஆஸ்பத்திரி வீதியை விஸ்தரிக்கும் நோக்குடன் யாழ்.மாநகர சபை ஆலயத்தின் முன் முகப்பு மேடையுடன் மணிக்கூட்டுக் கோபுரத்தையும் உள்ளடக்கிய காணியைச் சுவீகரிக்க எல்லையிட்ட போது பங்குத்தந்தை, மக்கள் சாத் வீகப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் அந்த முயற்சி தோல்விகண்டது.

யாழ்.மறை மாவட்டத்தின் ஆயராக 1973 ஆம் ஆண்டு நிய[illegible] மனம் பெற்ற அரு[illegible] வ.தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு வரவேற்பு விழா நடத்தி 'LAMP' என்னும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

இந்த ஆலயத்தின் பரிபாலகர்களாக இருந்தபோது மூன்று குருக்கள் ஆயர்களாக நியமனம் பெற்றுச் சென்றமை பெருமைக்குரிய விடயமாகும். 1974 ஆம் ஆண்டு பணிபுரிந்த அருட்கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் 1981 ஆம் ஆண்டு கடமையாற்றிய அருட்கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை அடிகள் 1985 ஆம் ஆண்டு பணியாற்றி அருட்கலாநிதி இராயப்பு யோசேப் அடிகள் ஆகியோர் அவ்வப்போது ஆயராக நியமனம் பெற்றுப் பங்குத் தளத்திலிருந்து வெளியேறினர்.

மேலும் தமிழறிஞர் நல்லூர் சுவாமி எஸ்.ஞானப்பிரகாசம் அடிகள், கல்வியாளர் அருட்திரு [illegible] ஆகி[illegible]த்தில் பணியாற்றியுள்ளனர்.

அருட்திரு கிங்ஸிலி சுவாம்பிள்ளை அடிகளின் பெரும் முயற்சியால் 1982 ஆம் ஆண்டு மீண்டும் தனிப் பங்காகச் செயற்படத் தொடங்கியது. பங்குத்தந்தையாக அருட்திரு சாள்ஸ் குணம் அடிகள் பொறுப்பேற்றார். ஆலயத்தைச் சுற்றி மதிற் சுவர்கள் அமைக்கப்பட்டன.

1985 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாகத் தற்போதைய மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை பொறுப்பேற்றார். இவரது நிர்வாகத்தின் கீழ் ஆலயத்தில் பெரும் மாற்றங்களும் அபிவிருத்திகளும் இடம்பெற்றன. உட்புற, வெளிப்புறச் சுவர்கள், மணிக்கூட்டுக் கோபுரம் என்பவற்றை புனரமைத்து வர்ணம் பூசிப் புதுப் பொலிவுடன் திகழச்செய்தார்.

புத்தெழுச்சி பெற்றுவரும் வேளையில் 1987 இல் ஏற்பட்ட போர் நடவடிக்கையால் குரு மனையும், ஆலயமும் பெரும் சேதத்துக்குள்ளாயின. உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழும் மக்களின் உதவியுடன் திருத்தியமைத்து பழைய நிலைக்கு மெருகூட்டப்பட்டது. இடநெருக்கடியையும் பல்வேறு தேவைகளையும் கருத்திற்கொண்டு மண்டபமொன்று அமைக்கப்பட்டது.

ஆலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி 1988 ஆம் ஆண்டு எட்மன் ராஜன் டொமினிக் என்பவரின் உதவியைக் கொண்டு ஆலய முன்றலில் திராவிடக்கலை அம்சங்களுடன் அரங்கு அமைக்கப்பட்டு திருவிழாக் கலைநிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. 1933 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மின்சார இணைப்புக்களைச் சீரமைத்தல் மற்றும் திருத்தவேலைகள் பங்குத் தந்தை இரா.யோசோப்பு அடிகளின் திட்டமிடலிலும் நேரடிக் கண் காணிப்பிலும் உருப்பெற்றன.

திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழா 1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. நூற்றாண்டுச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டதோடு முதலியார் யோசேப் புவிமன சிங்கி அவர்களால் 1893 ஆம் ஆண்டில் பாடப்பெற்ற ''சஞ்சுவாம் அம்மானை'' யாழ். ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பெருமுயற்சியால் மூன்றாவது பதிப்பாக வெளியிடப்பட்டது.

கலைஞர்களுக்கும் கலைப் படைப்புகளுக்கும் இங்கே





பஞ்சமில்லை சஞ்சுவாம் முனிந்திரனின் பாடல்கள், விருந்தங்கள் மற்றும் வெண்பாக்கள், கொண்டிச்சிந்து போன்ற ஆக்கங்களையும் சஞ்சுவாம் பிரலாப காதல், மத்தேசு மவுளும்மா, சவீன கன்னி சபா போன்ற நாட்டுக் கூத்துக்களையும் எழுதி மேடையேற்றி ஜி.எஸ் பொன்னையா பிள்ளை என்னும் இவ்வூர்வாசி அக்காலத்தில் தமிழுக்கும் சமயத்துக்கும் புகழ் சேர்த்துள்ளார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 ஜனவரி 2011 திங்கள்கிழமை



எகிப்து தலைநகர் கெய்ரோவில், அந்நாட்டு அதிபர் ஹோஸ்னி முபாரகை (வலது), பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் மிச்சலே அலியோட்-மாரியோ சந்தித்து பேசினார்.

# 2025ஆம் ஆண்டில் பிரிட்டன் அரசர் வில்லியம்

லண்டன், ஜன. 24

பிரிட்டன் அரசராக 2025 ஆம் ஆண்டில் வில்லியம் பொறுப் பேற்பார் என்றும் உலகின் மிகப் பெரிய சக்தியாக சீனா உருவெடுக் கும் என்றும் பிரிட்டன் மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

எம்.எஸ்.என். இணைய நிறு வனம் தனது 15 ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு உலகம் வரும் 2025ஆம் ஆண்டில் எப் படி இருக்கும் என்பது குறித்து பிரிட்டன் மக்களிடையே ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது.

ஒரு லட்சம் பேரிடம் நடத் தப்பட்ட இந்த கருத்துக் கணிப் பில் வரும் 2025ஆம் ஆண்டில் வில்லியம் பிரிட்டன் மன்னராக பொறுப்பேற்பார் என்று 50 சத வீதம் பேர் தெரிவித்துள்ளனர். உலகின் மிகப்பெரிய சக்தியாக, சீனா உருவெடுக்கும் என 60 சத வீதம் பேர் கூறியுள்ளனர். 33 சதவீதம் பேர் பிரிட்டன் சுயாட்சி பெற்ற நாடாக மாறும் என்று தெரி வித்துள்ளனர். அதேபோன்று தொழிலாளிகள் ஆட்சிக்கு வரு வர் என்றும் ஒருதரப்பினர் கருத்து தெரிவித்துள்ளனர். நான்கு சத வீதம் பேர் செவ்வாய் கிரகத்தில் மக்கள் நிரந்தரமாக குடியேறுவர் என்றும் விண்வெளியில் மக் கள் வசிக்கத் தொடங்குவர் என் றும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து எம்.எஸ்.என். நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மேட் பால் கூறுகையில், ''மனி தர்களின் வாழ்க்கை தொடக்கம் முதல் பல்வேறு மாற்றங்களை சந்தித்து வருகிறது. எனவே எதிர் காலம் எப்படி இருக்க வேண் டும் என்று மக்கள் எதிர்பார்க்கின் றனர் என்பதை தெரிந்து கொள்வ தற்காவே இப்படி ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது''- என்றார். (ம)

# பாகிஸ்தானில் அமைதி ஏற்படுத்த வேண்டும் கனடாவில் முஷாரப் ஆவேசமாக உரை

கனடா, ஜன. 24

கனடாவின் வான்கூவரில் விரிவுரைகளை நிகழ்த்துதற் காக விஜயம் செய்துள்ளார் பாகிஸ் தானின் முன்னாள் தலைவர் பர்வேஷ் முஷாரப். தான் மீண் டும் பாகிஸ்தானில் பதவிக்கு வருவதற்கான ஆதரவினைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட் டுள்ளார்.

இந்த விரிவுரை நிகழ்ச்சி யில் முஷாரப்புக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள் ளது.

மக்கள் மத்தியில் பேசிய அவர் மீண்டும் ஒரு தடவை ஒரு சிவிலியனாக பாகிஸ் தானை ஆட்சி செய்ய விரும்புவதாக கூறினார்.

''அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக்'' என்ற பெயரில் தான் ஆரம்பித்துள்ள புதிய கட்சியின் கிளை களைகனடாவின் வான் கூவர், டொரன் டோ, கல்காரி ஆகிய இடங்களில் நிறு வப்போவதாக வும் அறிவித் தார்.



பாகிஸ்தா னில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த வேண் டும் என்பதே தனது எண்ணம் என்றும் தற் போதைய தலை மைத்துவம் நேர்மையா கச் செயற்பட்டால் அது சாத்திய மாகும் என்றும் அவர் கூறியுள் ளார்.

பல ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் வழங்கவேண்டியி ருந்த மில்லியன் கணக்கான டொலர் கடனை விட்டுக் கொடுத்தமைக்காக கனடா வுக்கு அவர் நன்றியும் பாராட் டும் தெரிவித்தார். (ம)

# சூடானில் பிரிவினை வாதத்துக்கு ஆதரவு

சூடான், ஜன. 24

சூடானில் சமீபத்தில் நடந்து முடிந்த பிரிவினைக்கான பொது வாக்கெடுப்பில், 99 சதவீத ஓட்டுகள் பிரிவினைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான சூடானை, வடக்கு, தெற்கு என்று இரண் டாகப் பிரிப்பது குறித்த பொது வாக்கெடுப்பு இந்த மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை நடந்தது.

தற்போது அதன் வாக்கு எண்ணும் பணிகள் நடந்துவருகிறது. முடிவு எதுவாக இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அந்த நாட்டு அதிபர் ஒமர் அல் பஷீர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த அந்த நாட்டு அதிகாரி கள், 99 சதவீதம் வாக்குக்கள் பிரிவினைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டுள்ளது என்றனர். அதிகா ரப்பூர்வமான முடிவு, பெப்ரவரி 6 அல்லது 14ஆம் திகதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படு கின்றது. (ம)

# ஜப்பானில் மீண்டும் பறவைக் காய்ச்சல்

டோக்கியோ, ஜன.24

ஜப்பானில் மீண்டும் பறவைக் காய்ச்சல் பரவி வருவதை கண்ட அந்த நாட்டு அரசு அதனை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. ஜப்பானின் மேற்கு பகு தியை சேர்ந்தது மியாஸாகி. இப்பகுதி கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வரும் கோழிகளுக்கு பறவைக் காய்ச் சல் நோய் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து முதற் கட்ட மாக 20 பண்ணை மையங்களில் வளர்க்கப்பட்டு வரும் கோழிகள் அழிக்கப்பட்டன. கடந்த 2007ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட பறவைக் காய்ச்சல் நோய் மியாஸாகி பகுதியில் இருந்து தான் தோன்றியது என்பது குறிப் பிடத்தக்கது. (ம)

# படமாகிறது சதாம் உசைன் எழுதிய கதை

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசைன் சர்வாதிகாரியான இவர் 24 வருடங்களாக ஈராக்கில் ஆட்சி நடத்தினார். அமெரிக்க இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அவர் தூக்கிலிட்டு கொல்லப்பட்டார்.

இவர் ஜனாதிபதியாக இருந்தபோது கடந்த 1979 மற் றும் 2005ஆம் ஆண் டுகளில் 4 கதை களை எழுதி புத்தகங் களாக வெளியிட் டார். அவை ஈராக் கில் பெருமளவில் விற்றுச் சாதனை படைத்தன.

இந்தநிலையில் அவர் எழுதிய 'ஷபீபா அண்டு தி கிங் புரூஹோ' என்ற கதை கள் சினிமா பட மாக தயாரிக்கப் படுகிறது. இதை 'பேரமவுண்ட்' ஆங் கில படநிறு வனம் இவற்றை தயாரிக்க முடிவு செய்துள்ளது. இவற்றை இயக்கு நர் சாஜா பிரோன் கோகென் டைரக்டு செய்கிறார்.

நடிகர், நடிகை கள் தேர்வு தீவிர மாக நடைபெற்று வருகிறது. (ம)

**வீடு விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதிக்கு அருகில் சகல வசதியு டனும் 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0776032446, 0777652012.

**வீட்டுப்பணிப் பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை.

சம்பளம் ரூபா 10,000/=

தொடர்பு:- 0771965666

**வீடு வாடகைக்கு**

பிறவுன் வீதி, தொழில்நுட்பக் கல்லூ ரிக்கு முன்பாக மேல்மாடியில் சகல வசதி களுடன் 3 அறைகள் கொண்ட வீடு அலுவ லகங் கள், தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0772336238

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 Kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 26. 01. 2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளப்படும்.

T.P.NO:
021 222 2867, 077 6090926

**பால் விநியோகம்**

சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கச்சேரி, கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பிர தேசங்களுக்கு தினமும் காலை 7.00 மணிக்கு முன் னரும் மாலை 4.30 மணிக்கு முன்னரும் வீடுகளுக் கும் உணவகங்களுக்கும் தரமான பசுப்பால் விநி யோகிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: T.P. 0778694274

வீட்டுக்குத் தேவையான சகல பொருள்களுக்கும்



**டைடஸ் ஸ்ரோர்ஸ்**
பெற்றா. 2439422 லிபேட்டி பிளாசா.



தைத்திங்கள் 10ஆம் நாள் (24.01.2011) திங்கட்கிழமை

முகூர்த்த நேரம்: காலை 9.15 மணி முதல் மு.ப.10.37 மணிவரை

நாவற்குழி அருள்மிகு
ஹரிஹர புத்திர தான்தோன்றி ஐயனார் ஆலய
புனருத்தாரண
**மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 24.01.2011**

குருமார் விவரம்

பிரதிஷ்டா பிரதமகுரு சாதக கலாநிதி, ஆன்மீக பணியமிர்தன், சபரிமலை யாத்திரை குருசாமி, சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், அகில இலங்கை சமாதான நீதிவான், பிரசங்க வாரிதி, தேசமான்ய
**சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார்** B.A (Hons) M.A, நாவற்குழி

சர்வபோதகம்:
சிவாச்சார்ய சிரோண்மணி ஆ. கணேசக்குருக்கள்
தர்மகர்த்தா ஓமந்தைப் பிள்ளையார் ஆலயம்

சர்வசாதகம்:
சிவாச்சார்ய திலகம் பூரண சுதாகரக் குருக்கள்
பிரதமகுரு. தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம்.
சிவாச்சார்ய இசை[illegible] குருக்கள்
கோத்துக்குளம் மாரி[illegible]

ஆலய பூசகர்: சு. ஆனந்தன் ஐயா
அனைவரும் வருக ஐயப்பன் அருள் பெறுக.
ஆதீனகர்த்தா.

**பாராட்டும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்**



''செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்''
எனும் கூற்றுக்கமைய
''விஸ்வகீர்த்தி''
**திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் (J.P)**
கிளிநொச்சி மாவட்ட தென்னைஅபிவிருத்தி உத்தியோகத்தரும், சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளருமாகிய இவர் சிறந்த சமூகசேவை ஆற்றியமைக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவாகி ''விஸ்வகீர்த்தி' விருதினை சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் 5ஆவது ஆண்டின் நிறைவு விழாவில் பெற்று கௌரவப்படுத்தப்பட்டதனை இட்டும் அவரது பணிகள் தீவகத்தில் தொடரவும் வேண்டி எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களின் பெயரால் ''வாழ்க வளமுடன்'' என வாழ்த்துகின்றோம்.

செல்வி பொ.ஜமுனாதேவி
(அறங்காவலர்)
[illegible]
[illegible] பொறுப்பாளர்.

வட இலங்கை சர்வோதயமும்
புங்குடுதீவு, வாழ் மக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுடனான அணுசக்திப் பேச்சு; தோல்வியில் முடிந்ததாக அறிவிப்பு

ஜேர்மனி, ஜன.24

ஈரானின் அணுசக்தி திட்டங்கள் குறித்து ஈரானுடன் நடத்திய பேச்சுவார்த்தை ஏமாற்றமளிப்பதாக சர்வதேச நாடுகளின் குழுவொன்று தெரிவித்துள்ளது. ஈரானிய பிரதிநிதிகளுடன் துருக்கியில் இரு நாள்களாக நடைபெற்ற பேச்சுவார்தையில் பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண் டனர்.

பிரிட்டனைச் சேர்ந்த, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி பிரோனஸ் அஸ்டன் மேற்படி வெளிநாடுகளின் குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

இந்தப் பேச்சுவார்தையில் ஈரான் முன் நிபந்தனைகளுடன் பங்கு பற்றியதாக அவர் குற்றம் சுமத்தினார்.

அதேவேளை, பேச்சு வார்த்தைக்கான கதவுகள் திறந்தே இருப்பதாக அவர் கூறினார்.

அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஈரானிய அணுசக்தி திட்டங்கள் குறித்த கரிசனைகளை எதிர்கொள்வதற்கான இராஜதந்திர வழிமுறைகள் நீடிப்பதாக அமெரிக்கா நம்புகிறது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈரானிய பேச்சு வார்தைக் குழுவின் தலைவர் சயீட் ஜலீல் கருத்துத் தெரிவிக்கையில், ஈரான் முன் நிபந்தனைகள் எதுவும் விதிக்க வில்லை என்று கூறினார்.

ஆனால், எந்தவொரு தீர்வும் ஈரானிய அணுசக்தி தொழில்நுட்ப உரிமை உட்பட நாடுகளின் உரிமைகளை மதிப்பதாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

புதிய பேச்சு வார்த்தைகளுக்கான திகதிகள் குறிப்பிடப்படவில்லை எனவும் அடுத்த தெரிவுஈரானின் கையிலேயே உள்ளது எனவும் பிரோனஸ் அஸ்டன் கூறியுள்ளார். (ம)

# பிரான்ஸுக்கு எச்சரிக்கை பில்லேடன் விடுக்கிறார்

தனது படைகளை இஸ்லாமிய நாடுகளிலிருந்து வெளி யேற்றாவிடின், பணயக் கைதிகளை படுகொலை செய்ய நேரிடும் என அல்கைதா தலைவர் ஒசாமா பில்லேடன், பிரான்சுக்கு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அல்கைதாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒலிநாடா ஒன்றை அல்ஜசீரா ஒலிபரப்பியுள்ளது. ஒசாமா பில்லேடன் குரலில் பேசப்பட்டுள்ள அந்த ஒலி நாடாவில்-

நைகரில் வைத்து பணயக் கைதிகளாக பிடிபட்ட பிரான்ஸ் நாட்டு பிரஜைகளை விடுவிக்க வேண்டுமாயின், பிரெஞ்சு படைகள் ஆப்கானிலிருந்து வெளியேற வேண்டும்.

தமது யுத்த கொள்கையை பிரான்ஸ் அரசு மாற்றிக்கொள்ள வேண்டும். பிரான்ஸ் அதிபர் நிகோலாஸ் சார்கோசஸி இதனை நிராகரிக்கலாம். ஆனால் அது, பணயக் கைதிகளை கொல்வதற்கு அவர் வழங்கும் பச்சை சமிக்ஞை ஆகும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்டெம்பரில், அல்கைதாவின் வட - ஆபிரிக்க கிளைக் குழுவினரால், நைகரில் வைத்து 5 பிரெஞ்சு நாட்டவர்கள் உட்பட 7 வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டிருந்தனர். அல்குவைதா இஸ்லாமிய மக்ஹ்ரெப் எனும் அமைப்பு இந்தக் கடத்தலுக்கு பொறுப்பேற்றுக் கொண்டது.

கடந்த வாரம், இவர்களை மீட்பதற்கு நடந்த இராணுவ முயற்சி தோல்வியில் முடிந்ததுடன், இதனால் கோபமுற்ற அல்கைதா குழுவினர் இரு பிரெஞ்சு நாட்டவர்களைப் படுகொலை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## சுவிஸ் பிராங்கின் பெறுமதியை ஸ்திரமாகப்பேணுவதில் தவறில்லை

சுவிஸ், ஜன.24

சுவிஸ் பிராங்கின் பெறுமதியை ஸ்திரமாகப் பேணுவதில் தவறில்லை என சுவிட்சர்லாந்து தேசிய வங்கியின் தலைவர் பலிப் ஹில்ட்பராண்ட் தெரிவித்துள்ளார்.

பிராங்கின் பெறுமதியை சமநிலையில் பேணுவதற்காகவே யூரோக்கள் கொள்வனவு செய்யப்படுவதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

இதேவேளை, அந்நியச் செலாவணிக் கொள்கையினால் சுவிட்சர்லாந்து தேசிய வங்கி 2009ஆம் ஆண்டில் 26 பில்லியன் சுவிஸ் பிராங்குகளை நட்டமடைந்துள்ளது.

லாபமீட்டும் நோக்கில் சுவிட்சர்லாந்து தேசிய வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ம)

**ஒன்று கூடல்...**



எங்கே போவது: ரொறன்ரோவில் பனிப் பொழிவால் ஏற்பட்ட வாகன விபத்து

## பனிப்பொழிவால் விபத்து 40 வாகனங்கள் மோதின

பிரான்ஸ், ஜன. 24

ரொறன்ரோவிற்கு வடமேற்குப் புறமான நகரொன்றின் பெருந்தெருவில் பனிப் பொழிவால் ஏற்பட்ட விபத்தொன்றால் 40 வாகனங்கள் பெருஞ்சேதமடைந்தன.

அதேவேளை, விபத்தைப் பார்ப்பதற்கென வாகனத்திலிருந்து இறங்கிய பெண்ணொருவர் விபத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

பெருந்தெரு 11இல் ஒரில்லா என்ற நகரிற்கு அருகில் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பனிப் பொழிவுடன் பனிக்கட்டித் தூறலும் இடம்பெற்றபோதே இந்த விபத்து இடம்பெற்றது. மேற்படி பெருந் தெருவின் தெற்குப்புற வழியில் ஏற்பட்ட இந்த விபத்தால் சுமார் 8 மணித்தியாலங்கள் அப்பெருந் தெருவில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

மேற்படி பனிப் பொழிவின்போது பார்வை நிலைத் தன்மை மிக வெகுவாகக் குறைவடைந்ததையடுத்து வீதியில் சென்ற மற்றைய வாகனங்களின் நிலையை அறியாமல் பின் தொடர்ந்த வாகனங்கள் விபத்திற்குள்ளாகின. (ம)

# டியூனியாவில் முன்னாள் ஜனாதிபதியின் சொத்துக்கள் முடக்கப்படும் சாத்தியம்

சுவிட்சர்லாந்து, ஜன.24

டியூனிசியாவின் முன்னாள் முன்னாள் ஜனாதிபதி பென் அலியின் சொத்துக்களை சுவிட்சர்லாந்து அரசும் முடக்கக் கூடிய சாத்தியம் காணப் படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

ஜனாதிபதி பென் அலியின் குடும்பத்தார் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக டியூனிசிய மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, சுவிட்சர்லாந்து வங்கிகளில் காணப்படும் சொத்துக்கள் முடக்கப்பட்டு அவற்றை புதிய டியூனிசிய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

கோரிக்கை விடுக்கப்பட்டால் முன்னாள் ஜனாதிபதியின் சொத்துக்களை முடக்கி புதிய அரசிடம் ஒப்படைக்குமாறு சுவிட்சர்லாந்து மத்திய இடதுசாரி கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தேவை ஏற்பட்டால் சொத்துக்களை முடக்குவதற்கு சுவிட்சர்லாந்து அரசு பூரண அதிகாரம் காணப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ம)

# பிரேஸிலில் வெள்ளப் பாதிப்புக்கு சுவிட்சலாந்தின் உதவிகள்

பிரேஸில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க சுவிட்சர்லாந்து அரசு தீர்மானித்துள்ளது. வெள்ளத்தினால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுவிட்சர்லாந்து ஜனாதிபதி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்கில் சுவிட்சர்லாந்து நிபுணர்கள் குழுவொன்று ஏற்கனவே பிரேஸிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சுவிட்சர்லாந்து தொண்டு நிறுவனங்கள் பல பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கத் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## சுவிஸ் வங்கியாளர் விக்கிலீக்ஸ் இணையத்துக்கு தகவல்களை வழங்கியுள்ளாராம்

சுவிட்சர்லாந்து வங்கியாளர் ஒருவர் மிக இரகசிமான வங்கித் தகவல்களை விக்கிலீக்ஸ் இணைய தளத்திற்கு வழங்கியுள்ளார்.

வரியீட்டலில் ஈடுபட்ட செல்வந்தர்கள் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பலான முக்கிய தகவல்களை விக்கிலீக்ஸ் இணைய தளத்தின் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சேயிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் முக்கிய செல்வந்தர்கள் மற்றும் பிரபலங்களின் தரவுகள் தம் வசம் காணப்படுவதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

சுவிஸ் வங்கியின் முன்னாள் அதிகாரியொருவர் தமக்கு இந்தத் தரவுகளை வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் முக்கிய பிரமுகர்கள் 2000 பேரின் தரவுகள் இரண்டு இறுவட்டுக்களில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், உலகப் பிரபலங்களினால் சுவிஸ் வங்கியில் பேணப்பட்டு வரும் கணக்கு விபரங்கள் இதுவரையில் விக்கிலீக்ஸ் இணையத்தில் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சுவிட்சர்லாந்திடம் புகலிடம் கோருவோர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது

சுவிட்சர்லாந்திடம் புகலிடம் கோருவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டைப் போன்றே 2010ஆம் ஆண்டிலும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 15, 567 பேர் புகலிடம் கோரியதாகவும், 2009ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை 2.7 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோருவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதில் 3, 449 பேருக்கு புகலிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நைஜீரியா, எரித்திரியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவான புகலிடக் கோரிக்கையாளர்கள் புகலிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த 939 பேர் புகலிடக் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாகவும், 2009 ஆம் ஆண்டை விடவும் 2010 இல் குறைந்தளவான இலங்கையர்களே புகலிடம் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன

* இலங்கை நிர்வாக சேவை ( S.L.A.S.-விலை 450/-)
* பொது அறிவு 2011 - விலை 350/-
* பல்கலைக்கழக விசேட கற்கைநெறித் தெரிவு - விலை 250/-

தொகுப்பு - த.தவசேகர்,
பூபாலசிங்கம் - கொழும்பு, யாழ்ப்பாணம்
அன்னை, சிறிலங்கா, கவிதா - வவுனியா,
துர்க்கா, சிதம்பரப்பிள்ளை புத்தகசாலைகளில்
(575099) பெற்றுக்கொள்ளலாம்.


## பெயர் மாற்றம்

முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணையைச் சேர்ந்த செல்வானந்தம் வின்சன் ஆகிய நான் எனது பெயரை செல்வானந்தம் விஜயகுமார் என இன்று முதல் பெயர்மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(109722) செல்வானந்தம் விஜயகுமார்.

## மரண அறிவித்தல்

### இளையவி சிவலிங்கம்
(ஓய்வுபெற்ற லிகிதர், மாவட்டச் செயலகம்)



கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி சிவலிங்கம் நேற்று முன்தினம் (22.01.2011) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி-சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்து-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற குஞ்சுக்கிளியின் அன்புக் கணவரும் சுசீலா, ஜெயக்குமார், சசீலா, சுகிர்தா, றஜனி (ஜேர்மனி), சயந்தினி, சுரேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சந்திரலிங்கம், பரமேஸ்வரன், பாஸ்கரன் (ஜேர்மனி), ஆனந்தராசா (லண்டன்), காந்தரூபன் (டோகா), சீதாதேவி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராசரத்தினம், கந்தசாமி மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் சகலனும் ஞானச்செல்வத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.01.2011) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான். (சி/575096) தகவல்
குடும்பத்தினர்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2193 திகதி 22 – 01 – 2011

ஆங்கில எழுத்திற்கும் P
வெற்றி எண்கள் 16 21 34 54
போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ. 32,382,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 216909 | 20/- | 4,338,180/- |
| 2 இல | 15537 | 100/- | 1,553,700/- |
| 3 இல | 335 | 1,000/- | 335,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8771 | 40/- | 350,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 632 | 1,000/- | 632,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 32,382,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 10307 | 100/- | 1,030,700/- |
| 2 இல + போனஸ் இல | 470 | 500/- | 235,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 454 | 200/- | 90,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 00 | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,080,720/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 253461 | | 10,680,720/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பதுளை | 302782304-7-26 |
| புத்தளம் | 302785852-9-27 |
| குருணாகல் | 302766385-0-28 |
| அநுராதபுரம் | 302773652-8-30 |
| நுவரேலியா | 302770457-2-25 |
| மாத்தளை | 302769764-4-37 |
| குருணாகல் | 302766422-3-47 |
| கம்பஹா | 302771464-6-11 |
| கம்பஹா | 302771955-4-32 |
| காலி | 302774161-3-48 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 32,974,725/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2011 ஜனவரி 26ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7


## கப்பல் மாலுமிகளுக்கான ஒன்பது மாதப் பயிற்சி

வண்ணை, ஜன.24

சர்வதேச, உள்நாட்டுத் தரத்தில் யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக மேற்கொள்ளப்படவிருக்கும் டெக் அலுவலகர் மற்றும் கப்பல் மாலுமிகளுக்கான ஒன்பது மாத காலப்பயிற்சி ஆரம்பிக்கப்பட உள்ளது.

கொழும்பு சமுத்திரவியல் சர்வகலாசாலை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட இருக்கும் மேற்படி பயிற்சி நெறிகளில் ஜீ.சி.ஈ. சா/த பாடநெறிகளில் சித்தி பெற்றவர்கள் கடல் அனுபவம் உள்ள 18 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

யாழ். கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியால் மேற்கொள்ளப்படும் மேற்படி பயிற்சி நெறிகளில் இணைய விரும்புவோர் 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் உதவிப்பணிபாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-160)

## வரலாற்றுச் சிறப்பு மிக்க தேவார பாராயணம்

மண்டூர், ஜன.24

உலக ஒற்றுமைக்காகவும் அமைதிக்காகவும் 21,000 பேர் பங்கு பற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க தேவார பாராயணம் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

வாழும்கலை அமைப்பின் ஸ்தாபகர் ஸ்ரீ ரவிசங்கர் குருஜி தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 6.00 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்,பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தன்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்க ளான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், பொன்.செல்வராசா, மாகாணசபை உறுப் பினர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண் டனர்.

மகா ருத்ர பூஜையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் ஸ்ரீ ரவிசங்கர் குரு ஜியினால் அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் அனைவருக்கும் ஆசிவேண்டி பூசைகளும் இடம்பெற்றன. (சி)

## நெற்பயிர்களில் வெடி கதிர்நோய்

கொடிகாமம், ஜன.24

வரணிப் பிரதேச நெல்வயல்களில் வெடிகதிர் நோய்த்தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றது.

நெற்பயிர்களில் கதிர்கள் வெளிவந்த வேளைகளில் இந்நோய்த் தாக்கத்தினால் கதிர்கள் வெள்ளை நிறம் கொண்ட பதர்களாகக் காட்சியளிக்கின்றது.

இதனால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடுமையான மழை மற்றும் பலத்த காற்று இவைகளினால் பயிர்களில் வெடிகதிர் நோய் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. (ஐ-122)

## உடன்தேவை

நல்லூரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு ஓவ்செற்மெசின் ஒப்பறேற்றர், கொம்பியூட்டர் ஒப்பறேற்றர், புத்தகம் கட்டுபவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும். அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொ.இல - 0777165589 (109718) 393/9, கோவில் வீதி, நல்லூர்.


## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக் கப் பயில. முழுக்கட்டணம் 5000/= மேலதிக வகுப்புக்கள் இலவசம். By - ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல - 0776751649 (109710)


## அறிவித்தல்

செம்மணி இந்து மயானத்தில் எதிர்வரும் 01.02.2011 தொடக்கம் தகனக்கிரியைகளுக்காக ரூபா 1,250 கட்டணமாக அறவிடப்படும். கடந்த 23.01.2011இல் நடைபெற்ற மயான அபிவிருத்திச் சபை ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மேற்படி விடயம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சி.இலட்சுமிகாந்தன் தலைவர் — இ.தணிகைநாதன் செயலாளர் — செ.குகதாசன் பொருளாளர்
செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### கணபதிப்பிள்ளை காசிப்பிள்ளை
24.01.2011

மலர்வு 07★07★1951
உதிர்வு 25★12★2010

குடும்பத்தின் குலவிளக்காய் வெந்துதித்த உத்தமரே!
நினைத்துப் பார்க்க முடியவில்லை உம் மறைவு
உறவுகள் மத்தியில் ஓங்கி வளர்ந்த விருட்சமொன்று
சாய்ந்ததுவோ இப்புவியில், புன்னகை தவழும் வதனம்
வாடிச் சருகாகி விட்டதே.
கற்பனையிலும் கலங்க வைக்கிறதே உம் மறைவு
உம் உறவுகள் துயர்துடைக்க ஓடி வாருமையா.

கரந்தாய்,
பளை.
அன்பு மனைவி
கா.இராசேஸ்வரி.

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை செல்லம்மா



இருபாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை செல்லம்மா (21.01.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சர்வணமுத்து -சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரியும் பேராசலிங்கம், தவலோகநாதன், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் கிருஷ்ணலிங்கம், திரவியம், விமலராசா, சரவணபவான் (பவா), காலஞ்சென்ற கிருபானந்தம் மற்றும் புஸ்பமலர், சாந்தன்கோபால் (புனிதம்- முரசுமோட்டை), பாலசிங்கம், ஞானச்சந்திரன் (ஜேர்மனி), லலிதாம்பிகை (ஜேர்மனி), விக்னேஸ்வரன் (அப்பன்- ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் தவமணி, சந்திரமலர், இராஜேஸ்வரி, கமலாதேவி, நகுலேஸ்வரி (நகுலா), கணபதிப்பிள்ளை மதிவதனா, சியாமளா, சூரியதர்சனி (ஜேர்மனி), லோகசிங்கம் (ஜேர்மனி), கலாவாணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் புஸ்பநாதன், சராசரசோதி, நகுலேஸ்வரி, விக்னேஸ் வரன், ஜெகதீஸ்வரி, மதுபாலசிங்கம் கௌசாம்பிகை, இந்திராதேவி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.01.2011 வெள்ளிக்கிழமை இருபாலை தெற்கு சின்னக்கோயில் தெருவில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானச்சந்திரன்-004941316041187
விக்னேஸ்வரன்- 004915253359161, 0772674924
லலிதாம்பிகை-004941312844461

தகவல்:
குடும்பத்தினர்,
சின்னக்கோயில் தெரு,
இருபாலை தெற்கு,
கோப்பாய்.

### அங்கப்பா முருகானந்தம்
(நாதஸ்வர வித்துவான்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அங்கப்பா முருகானந்தம் (நாதஸ்வரம்) நேற்று முன்தினம் (22.01.2011) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அங்கப்பா-சிவயோகம் தம்பதியினரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜீவாகரன், பிரபாகரன், கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவசாமி மற்றும் கனகாம்சம், குஞ்சிதபாதம், விஜயலக்ஸ்மி, நாகேஸ்வரன், அம்சவல்லி, ராதா, ஜெயலக்ஸ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம்-ஜெகதாம்பாள் தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2011) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
தகவல் :
குடும்பத்தினர்.


வெளிநாடுகளுக்கான கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை
ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்
அதிவிரைவு சேவை
லண்டன் 1Kg 550/= (இச்சலுகை 30.01.2011 வரை மட்டுமே)
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், சுவிஸ்,ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, டென்மார்க் 1Kg 950/= மட்டுமே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கழுத்தை இறுக்கி மீனவர் கொலை; இலங்கைப் படை மீது குற்றச்சாட்டு

வேதாரண்யம், ஜன. 24

இலங்கைக் கடற்படையினரால் கோடியக்கரை அருகே நாகை மாவட்ட மீனவர் ஒருவர் சுருக்குக் கயிற்றால் கழுத்தை இறுக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களைக் குறி பார்த்து இலங்கைக் கடற்படை நிகழ்த்தும் வெறிச்செயல் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது என்பதைக் காட்டும் வகையில், வேதாரண்யம் - கோடியக்கரை அருகே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்த முறை துப்பாக்கிச் சூடோ வலை அறுப்போ நிகழவில்லை. மாறாக குரல்வளையை சுருக்குக்கயிறால் கட்டி கடலுக்குள் போட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஜெயக்குமார் மற்றும் இருவர், நேற்றுமுன்தினம் காலை ஜெயக்குமாரின் அண்ணன் திலகன் என்பவருக்குச் சொந்தமான படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர் என்றும், நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கைக் கடற்படையினர் அவர்களை இடைமறித்தனர் என்றும் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களின் படகில் ஏறிய இலங்கைக் கடற்படையினர் அவர்களை அதிலிருந்து கடலுக்குள் குதித்து விடுமாறு மிரட்டியுள்ளனர். ஆனால் அதற்கு ஒரு மீனவர் மறுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அதனால் ஆத்திரமடைந்த இலங்கைக் கடற்படையினர், சுருக்குக்கயிறால் அந்த மீனவரின் கழுத்தில் கட்டி கடலுக்குள் தூக்கி வீசியுள்ளனர். இதனால் குறித்த மீனவர் ஜெயக்குமார் இறந்து விட்டார் எனவும் மற்றும் இருவர் தாக்கு தலில் இருந்து தப்பித்துக் கரை சேர்ந்திருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் இதுபோன்ற சம்பவங்கள், மீனவர்களிடையே கடும் அச்சத்தையும் நெருக்கடியையும் தோற்றுவித்துள்ளன.

# ஈழப்போரில் இறந்த தமிழர்களின் நினைவாக மாவீரர் நாள் பேரணி

## கடலூரில் 40 பேர் கைது

சென்னை, ஜன. 24

ஈழப்போரில் இறந்த தமிழர்களின் நினைவாக கடலூரில் மாவீரர் நாள் பேரணி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பேரணியில் பங்கேற்றோரில் 40 பேரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

தமிழ் மாணவர் பேரவை மற்றும் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பு ஆகியவை இந்தப் பேரணியை நடத்தின. தமிழ் மாணவர் மற்றும் இளைஞர் பேரவையினர் மாவீரர் தினத்தை முன்னிட்டு கடலூரில் தமிழர் தன்னெழுச்சி பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்த முடிவு செய்தனர். பேரணி நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது.

ஆனால் பொலிஸ் அனுமதி மறுக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிட்டு நீதிமன்ற அனுமதியுடன் பேரணி, கடலூரில் கடந்த சனிக்கிழமை நடந்தது.

பேரணி பெரியார் சிலையருகில் இருந்து புறப்பட்டு, மஞ்சக்குப்பம் மணிக்கூண்டு அருகே முடிவடைந்தது.

பேரணியில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் படத்தை எடுத்து வந்ததற்காகவும், கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதற்காகவும் தமிழ் மாணவர் மற்றும் இளைஞர் பேரவையினர் 40 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

# அ.தி.மு.க அணியில் சேர தே.மு.தி.கவுக்கு அழைப்பு

அம்பாசமுத்திரம், ஜன. 24

அ.தி.மு.க. அணியில் தே.மு.தி.க. இணைய அழைப்பு விடுப்போம் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

தேசிய அளவிலான அரசியல் நிலைவரம், தற்போது நடத்தப்பட்டு வரும் இயக்கங்கள், இனி நடைபெறவுள்ள இயக்கங்கள் குறித்து மாநிலக் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தாமிரபரணி நதியைப் பாதுகாக்கும் வகையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தது. இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை கவலை தரும் வகையில் உள்ளன.

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நடைபெற்றால்தான் உண்மை தெரியவரும். இதை வரும் பட்ஜெட் கூட்டத் தொடரிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தும் - இப்படி அவர் தெரிவித்தார்.



முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்றுச் சந்தித்துப் பேசினார். அப்போது தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் தங்கபாலு ஆகியோர் உடன் இருந்தனர்.

# ரஹ்மானுக்கு 'கிரிஸ்டல்' விருது

சுவிற்ஸர்லாந்தின் தாவோஸ் நடைபெறும் உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் கலந்துகொள்ள உள்ளார். கலை மற்றும் இசையில் அவர் புரிந்த சாதனைகளுக்காக அங்கு அவருக்கு 'கிரிஸ்டல்' விருது வழங்கப்பட உள்ளது.

உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் 11 நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், கலைஞர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட 2500 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அவர்களுடன் ரஹ்மானும் கலந்துகொண்டு உரைநிகழ்த்த உள்ளார்.

மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஆனந்த சர்மா, கமல்நாத், பிரபுல் படேல் உள்ளிட்ட 6 அமைச்சர்களும், திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியாவும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

ஜனவரி 26 ஆம் திகதியிலிருந்து 5 நாள்கள் அந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

# 40 வயதில் விஜய் அரசியலில்

ரசிகர்கள் விரும்புவதால் விஜய் அரசியலுக்கு வருவது உறுதி என அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் கூறியுள்ளார்.

நடிகர் விஜய் அரசியலில் ஈடுபடப் போகிறார் என்றும், அடுத்த மாதம் ரசிகர் மாநாடு கூட்டி அதை அறிவிக்கிறார் என்றும் செய்திகள் வெளியாகின்றன. இன்னொரு பக்கம் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்வார் விஜய் என்றும் கூறப்படுகிறது.

இதுகுறித்து விஜய் தீர்மானமான எந்த பதிலையும் சொல்லவில்லை. ஆனாலும், அரசியலில் இறங்குவது பற்றி இப்போதைக்கு ஒன்றும் சொல்வதற்கில்லை என்று நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கூறினார்.

# உணவு, மருத்துவ வசதிகள் எதுவுமின்றி முள்வேலிக்குள் ஈழத்தமிழர்கள் தவிப்பு

## விடுதலையாகி சென்னை திரும்பிய பெண் சட்டத்தரணி

சென்னை, ஜன.24

உணவு, மருத்துவ வசதி எதுவும் இல்லாமல் இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் தவிக்கிறார்கள் என்றும், அவர்கள் இங்குள்ள தமிழர்களின் உதவியைத்தான் எதிர்பார்க்கிறார்கள் என்றும் நேரில் சந்தித்துத் திரும்பிய சென்னை பெண் சட்டத்தரணி கூறினார்.

இலங்கையில் நடைபெற்ற போருக்கு பின்னர் அங்கு வாழும் ஈழத்தமிழர்களின் நிலை குறித்து அறிந்து வருவதற்காக சென்னை உயர்நீதிமன்றப் பெண் சட்டத்தரணி அங்கயற்கண்ணி, நாம் தமிழர் இயக்கத்தை சேர்ந்த திருமலை ஆகியோர் கடந்த வாரம் சென்றனர். அங்கு இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். கடும் போராட்டத்திற்கு பின்னர் கடந்த வெள்ளியன்று விடுவிக்கப்பட்டனர்.

சென்னை திரும்பிய அவர்கள் நேற்றுமுன்தினம் பேட்டியளித்தனர். அப்போது பெண் சட்டத்தரணி அங்கயற்கண்ணி கூறியவை வருமாறு -

கடந்த 12 ஆம் திகதி நள்ளிரவு சென்னையில் இருந்து விமானம் மூலம் இலங்கை புறப்பட்டோம். மறுநாள் காலை கொழும்பு விமான நிலையத்தில் இறங்கினோம். இலங்கையில் போருக்குப் பின்னர் அங்குள்ள தமிழ் மக்களின் மனநிலையை அறிந்து வரும் எண்ணத்தில்தான் சென்றோம்.

அங்கு இலங்கை அரசின் பாதுகாப்புத் துறையில் முழுமையான அனுமதி பெற்று 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை வவுனியா, மட்டக்களப்பு, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வல்வெட்டித் துறை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ள தமிழர்களைச் சந்தித்துப் பேசினோம்.

அங்குள்ள தமிழர்களுக்கு அடிப்படை வசதி எதுவும் கிடைக்கவில்லை. முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, தண்ணீர், மருத்துவ வசதி எதுவும் கிடைக்கவில்லை. தமிழக் குழந்தைகளுக்கு அங்கு பாடசாலைகளே இல்லை.

அங்குள்ள தமிழர்கள் இந்திய அரசின் உதவியை எதிர்பார்க்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் உதவியைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அங்கு கை, கால்கள் இழந்த குழந்தைகளுக்கு சென்னையில் சிகிச்சை அளிக்க முடியுமா? என கேட்கிறார்கள்.

கிளிநொச்சியில் தமிழ் மக்கள் அகதிகளாக இன்னும் உள்ளனர். ஒவ்வொரு வீட்டிலும் ஆண்களே இல்லை. பெண்களும், குழந்தைகளும் கை, கால்கள் இல்லாத நிலையில், கண்கள் குருடான நிலையில்தான் இருக்கிறார்கள். ஊனமில்லாத குடும்பத்தையே அங்கு பார்க்க முடியவில்லை.

மொத்தத்தில் அங்கு தமிழ் இனத்தை அழித்திருக்கிறார்கள். அழித்துக்கொண்டும் இருக்கிறார்கள். முல்லைத்தீவுப் பகுதிக்கு சென்றோம். அங்கு பஸ் வசதி, மின்சார வசதி எதுவும் இல்லை. இரவு நேரத்தில் இருட்டில் நடந்து சென்றோம். அங்கு ஒவ்வொரு இடத்திலும் இலங்கை இராணுவத்தினர் குழுவாக நின்று கொண்டு விசாரிக்கிறார்கள்.

தமிழர்களின் வீடுகள் எல்லாம் வானம் பார்த்த வீடுகளாக உள்ளன. இராணுவச் சிறையில் தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். வல்வெட்டித் துறையில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் வீடு இடிந்து கிடந்ததை பார்த்தோம். அவரது தாயார் அங்குள்ள அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து நாங்கள் வருகின்றோம் எனக் கூறியதும் அவரது கண்ணில் இருந்து கண்ணீர் மட்டும் வடிந்தது. அவரால் பேச முடியவில்லை.

வவுனியா அருகே உள்ள ஓமந்தை என்ற இடத்திற்கு 18 ஆம் திகதி வந்தபோது, அங்குள்ள சோதனைச்சாவடியில் எங்களிடம் விசாரித்தனர். பின்னர், உளவுப் பிரிவுப் பொலிஸார் எங்களைக் கைதுசெய்தனர்.

அதன் பின்னர், நீதிபதியிடம் எங்கள் நிலையை விளக்கிய பின்னர் விடுவிக்கப்பட்டோம்

- இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸை கொக்குவில் இந்து நான்கு விக்கெட்டுக்களால் வென்றது

யாழ்ப்பாணம், ஜன.24

கொக்குவில் இந்துக் கல்லூரி சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக் கிடையிலான 19 வயதுப் பிரிவினருக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 56.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

அற்றியன்-(33), விதுஷ்ன் (32), பிரியந்தன்(27), அமிர்தயன்(22) ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கார்த்திக் 13 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 48 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், கஜிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், பங்குஷன் 4.1 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. திவாகர்(33), ஆதித்தன் (20), உத்தமகுமரன் (15), கார்த்திக்(13) ஓட்டங்களை அணிக்காகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கரிவதனன் 18 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டமற்ற ஓவர்களுடன் 50 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், தட்சன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 59.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

றஜீத்தன்(24), அற்றியன் (20), சஞ்செயன்(19), தட்சன் (14) ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் உத்தமன் 13 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், சாம்பவன் 14.3 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

158 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென தனது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 41 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

பங்குஷன்(40), உத்தமன் (38), ராகுலன்(37), பங்கித் (17), சாம்பவன் ஆட்டமிழக்காமல் (16) ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பிரியதர்சன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 40 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கரிவதனன் 16 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 46 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 4 விக்கெட்டினால் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

(ஐ-23-86)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன.24

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் கடந்த வருடம் நடத்தி இடைநிறுத்தப்பட்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இன்று பி.ப 4 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஆதிசக்தி 'பி' விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஐ-23)

# புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலைவர்- க.ஏகாம்பரம், செயலாளர்- கி. மனோகரன், பொருளாளர்- ஆ. குமாரசிவம், உப. செயலாளர்- மா.செந்தூரன் உப. தலைவர்கள்- நா.சுதேஸ்குமார், சி. அப்புத்துரை, நிர்வாக சபை உறுப்பினர்களாக என்.முருகதாஸ்காந்தன், கே. நாகேந்திரன், ரி.சிவகர், எஸ்.செல்லச்சந்திரன், பி.சிந்துஷா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (23)

# வலிகாமம் வலய போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜன.24

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையே 19 வயதுப் பிரிவினர்களுக்கான உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இணுவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யூனியன் கல்லூரி 6:0 என்ற கோல் கணக்கில் இணுவில் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இணுவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 8:0 என்ற கோல் கணக்கில் இணுவில் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது.

தெல்லிப்பழை இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வென்றது. (ஐ-86)

# ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா அடுத்த மாதம் 19முதல் யாழ்ப்பாணத்தில்

வலி.வடக்கு,ஜன.24

அகில இலங்கை ஆசிரியர்களின் விளையாட்டு விழா அடுத்த மாதம் 19, 20, 21, 22 திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் பெரு விளையாட்டுப் போட்டிகளாக கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது.

மாகாண ரீதியாக தலா இரு அணிகள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு பெரு விளையாட்டுக்களிலும் 18 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் மாகாண அணிகள் இரண்டில் யாழ். மாவட்டப் பெரு விளையாட்டுக்களில் தலா ஒவ்வொரு போட்டிக்குமான அணி கலந்து கொள்ளவுள்ளது.

இப் பெரு விளையாட்டுப் போட்டிகளுடன் மட்டுப் படுதியளவிலான தடகளப் போட்டிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-86)

# வலிகாமம் வலய சம்பியனாக ஹென்றியரசர்கல்லூரி தெரிவு

வலி.வடக்கு,ஜன.24

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினர்களுக்கான உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வலிகாமம் கல்வி வலய சம்பினாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் தெல்லிப் பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் பார்வையாளர்களை மகிழ்விக்கும் வகையில் கடுமையாக மோதிக் கொண்டமை ரசிகர்களின் பாராட்டைப் பெற்றன.

போட்டி ஆரம்பமாகி முதல் இரு அணிகளும் கோல் பெற முயன்ற போதிலும் புனித ஹென்றியரசர் கல்லூரி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலை பெற்று முன்னணியில் நின்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் களமிறங்கி மோதிக் கொண்டார்கள். இரு அணிகளும் கோல் பெறாத நிலையில் இரண்டாவது பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரியை வெற்றி பெற்று வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-86)

# யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரு பிரிவிலும் காங்கேசன்துறை ஐக்கியம் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.24

மஞ்சி பிஸ்கட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய வலய ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண், பெண் இரு பாலாருக்குமான போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சங்கானை யுத் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் சங்கானை யுத் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம் பெறவிருந்த பெண்களுக்கான ஆட்டத்தில் சங்கானை இந்து யுத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவிருந்தது.


சங்கானை இந்து யுத் விளையாட்டுக்கழக அணி போட்டிக்கு சமுகம் கொடுக்காததினால் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

(ஐ-23)


## குதூகலம்...



யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே ரைக்கொண்டோ கலையை பிரபலப் படுத்தும் முகமாக இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. பயிற்சி முகாமில் பங்குபற்றிய மாணவ, மாணவிகள். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்க பதிலடி கொடுத்து கிண்ணத்தை தக்க வைத்தது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்கா - இந்தியா முக்கிய மோதல், செஞ்சூரியனில் நேற்று. செய் அல்லது செத்துமடி இரு அணிகளினதும் நிலை. மடிந்தது இந்தியா. வென்று காட்டியது தென்னாபிரிக்கா.

சுழன்ற நாணயத்தை கச்சிதமாகப் பிடித்து முதலில் துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்கா. வழமையான ஆரம்ப ஜோடி ஸ்மித்-அம்லா. ஏழுடன் ஸ்மித் வெளியேற்றம் சஹீரின் பந்தில். வந்தார் வன்விக். இணைந்தார் அம்லாவுடன். இந்தியாவுக்கு பிடித்தது சனியன். விரட்டி அடித்தனர் பந்துகளை. வியூகம் அமைத்தும் வீழவில்லை விக்கெட்டுகள். அழைத்தார் டோனி பகுதிப் பந்து வீச்சாளர்களையும். முடியவில்லை இவர்களைப் பிரிக்க. எட்டு பேர் பந்து வீசினால் ஆனாலும் அரைச் சதம் தொட்டார் வன்விக். இறுதியில் 54 ஓட்டங்களில் அவர் வீழ்ந்தது யுவராஜிடம். டீ வில்லியர்ஸூம் நிலைக்கவில்லை.

வந்தவர் டுமினி. கடந்த போட்டியின் சிறப்பாட்டக்காரர். இதனால் எதிர்பார்ப்பு அதிகம். ஓரளவுக்குப் பூர்தியும் செய்தார். 35 ஓட்டங்களுடன் அவருக்கு முடிவு கொடுத்தார் முனாப். ஒற்றை இலக்க ஓட்டம் பின்வரிசையின் பலவீனம்.

42ஆவது ஓவரில் வருணபகவான் குழப்பினார் ஆட்டத்தை. மழையால் ஏற்பட்ட தாமதத்தால் அணிகளுக்குத் தலா 4 ஓவர்கள் வெட்டு. இதனால் அவசரப்பட்டனர் தென்னாபிரிக்கர். இழந்தனர் இருவரை ரன் அவுட் மூலம். இதற்கெல்லாம் சளைக்காமல் அடித்தெடுத்தார் அம்லா. எதிர் கொண்டார் 132 பந்துகள். அடித்தார் 116 ஓட்டங்களை. இதுதான் வெற்றிக்கு வழி.

250/9 முடிந்தன பந்து பரிமாற்றம். இருப்பினும் இந்தியாவுக்கு இலக்கு 268 ஓட்டங்கள். காரணம் மழையால் வேண்டா விருந்தாளியாக வந்த டக் வேத் லூயிஸ்.

பதிலாட்டம் தொடங்கியது இந்தியா. ஆனால் அதிர்வாட்டம் நடத்தியது. அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. ரோகித் சர்மா, விராட் ஹோலி, டோனி, யுவராஜ் என்று இந்தியாவின் முன்னணி கழன்றது ஒற்றை ஓட்டத்துடன். ரெய்னா, பட்டேல் பரவாயில்லை. 22.4 ஓவரில் 119/8. வெற்றி தென்னாபிரிக்காவுக்கு உறுதியானது. ஆனால் மிரட்டினார் பதான். வெற்றியை பறித்துச் செல்வார் போல் காட்டினார் போக்கு. திணறியது தென்னாபிரிக்க பந்து வீச்சு. ஓட்ட மழை. சிக்ஸர்கள்,பவுண்டரிகள் பறந்தன. இதுதான் பதானின் ஸ்ரைல். எழுச்சி கொண்டால் வெற்றி வேல் வீர வேல். இல்லையேல் 'ஸீரோ' வேல்.

மறுமுனையில் துணைக்கு நின்றது சஹீர். கவலையின்றிப் பதான் பொழிந்தார் ஓட்ட மழை. கலங்கியது; திணறியது; தென்னாபிரிக்கா. அந்தளவுக்கு ஆட்டிப் படைத்தார் இப்ரான் பதான். அவர் நின்றால் வெற்றியை ருசித்துவிடலாம் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பு. ரொஸ்ரோபே முதல் ஸ்ரெய்ன், மோர்க்கல் வரை யார் பந்தும் தப்பவில்லை பதான் மட்டைக்கு. ஒன்பதாவது விக்கெட்டுக்கு பதான்-சஹீர் இணைப்பு விளாசியது 100 ஓட்டங்கள். பதானின் பங்களிப்பே அதிகம் அதில். எடுத்தது 105 ஓட்டம். எதிர் கொண்டது வெறும் 70 பந்துகள். எட்டு சிக்ஸர் எட்டு பவுண்டரி இவரின் அசத்தல் அதிரடி.

காதல் துணையாய் இருந்தவர்களைப் பிரித்து விட்டார் மோர்க்கல். பின்னர் வழமைபோல் வீழந்தன விக்கெட்டுக்கள் மளமளவென. 5.4 ஓவர்கள் மீதமிருக்கையில் 234 ஓட்டங்களுடன் முடிந்தது இந்தியா.

வந்தது விறுவிறுப்பான வெற்றி தென்னாபிரிக்காவுக்கு. மோர்க்கல் அதிகம் கொடுத்தே 4 விக்கெட்டுக்கள் சாய்த்தார். அம்லா சிறப்பாட்டக்காரர் போட்டியின். மோர்கல் தொடர் ஆட்டக்காரர். (15)

# ஆஷஸ் தொடரில் வாங்கிய அடிக்கு திருப்பிக் கொடுக்கிறது ஆஸ்திரேலியா



தொடர்கிறது ஆஸ்திரேலியாவின் வெற்றி. தடுத்து நிறுத்த முடியவில்லை இங்கிலாந்தால். நேற்றுடன் ஆஸிக்கு ஹட்ரிக் வெற்றி.

நாணயத்தைச் சுழற்றி இங்கிலாந்து எடுத்தது துடுப்பெடுத்தாடும் தீர்மானம். களத்துக்கு வந்தனர், ஸ்ரோஸ்-பிரியர். கணக்கை ஆரம்பிக்க முன்னரே பிரியரைக் களம் விட்டு அனுப்பினார் பிரெட் லீ. பிரியர் பூச்சியம். ஆரம்பமே அதிர்ச்சி. மீள்வதற்கோ இடமில்லை.

தலைவர் ஸ்ரோஸ் ரன் அவுட். சுவாரஸ்ஸியமானது அந்த ஆட்டமிழப்பு. ஹாஸ்ரிங் வீசினார் பந்தை. ரொரட் தட்டி விட்டார் அதனை மிட் விக்கெட் திசைக்கு. ஹஸியின் தடுப்பில் நிற்கவில்லை பந்து. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருவரும் ஓட்டத்துக்கு முயன்றனர். தவறிய பந்தைத் தவழ்ந்து பிடித்து எறிந்தார் ஹஸி. பறந்த பந்து சென்றது மிட் ஓனுக்கு. அங்கே தடுத்தார் டொகேட்டி. பந்துவீச்சாளர் முனை நோக்கி பந்தை கீழிருந்து (அண்டர் துரோ) எறிந்தார். விக்கெட்டைத் தாக்கவில்லை பந்து. ஓட்டத்துக்கு முனைவதும் விடுவதுமாகக் குழம்பினர் துடுப்பாளர்கள். தொடர்ந்தது தவறு. இம்முறை விட்டவர் ஹாஸ்ரிங். அதற்குள் ஸ்ரோஸ் ஆடுகளத்தின் நடுவை எட்டியிருந்தார். எதிரே கிளம்பிய ரொரட்டுக்கு ஓடுவதா என்ற தடுமாற்றம். பார்த்தார் ஸ்ரோஸ் எடுத்தார் திரும்பி ஓட்டம். விளைவு இருவரும் ஒரே எல்லைக் கோட்டுக்குள். இப்போது வாய்ப்பு ஆஸிக்கு. விட்ட தவறுகளை திருத்தினார் கிளார்க். நேரே எறிந்தார் விக்கெட் காப்பாளரிடம் பந்தை. பிரெட் ஹடின் 'வேல்ஸை' மட்டும் கொய்து எடுத்தார். இப்போது யார் ஆட்டமிழப்பது என்ற தடுமாற்றம். ஓடிவிட்டுத் திரும்பித் தனது இடத்துக்கே வந்ததால் வெளியேறினார் ஸ்ரோஸ்.

வந்தவர் பெல். பத்துடன் வொட்சன் பந்தில் வெளியேற்றம். மோஹன்-ரொரட் ஜோடி ஆரம்பித்தது நல்லபடி. விரும்பவில்லை இதனை ஆஸ்திரேலியர்கள். ஹஸி, பந்து வீசுவது பகுதி நேரமாகத்தான். ஆனாலும் பிரித்தார் இவர்களை. மோஹனுக்கு முடிவு 30 ஓட்டங்களுடன். ஏனையோரை ஒற்றை இலக்கங்களையே எட்ட விட்டார் டொஹேட்டி. கொலிங்வூட், யார்டிக்கே அந்தப் பாக்கியம். ரைட் தன் வெயிட்டைக் காட்டினார். பதில் குடுத்தனர் ஆஸ்திரேலியர்கள். 32 ஓட்டங்களில் புடுங்கியது ரைட் விக்கெட். பந்தை வீசியவர் ஹாஸ்ரிக். மறுமுனையில் அரைச்சதம் கொண்டாடினார் ரொரட். ஆனால் பின்வரிசை தந்தது ஏமாற்றம். துடைத்து அனுப்பினார் பிரெட் லீ. இறுதியில் அவசரம் அதனால் முடிந்தது 48 ஓவரில். தனித்து நின்றார் ரொரட். துணைக்கு யாருமில்லாததால் பாவம் சதத்தையும் இழந்தார்.

215 ஓட்டங்கள் நிர்ணயம் வெற்றி இலக்கு. மிரட்டிய லீ கைப்பற்றினார் மூன்று விக்கெட்டுகள். டொஹேட்டி இரண்டு. ஹாஸ்ரிங், வாட்சன், ஹசி மூவருக்கும் ஒவ்வொன்று.

ஆஸிக்கு வெற்றிப் பசி. ஆஷஷ் டெஸ்ட் தொடரை இழந்ததில் அணியை அரைத்து மென்றிருந்தன பத்திரிகைகள். அதனால் வெற்றி ஒன்றே அவர்கள் நினைப்பு. ஆரம்பம் அதிரடி. இழப்பும் இதனால்தான். வொட்சன் எதிர்கொண்டதோ ஏழு பந்து. அடித்ததோ ஒன்பது ஓட்டம். ரெம்லெட் அனுப்பினார் அவுட்டாக்கி. ஹடின் தொடர்ந்தார் தன் பங்கை. மறு முனைக்கு வந்தவர்கள் ஒற்றையுடன் திரும்பினார்கள். ஹஸி வந்தார் களத்துக்கு. தன் பொறுப்பை முடித்தார் ஹடின். 54 ஓட்டத்துடன் முடிந்தது அவர் கதை. ஆனால் ஹஸி-ஸ்மித் ஜோடி நின்றது இங்கிலாந்துக்கு சிம்ம சொப்பனமாக. அந்த ஜோடி அழைத்துச் சென்றது அணியை வெற்றிக்கு. 163 ஓட்டத்தில் வைத்து ஒருவாறு பிரித்தனர் ஜோடியை. பிரிந்து சென்றவர் ஸ்மித். பிரித்தவர் ரெம் லெட். ஆட்டத்தில் தொற்றியது பரபரப்பு. யாருக்கு வெற்றி? தீர்மானிக்க முடியவில்லை நீண்ட நேரம். ஓட்டங்கள் மெதுவாய் அதிகரித்தது. இறுதி வரை நிலைத்தார் ஹஸி. பெற்றார் 68 ஓட்டங்கள். 4 ஓவர்கள் மீதமிருக்கையில் 4 விக்கெட்டுகளால் வெற்றி. எதிர்பாராத விருது லீக்கு சிறப்பாட்டக்காராய். உலகக் கிண்ண ஆட்டத்தில் பங்கேற்பதையும் உறுதி செய்துகொண்டார் இதன் மூலம். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்தில் 37 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

அம்பாறை, ஜன.24

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை வரை 37 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என அம்பாறை மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் எம்.எம்.எஸ்.கே.பண்டார மாப்பா தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்ட எந்தவோர் அரசியல் கட்சியும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவில்லை.

சம்மாந்துறை, இறக்காமம் ஆகிய பிரதேச சபைகளுக்கு ஆறு சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

இம்மாவட்டத்தில் ஒரு மாநகரசபை, ஒரு நகரசபை உட்பட 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 182 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 3,59,138 பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர். (சி)


## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிங்கன் செல்லக்கிளி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிங்கன் செல்லக்கிளி நேற்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் பபா, ஸ்ரீவாசன் (கொழும்பு), சின்னராசா ஆகியோரின் பாசமிகு தாயும் இரத்தினம் (வவுனியா), இந்திராணி (கொழும்பு), இராகினி ஆகியோரின் மாமியும், பிரதீபன் (சுவிஸ்), ஜெகிலாதேவி (சுவிஸ்), பிரசன்னா (சன்வியூ, கொடிகாமம்), சுரேஷ், செரின் (கொழும்பு), நரேஸ், மரியமேரி (கொழும்பு), துரஸ்சன் (பிரான்ஸ்), நேருசன், வைஷ்ணவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல்:
சன்னா (பேரன்).

### திருமதி நல்லம்மா பொன்னம்பலம்

மூத்தவிநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா பொன்னம்பலம் நேற்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும், சிவராஜா, யோகராஜா (PHI நெல்லியடி), திருச்செல்வம் (லண்டன்), மங்களம், மகாலக்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலேஸ்வரி, ஜெயப்பிரியா, உஷாவாணி, நாகராஜா, தனராசசேகரம் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், யாழினி, ஜமிலா, சாரோன், டிலக்சன், டிலக்சனா, தனா, கேதாரன், கஸ்தூரி, கல்யாணி, பவானந்தன், பவாநந்தினி, பபிநாத் (டோகா), பகீரதன், பிரதீபன், லக்ஸனா (லண்டன்), சுதாகரன் ஆகியோரின் பேர்த்தியும் விஸ்வலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2011) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிராய் மயானத்திற்குத் தகனக்கிரியைக் காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.யோகராசா (PHI)
(மகன்).


## மாதகலில் இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.24

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகமும் நவகுண்ட மகா கும்பாபிஷேகமும் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

காலை 7.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி கும்பாஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 35 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

(சிறப்பிதழ் I,II ஆம் பக்கங்களில்)

## பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், ஜன.24

புலோலி வடக்கு பன்னையம்பதி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிரியா கிரமஜோதி கணேச சபாபதிக் குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (ஐ)

## வரணியில் முன்பள்ளி திறப்பு

கொடிகாமம், ஜன.24

வரணி இயற்றாலை பிரதேசத்தில் ரட்ணா முன்பள்ளியின் புதிய கட்டடம் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலனினால் திறந்து வைக்கப்பட்டது.

வி. சிவானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக ஆரம்பப் பிள்ளைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. விேனாதன், வரணி இயற்றாலை கிராம அலுவலர் ந. இராஜகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஐ-122)

## பாதணிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.24

தீவக வலயப் பாடசாலைகளில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு வழங்குவதற்காக கியூடெக் நிறுவனத்தால் பாதணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தீவக வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயிண்டஸின் ஏற்பாட்டில் வலயத்தில் ஏழு பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங் கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் தி.வி. இராதாகிருஷ்ணன், கியூடெக் நிறுவன செயற்றிட்ட இணைப்பாளர் செல்வி என். பத்மேஸ்வரி திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயிண்டஸ் என்போர் பாடசாலைகளுக்கு பாதணிகள் வழங்கினர். (ஐ-227)


## மரண அறிவித்தல்



### திருமதி ஞானபதி பரமேஸ்வரன்

(இளைப்பாறிய பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை)

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானபதி பரமேஸ்வரன் 22.01.2011 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரபாகு மற்றும் இரத் தினம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் சீனியர் வீரபாகு பரமேஸ்வரனின் (இளைப்பாறிய கல்வித் திணைக்கள கணக்குப் பதிவு உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் அமரர் முரளிதரன் மற்றும் London ஐச் சேர்ந்தவர்களான ஞானகெளரி, சுமங்கலி, பரணிதரன் மற்றும் நியாந்தினி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயும் U.K. ஐச் சேர்ந்தவர்களான ஜீவராயன், தேவபாலன் காயத்திரி மற்றும் துஸ்யந்தன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜேந்திமலர், துரைசிங்கம், பூபாலசிங்கம், சுலோச்சனவதி, அற்புதவதி, சந்திராவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் London ஐச் சேர்ந்தவர்களான விதுசனி, அபிசா, ஆரணி, அஜந்தா, விஸ்ணு, பிரவினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரலாத்தின் (London) பெரிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
தொ.பே. 0777563031.

தகவல்:
வீரபாகு பரமேஸ்வரன் (கணவர்).

## குட முழுக்கு காணும் கந்தனே!

வளமான கிளி நகரில்
வரங்கள் தர அமர்ந்தவன்
வடிவேலாயிருந்து எம்
வாழ்வுயர நிற்பவன்
குட முழுக்கு காணும்
இத்திருநாளில் முருகனின்
அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

DBL எஞ்சின்கள், மர அரிவு இயந்திரங்கள், றொபாலிக் பெயின்ற் வகைகள் இரு சக்கர உழவு இயந்திரங்கள் அனைத்து வாகன உதிரிப்பாகங்களுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

### பிள்ளையார் ஹாட்வெயார் அன் மோட்டோர்ஸ்

A9 றோட்,
கந்தசாமி கோயிலடி,
கிளிநொச்சி.
0214925570, 0214925571.

தலைமையகம்:
துணுக்காய் வீதி,
மல்லாவி.
0773632879.

## சிறுவர் இல்லத்திற்கு ஆளணி தேவை

பருத்தித்துறையில் இயங்கிவரும் சிறுவர் இல்லம் ஒன்றுக்கு பின்வருவோர் தேவை.

1. இல்ல நிர்வாகப் பொறுப்பதிகாரி
2. கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துபவர் (முச்சக்கரவண்டி சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர் விரும்பத்தக்கது)
3. சமையல் உதவியாளர்
4. பாதுகாப்பு ஊழியர்

நேர்முகப் பரீட்சை - நாளை (25.01.2011) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்

140, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-575095)

தொடர்புக்கு
Dr.B.Anandkumar
T.P - 0773627055

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

### மாணிக்கம் பாலசுந்தரம்

கடந்த 25.12.2010 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் இன்று (24.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

36/4, இராமநாதன் வீதி,
கலட்டி.

(109727)

தகவல்:
குடும்பத்தினர்.

asianpaints

தெல்லியூர்
திருவருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய
இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகப் பெருவிழா



தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

மஹா கும்பாபிஷேகம்

சிறப்புற ஸ்ரீ துர்க்காதேவி அன்னையின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அருளாசி வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

கும்பாபிஷேகம்:
தைத் திங்கள் 06ஆம் நாள் (24.01.2011)
மு.ப.10 மணி 10 நிமிடம் தொடக்கம் 11 மணி 15 நிமிடம்வரை.

யாழ்ப்பாண இரும்பகம்,
ஏஷியன் பெயின்ற்ஸ்
விநியோக நிலையம்,
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கேள்விகளை ஊடகங்கள் எழுப்பினால் பான் கீ -மூனின் பேச்சாளர் மார்டின் நெஸ்கி பதிலளிக்க மறுக்கிறார்.

இலங்கை, மியன்மார் மற்றும் சீனா போன்ற நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பாக ஊடகங்கள் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பி வருகின்ற போதிலும் மார்டின் பதிலளிக்க மறுக்கின்றார்.

மனித உரிமைகள் பற்றிப் பேசும் மற்றும் உலகில் உள்ள அப்பாவிகளைக் காப்பாற்றும் ஐ.நாவின் அடிப்படை நோக்கத்தை தான் ஒருபோதும் மறந்து விடவில்லை என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கடந்த சனிக்கிழமை நிகழ்த்திய உரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 40ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக மார்டின் நெஸ்கியிடம் கேள்வி எழுப்பிய போது அவர் அதற்குப் பதிலளிக்காது பல வாரங்களாகத் தவிர்த்து வருகின்றார்.

ஐ.நா.நிபுணர்கள் குழுவின் இலங்கை விஜயம், ஐ.நா.மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் கத்ரினா பிரேக்கின் இலங்கை விஜயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்ட போதிலும் மார்டின் பதிலளிக்கவில்லை. - என்று அந்த இணையதளம் குறிப்பிட்டுள்ளது.

## மீனவரைச்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கிடையாது'' என்றார் முகர்ஜி.இந்தச் சம்பவங்கள் குறித்து முதல்வர் கருணாநிதி கவலையடைந்துள்ளார் என்றும் கூறினார்.

இந்திய மீனவர்கள் மீது சுடுவதை இலங்கைக் கடற்படை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட முகர்ஜி, அவர்கள் அப்படி ஏதாவது தவறு செய்தால் அவர்களைக் கைது செய்ய வேண்டுமே தவிர சுடக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

கடந்த 10 நாள்களில் இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டனர் என்று தனக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

இந்த விடயத்தை வெளிவிவகார அமைச்சு மூலமாக இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அது குறித்துக் கலந்துரையாடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழக மீனவர்கள் எவரையும் தாம் தாக்கவில்லை என்று இலங்கைக் கடற்படை மறுத்துள்ளது.

''எந்தவிதமான அடிப்படையும் ஆதாரமும் இன்றி இலங்கைக் கடற்படை மீது இக்குற்றச்சாட்டுச் சுமத்தப்படுகிறது. அடிக்கடி இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இலங்கை மீது சுமத்தப்படுகின்றன, இலங்கைக் கடற்படைக்கும் இந்தியக் கடற்படைக்கும் இடையிலான நல்லுறவைக் குழப்புவதற்குச் சில சக்திகள் விரும்புகின்றன எனச் சந்தேகிக்கின்றோம்'' - என்றார் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்தார்.

இருப்பினும், தமிழக மீனவர் கொல்லப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கொழும்பில் உள்ள தனது தூதரகத்தை புதுடில்லி கேட்டுள்ளது. வெளிவிவகாரச் செயலர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் உத்தரவின் பேரிலேயே இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது. (உ)


# திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

*நிகழும் மங்களகரமான விகிர்த்தி வருஷம் தை மாதம் 10ஆம் நாள் இன்று (24.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 09.45 மணிமுதல் 10.57 மணி வரையான மீனலக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்*

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**ரஜீதரன்**



எமது ஏக புத்திரி
திருநிறைசெல்வி
**அம்பிகா**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு விநாயகர் மண்டபத்தில் (பெருமாள் கோவில் முன்னருகில், ரஸிக ராஞ்சனா சபா, 82, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) திருமாங்கல்ய தாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(109724)

**தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

திரு.திருமதி தனராசா ரஞ்சினி குடும்பத்தினர்
பவானி விலாஸ், 32/1, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776570844

திரு.திருமதி செல்வராசா பத்மினி குடும்பத்தினர்
234, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776679530

இரு வீட்டார் அழைப்பு



asianpaints

**மாதகல் - பாணாகவெட்டி**
**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய**
**மஹா கும்பாபிஷேகப் பெருவிழா**

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாத முத்தி ஆனந்தமே!

**மஹா கும்பாபிஷேகம்**

சிறப்புற ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் அன்னையின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அருளாசி வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

(சி/575093)

**கும்பாபிஷேகம்:**
தைத் திங்கள் 06ஆம் நாள் (24.01.2011)
மு.ப.10 மணி 10 நிமிடம் தொடக்கம்'11 மணி 15 நிமிடம்வரை.

**யாழ்ப்பாண இரும்பகம்,**
**ஏஷியன் பெயின்ற்ஸ்**
**விநியோக நிலையம்,**
**32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**


## ஆஸிக்கான....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கருதுகிறது என்று 'த ஹெரால்ட்' அறிகிறது'' இப்படி அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயரும் இலங்கையர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த இரு நாடுகளும் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் திஸேராவின் நியமனத்தை எதிர்ப்பதால் பாதிப்படையக்கூடும் என்றும் பத்திரிகை தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் 2009 ஜூலை மாதமே இலங்கைக் கடற்படைத் தளபதியாக திஸேர சமரசிங்க பதவியேற்றார். அவருக்கு எதிராக குறிப்பிடப்படும்படியான போர் குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை.

(உ)

## வேட்புமனு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

நாடு முழுவதிலுமுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமென அதன் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் இவ்வாரம் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமென எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்றுத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று மாகாண, மாவட்ட மட்டத்தில் வேட்பாளர் தெரிவு தொடர்பாக பல கூட்டங்களை நடத்தியது. முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் பிரதேச சபைகளுக்கு 26ஆம், 27ஆம் திகதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன என்று எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## அரசு - கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், புளொட் அமைப்புடனும் இணைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும். ஏனைய கட்சிகளும் எமது நிபந்தனைகளுக்கு இணங்கிக்கொண்டால் அவர்களையும் இணைத்துக்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராகவுள்ளோம்.

தமிழ்ப் பிரதி நிதித்துவத்தை, சீர்குலைப்பதற்கும் தமிழர்களின் அரசியற் பலத்தைச் திசை மாற்றுவதற்கும் கடந்த காலத் தேர்தல்களில் நடைபெற்றதைப் போன்று சிறுகுழுக்களும், சுயேச்சை குழுக்களும் உள்ளூராட்சித் தேர்தலில் இறங்கலாம். அதற்கான ஆயத்தவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. இவையெல்லாம் நாங்கள் முன்னைய தேர்தற் காலங்களில் சந்தித்தவை.

நான்கு இலட்சம் தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமை, சர்வதேச நியாயங்களுக்கும் மனித உரிமைகளுக்கும் மாறுபட்ட விதத்தில் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது நியாயங்களை தேர்தல் ஆணையாளருக்கும், அரசுக்கும் சமர்ப்பித்துள்ளோம். இந்த விடயத்தில் எமது நியாயங்களை ஏற்றுக்கொள்ளும் ஏதுநிலை தோன்றியுள்ளது.

சொந்த வீடுகளில்லை, அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் குடியேற்றப்படவில்லை, யுத்த சூழ்நிலையில் அச்சம் காரணமாகவும் பல்வேறு நிர்ப்பந்தங்களின் பேரிலும் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் புலம்பெயர்ந்துள்ளன. இந்த நிலையில் இவர்களின் விருப்பங்கள் எவையும் கோரப்படாமல் வீடுகளில் குடியிருக்கவில்லை என்பதை மட்டும் காரணம்காட்டி தேர்தல் இடாப்பிலிருந்து வாக்காளரின் பெயர்களை நீக்கம் செய்ய முடியாது.

இந்திய அரசு உலக நாடுகளில் வசிக்கும் இந்தியக் குடிமக்கள் மற்றும் இரட்டைப் குடியுரிமை பெற்றவர்கள் இந்தியத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வசதி செய்து கொடுத்துள்ளது. இந்த ஜனநாயக மரபு இலங்கையில் மீறப்படுகின்றது. வாக்காளர் இடாப்பிலிருந்து பெயரினை நீக்கவேண்டுமானால் சம்பந்தப்பட்டவரின் சுய விருப்பின் பேரிலும், உயிரிழந்த நிலையிலுமே நீக்கமுடியும். இந்த நடைமுறை மாறுபட்ட முறையில் இலங்கையில் பின்பற்றப்படுகின்றது.

தமிழரின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு வாக்காளர் பெயரை தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கம் செய்வது சர்வதேச சட்ட நடைமுறைகளுக்கும், இலங்கைத் தேர்தல் சட்டவிதிகளுக்கும் அப்பாற்பட்டதாகும்.

இன்றைய அரசியல் நடைமுறைகள் குறித்தோ, அரசு - தமிழ்க்கூட்டமைப்பு பேச்சு தொடர்பாகவோ அச்சம் கொள்ளத்தேவையில்லை. தமிழர் தாயகப்பிரதேசம், தமிழர்களுக்கான நியாயமான அரசியல் தீர்வு என்பவற்றில் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லாத வகையிலேயே பேச்சை முன்னெடுப்போம்.

தந்தை செல்வாவின் காலத்திலிருந்து நாங்கள் எந்த ஒப்பந்தத்தையும் மீறவுமில்லை, பேச்சுக்களை முறிக்கவுமில்லை. இந்த விடயத்தில் கண்ணியமாகவும், அரசியல் நேர்மையுடனும் நடப்போம். பொருத்தமான வேளைகளில் எமது நிலைப்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்.

அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேசவேண்டும் என்ற விடயத்தில் சர்வதேச ரீதியில் எமக்கும் அரசிற்கும் பல்வேறு வகையான நிர்ப்பந்தங்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் இந்த நேரத்தில் வெளிப்படுத்த முடியாது. காலம் வரும்போது வெளிப்படுத்துவோம் - என்றார்.

நிகழ்வில் பேராசிரியர் கே.சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சி.வி.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியின் பிரமுகர் எஸ்.கனகசபாபதி மற்றும் தொகுதிக் கிளைகளின் நிர்வாக உறுப்பினர் என பலர் கலந்துகொண்டனர். (உ-10-11)

# மரண அறிவித்தல்

## *மயில்வாகனம் குருநாதபிள்ளை*

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குருநாதபிள்ளை நேற்று (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் கணேஸ், ராசமலர், ரேவதி, நந்தகுமார் (ஜேர்மனி), ரவி (ஜேர்மனி), கமலாதேவி, நிமலதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் பாலசுப்பிரமணியம், ஜெயபாலன் (ஜேர்மனி), செல்வராணி, மாலதி (ஜேர்மனி), சத்தியலோகேஸ்வரன் ஆகியோரின் மாமனும் றஜிதா (கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி), யசிதா, றஜனி (கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி), சிவதர்சன், கபிலன், தேன்மொழி, கஜேந்திரன், சுரேந்திரன், நிதர்சன், நாவேந்தன் (ஜேர்மனி), லிங்கேஸ்வரன், தாமிரவரன், சௌமியா, தந்துஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் வீதி,*
*கோப்பாய் தெற்கு.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை, குச்சவெளிப்பகுதியில் இடம்பெற்ற நில வெடிப்பையும் அந்தப்பகுதியை பொதுமக்கள் பார்வையிடுவதையும் காணலாம்

# இலங்கைப் பொருளாதாரத்தை சீரழிக்க புலிகளும், மேற்கு நாடுகளும் முயற்சி!

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள், மேற்கு நாடுகளுடன் இணைந்து இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் முயற்சிகளிலும், அரசின் மீது போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள போதும் வெளிநாடுகளில் உள்ள உறுப்பினர்கள் இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க முனைகின்றனர்.

அத்துடன் வளம்மிக்க மேற்கு நாடுகளுடன் இணைந்து அரசு மீது போர்க் குற்றச்சாட்டுகளை சுமத்த முனைகின்றன.

அவர்களின் பிரதான இலக்கு இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை தடுப்பதாகும். விடுதலைப் புலிகளின் இந்த முயற்சிகளைத் தோற்கடிக்கின்ற பொறுப்பு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள இலங்கையின் துறைசார் வல்லுநர்களிடம் இருக்கிறது.

போர் முடிவடைந்து விட்டது. விடுதலைப் புலிகள் அனைத்து வழிகளிலும் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். அதுபோன்ற நெருக்கடியான நிலைக்கு நாம் இனி மேல் முகம் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், அதற்காக அச்சுறுத்தல் முற்றாக நீங்கி விட்டது எனக் கருதக் கூடாது.

விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகள் இலங்கைக்கு எதிராக அனைத்துலக ரீதியாக பாரிய போர் ஒன்றைத் தொடுத்துள்ளனர். இது பொருளாதாரப் போர்.

பொருளாதார ரீதியாக இலங்கையைத் தனிமைப்படுத்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை மற்றும் மேற்குலக நாடுகள், கனடா, அமெரிக்கா போன்றன முற்படு கின்றன.

ஒவ்வொரு நாளும் நாளேடுகளில் இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் செய்திகளை வெளியாகின்றன.

எமது நாட்டின் தலைவர்களையும் முப்படைகளின் தளபதிகளையும் அனைத்துலக போர்க்குற்றத் தீர்ப்பாயம் முன்பாக கொண்டு செல்வதற்கு சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.- இப்படி அவர் தெரிவித்தார்.

# யாழ். பொலிஸ் நிலையங்களுக்கு புலனாய்வு அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜன. 24

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பொலிஸ் நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமையவே இந்தப் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன்துறை மற்றும் பலாலி பொலிஸ் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கே புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை உட்பட முறைகேடுகளை மேற்கொள்ளும் நபர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குற்ற விசாரணை திணைக்களத்தின் உதவி பொலிஸ் அதிகாரியொருவரின் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவொன்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தமது விசாரணைகளை மேற்கொள்ளவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எழுத்தாளர்கள் இலங்கை செல்ல எத்தடையும் ஏற்படுத்தவில்லை

## இந்தியா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 24

எழுத்தாளர்களின் இலங்கை விஜயத்திற்கு எத்தடையும் ஏற்படுத்தவில்லை - என்று இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் கலந்து கொள்ளவிருந்த முன்னணி எழுத்தாளர்கள் சிலருக்கு இந்தியா விசா வழங்கவில்லை என விழா ஏற்பாட்டாளர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

குறிப்பாக நோபல் இலக்கிய விருது வென்ற துருக்கிய எழுத்தாளர் ஓரான் பாமுக் மற்றும் புக்கர் பரிசு வென்ற கிரான் டேசி ஆகியோருக்கு இலங்கை செல்வதற்கு புது டில்லி விசா வழங்கவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், எழுத்தாளர்கள் இலங்கைக்கு செல்ல விரும்பினால் அதற்குத் தடை ஏற்படுத்தப் போவதில்லை என இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கைக்கு எல்லா வழிகளிலும் இந்தியா உதவி வருவதாகவும், இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய விசா நடைமுறைகளில் காணப்படும் பிரச்சினைகளால் குறித்த இரண்டு முன்னணி எழுத்தாளர்களும் காலி இலக்கிய விழாவில் பங்கேற்கவில்லை என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

# வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜன. 24

வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் சதவீதத்திற்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் கே.டி.லாந்த வலியுறுத்தியுள்ளார்.

கொள்ளுபிட்டி குருகெதர கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை வங்கிச் சேவையாளர் சங்கத்தின் 6 ஆவது வருடாந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மலிவு விற்பனைகளின்போது பழைய விலையைப் புள்ளடியிட்டு மறைத்து புதிய விலைகளைக் காட்சிப்படுத்துவது போன்று சம்பள உயர்வை வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, 9 ஆயிரத்திற்கு சம்பள உயர்வை வழங்குமாறு கோரிய போது 8 ஆயிரமாக இருந்த சம்பளங்களைப் புள்ளடியிட்டு மறைத்து புதிய சம்பளம் என அரசு குறிப்பிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், புதிய சம்பள முறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவுக்கேற்ற சமாந்தரமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற சூத்திரம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அரசு நாட்டு மக்களுக்காக உரிய பலனுள்ள அரசியலை மேற்கொண்டு வருகிறது என நீர்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(சி)

## எகிறும்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வும், கரட் 180 ரூபாவா கவும், போஞ்சி 160 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மரக்கறி விவசாயிகளுக்கு அரசு எவ்வித நிவாரணமும் வழங்கவில்லை. மாறாக வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிப்பதில் அரசு கவனம் செலுத்துவதாக மரக்கறி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(சி)

## அ.புரம் சிறையில்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கைதிகள் கூரை மேல் நின்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள என அனைத்து இன கைதிகளும் ஒன்றிணைந்து ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக தனக்கு இதுவரை எந்தத் தகவலும் அறியக் கிடைக்கவில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இதேநேரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்கியுள்ள அறையில் திருத்தவேலைகள் செய்ய வேண்டியுள்ளதாக தெரிவித்து, அவர்கள் வேறு ஓர் இடத்துக்கு மாற்றப்பட்டனர். அந்த இடத்தைச் சுற்றிப் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். (சி)

CHEMISTRY ➔ S.Vasu
இரவுநேர வகுப்புகள்
(புதிய பழைய பாடத்திட்டங்கள்)
சேதன இரசாயனவியல்
Mon, Wed (7.00-8.00 p.m.)
அசேதன இரசாயனவியல்
Thu, Sat (7.00-8.00 p.m.)
ஆரம்பம் :- 24.01.2011 (இன்று)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

CHEMISTRY ➔ S.Vasu
A/L 2012
சக்தியியல்
ஆரம்பம் :- 25.01.2011 (Tue 6.30 a.m.)
Tue, Thu 6.30-7.30 a.m.
வாயுக்கள்
ஆரம்பம் :- 24.01.2011 (இன்று 5.00 பி.ப.)
Mon 5.00-6.00 p.m. Fri 4.00-5.00 p.m.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணக்கசபைகள் அமைக்க ஏற்பாடு

யுத்த சூழ்நிலை காரணமாக இதுவரை காலமும் இணக்க சபைகள் உருவாக்க முடியாதிருந்த வன்னிப் பிதேசத்திலும் கோரளைப்பற்றுப் பிரதேசத்திலும் இணக்க சபைகள் உருவாக்கப்படும்.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதனால் இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்த வன்னிப்பிரதேச மக்களும் நன்மையடையும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் மத்தியஸ்தர் சபைகள் திருத்தக் சட்டத்தை சமர்ப்பித்துப் பேசும் போதே இதனைத் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள பிரதேச சபைகள் மட்டத்தில் 293 மத்தியஸ்தர்கள் சபைகள் இயங்குகின்றன.

இவற்றில் சமூகத்தில் நல்ல அந்தஸ்த்தில் உள்ள ஏழாயிரத்துக்கும் அதிகமானவர்கள் எவ்விதமான கொடுப்பனவுகளையும் பெறாமல் சேவை செய்து வருகின்றனர்.

பொது மக்களிடையே ஏற்படும் பிணக்குகளில் 60 வீதமானவை இந்த இணக்க சபைகளின் மூலம் எவ்வித செலவும் இன்றித் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறையில் இருக்கும் விதிகளின் படி 25 ஆயிரம் ரூபா பொறுமதிக்குள் ஏற்படும் கொடுக்கல் வாங்கல், கடன் மற்றும் தகராறுகள் தொடர்பான பிணக்குகளை மட்டுமே விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உள்ளது.

ஆனால் இப்போது இவற்றை இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலான பெறுமதிக்குள் என்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 18 வயதுக்குக் குறைந்த இளம் குற்றவாளிகள் தொடர்பான திருட்டுக் குற்றச்சாட்டுக்கள் இந்த மத்தியஸ்தர்கள் சபையின் முன் பாரப் படுத்தக் கூடியவகையில் மேலும் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனால் சிறு திருட்டு சம்பவங்களுக்கும் இளம் குற்றவாளிகள் நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படுவதை தவிர்க்க முடியும். வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்ற அசாதாரண நிலைமைகளால் அங்கு இந்த மத்தியஸ்தர்கள் சபைகளை அமைக்க முடியாதிருந்தது.

இப்பொழுது இப்பிரதேசங்களில் இந்தச் சபைகளை அமைப்பதற்குஏற்ப வன்னிப் பிரதேசத்தில் உள்ள எல்லா பிரதேசசபை பிரிவிகளினதும் தகுதியானவர்களிடமிருந்து மாற்று விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலையும் ளெியிட்டுள்ளோம்.

விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் இப்பிரதேசங்களிலும் மத்தியஸ்த சபைகள் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ம)

# சிறையில் ஜாமர் இயந்திரம்

கொழும்பு, ஜன. 24

செல்லிடத் தொலைபேசி அலை வரிசைகளைத் தடை செய்யும் ஜாமர் இயந்திர மொன்றை சிறைச்சாலைகளில் பொருத்த சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக வெலிக்கடை சிறைச்சாலையில் ஜாமர் இயந்திரம் பொருத்தும் பணிகள் கடந்த 20ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜாமர் இயந்திரம் பொருத்தப்பட்டபின் சிறைச்சாலைக்குள் எந்தவொரு செல்லிடத் தொலைபேசியும் இயங்காத வண்ணம் தடை செய்யப்படும்.

சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகள் அங்கிருந்து கொண்டே செல்லிடத் தொலைபேசி ஊடாக வெளியுலகைத் தொடர்பு கொள்வது, சிறையிலிருந்தபடியே குற்றச் செயல்களைத் திட்டமிடுதல் மற்றும் வழி நடத்தல் என்பவற்றைத் தடுக்கும் நோக்குடனேயே ஜாமர் இய்ந்திரங்கள் பொருத்தப்படுவதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போதைக்கு இலங்கையின் பிரதான சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான கைதிகள் திருட்டுத்தனமாக கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அதனை முற் றாக இல்லாதொழிப்பதற்கு ஜாமர் இயந்திரம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் ஏனைய சிறைச்சாலைகளிலும் ஜாமர் இயந்திரம் பொருத்தும் பணி மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

# சமூக சேவை அமைப்பு கணக்காய்வுக்குட்படுத்தல்

கொழும்பு,ஜன.24

அரசியல்வாதிகள் நடத்தும் சமூக சேவை அமைப்புகள் இனிவரும் காலங்களில் கணக்காய்வுக்குட்படுத்தப்படுமென அரசு அறிவித்துள்ளது.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சி அரசியல்வாதிகளில் பலரும் தமக்குச் சொந்தமான சமூக சேவை நிறுவனங்களை வைத்துக் கொண்டுள்ளனர். அமைச்சர், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மட்டுமன்றி நகர சபை உறுப்பினர்கள் வரை அவர்களில் உள்ளடங்குகின்றனர்.

அவர்களது சமூக சேவை நிறுவனங்களுக்குக் கிடைக்கப் பெறும் நிதி எவ்வளவு? அந்த நிதி எவ்வாறு கிடைக்கின்றது? என்ன விதத்தில் செலவு செய்யப்படுகின்றது என்பது குறித்து கண்காணிப்பதற்காக இதுவரை எதுவிதமான ஒழுங்குவிதி ஏதும் இருக்கவில்லை.

அவர்களில் ஒரு சிலர் அவ்வாறு கிடைக்கும் நிதியை தமது சொந்தப் பயன்பாட்டுக்கும், உறவினர், நண்பர்களின் தேவைகளுக்கும் பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்துள்ளது. வேறுவழிகளிலும் முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே அவற்றை ஒரு ஒழுங்குமுறைக்குட்படுத்தும் நோக்கில் அரசு அவ்வாறான சமூக சேவை அமைப்புகளைக் கணக்காய்வுக்குட்படுத்தத் தீர்மானித்துள்ளது. அதற்கு மேலதிகமாக ஏனைய சமூக சேவை அமைப்புகளையும் கணக்காய்வுக்குட்படுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது. (204)

## நினைவுச் சின்னம்...




வழங்கல்:-சமாதானத்திற்கான சமயங்களின் பேரவை அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பேரவையின் பொதுச் செயலாளர் நாயகம் கலாநிதி வில்லியம் எப்.வென்டிலி பிரதமர் தி.மு.ஜயரட்னவுக்கு நினைவுச் சின்னத்தை வழங்குகின்றார். (204)

# பணியகங்கள் மூடப்பட்டாலும் செயற்பாடுகள் தொடரும்

வடக்கிலுள்ள பணியகங்கள் மூடப்பட்டாலும் அங்கு தமது செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் ஊடகப் பேச்சாளார் சரசி விஜேரட்ண தெரிவித்துள்ளார். இலங்கை அரச அதிகாரிகளுடன் நடத்தப்பட்டுள்ள பேச்சுக்களை அடுத்து எதிர் வரும் மார்ச் 31 ஆம் திகதியுடன் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் பணியகங்களை மூடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணியகங்கள் மூடப்பட்ட பின்னரும் அனைத் துலக செஞ்சிலுகைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம் பெறும். வடக்கிலுள்ள பணியகங்கள் மூடப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் செஞ்சிலு வைக் குழுவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜெய்பூர் உடல்உறுப்புகளை இழந்தோருக்கான புனர்வாழ்வு நிலையத்தின் பணிகளும், தடுப்பு முகாம்களில் உள்ளவர்களைப் பார்வையிடச் செலலும் அவர்களின் குடும்பத்தினடிக்கான உதவிகளும் தொடர்ந்தும் வழங்கப்படும். கடந்த ஆண்டில் இலங்கை அரசு வடபகுதியில் உள்ள செஞ்சிலுவைக் குழு பணியகங்களை மூடுமாறு பணித்திருந்தது. இதையடுத்து மன்னாரில் உள்ள பணியகம் கடந்த நவம்பரில் மூடப்பட்டது. யாழ்ப்பாணம், வவுனியா பணியகங்சள் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியுடன் மூடப்படவுள்ளன - என்றார். (204)

# பெற்றோல் விலை அதிகரிப்புக்கு அனுமதி கோரல்

கொழும்பு,ஜன24

பெற்றோல் மற்றும் டீசல் விலையை அதிகரிப்பதற்கு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் இந்த விலை அதிகரிப்புக்கு தாம் அனுமதி கோரியுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார். (204)

# சுற்றுலாத்துறை கற்கைநெறி அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜன.24

இலங்கை திறந்த பல்கலைக் கழகம் யாழ்ப்பாண பிராந்திய நிலையம் ஊடாக சுற்றுலாத் துறையும் விடுதி நடைமுறைகளும் (Tourism and Hotel Operation) என்னும் சான்றிதழ் கற்கை நெறியை புதிதாக ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். கல்வித் தகைமைகள் எதுவும் அவசியமில்லை. இக் கற்கை நெறி ஆங்கில மொழி மூலம் நடத்தப்படவுள்ளது. எனினும் விரிவுரைகள் தமிழில் இடம்பெறும்.

80 வீதம் வருகை மிகவும் அவசியமானதுடன் இக் கற்கை நெறிக்காக இறுதிப்பரீட்சைகள் எதுவும் நடத்தப்பட மாட்டா.

இக் கற்கை நெறியானது 10 வாரங்களில் வார இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமையில் மாத்திரம் நடைபெறுவதுடன் 3 கிழமைகளுக்கு தெரிவு செய்யப்படும் விடுதி (Hotel) ஒன்றில் பயிற்சியும் நடைபெறும்.இதன் தரமிக்க பல்கலைக்கழக சான்றிதழ் ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியும். இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் பத்தாம் திகதியாகும். (ஐ)

# நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை

கொழும்பு,ஜன24

இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் சிஹல உறுமய கட்சியினர் வெளியிட்டுவரும் கருத்துக்கள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சி.வை.ப.ராம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது நாட்டில் பௌத்த மக்கள் அதிகளவில் வாழ்கின்ற போதிலும், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் அனைத்துப் பகுதிகளிலும் தமது வழிபாட்டுத் தலங்களை அமைத்து மத வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசு ஒரு நாடு, ஒரே [illegible] என்ற குறிக்கோளுடன் செயற்படுவதாக கூறிக்கொண்டிருக்கும் நிலையில் சிஹல உறுமயவின் செயற்பாடு மத நல்லிணக்கத்துக்குப் பாதகமான விளைவுகளையே தோற்றுவிக்கும்.

அதேநேரம் இந்த நாடு பௌத்த மக்களை பெருமளவில் கொண்ட பௌத்த நாடு என்ற பேதிலும் ஏனைய இன [illegible] யாது. அவர்களைக் கௌரவப்படுத்த வேண்டும். இதனையே புத்தபிரான் வலியுறுத்தியுள்ளார் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

பிரதமர் டி.எம். ஜயரட்னவின் இந்த நடவடிக்கையை அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ அமைச்சர்கள், பிரதியமைச்சர்களும் பின்பற்ற வேண்டும்.

மதம் என்பது அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கம், ஐக்கியம், ஒழுக்கவியல் என்ற நற்பண்புகளையே உருவாக்க வேண்டும். அதனை விடுத்து இன, மத, குரோதங்களைத் தூண்டி எமது நாட்டில் மீண்டும் வன்முறை அரசியல் கல சாரத்தை தூண்ட இடமளிக்க கூடாது என்பதை சிஹல உறும[illegible] கட்சியினருக்கு அரசு வலியுறுத்திக் கூற வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# மாதகல் பாணாக

# அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வ

# இராஜகோபுர கும்பாபிஷேக நவகுண்ட மகா



## நல்லைக் குருமணியின் ஆசியுரை

மாதகல் பாணாகவெட்டிப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் புவனேஸ்வரி அம்பாளுக்கு இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தை சிறப்பித்து மலர் வெளியீடு செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றறோம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் எழுந்தருளி, இவ்வூர் மக்களுக்குப் புனிதத்தைத் தருவதாகும். உலகத்துக்குத் தாயாக விளங்கும் அன்னை, வேண்டுவார் வேண்டுவதை ஈயும்பொருட்டு இவ்வாலயத்தில் புவனேஸ்வரி அம்பிகையாக எழுந்தருளியுள்ளார். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்றும் ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்றும் ''நித்தமும் எம் பிரானுடைய கோயில் புக்கு'' என்றும் நம் சமயம் போற்றி நிற்கின்றன. இதனை உணர்ந்து எம் மக்கள் ஆலயம் அமைத்து வழிபாடுசெய்கின்றனர். ஆலய வழிபாடானது மனிதனை மனிதநேயத்துடன் வாழ வழிவகுக்கின்றது. ''அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' என்ற வாக்குக்கு அமைய அம்பிகை வழிபாடு இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தைத் தருவதாகும். அனைவரும் அம்பிகையைத் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. ஆலய அறங்காவலர் சபையினர் அறப்பணிகள் பல ஆற்றி மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு பணியாற்றுவது பாராட்டப்படவேண்டியது. ஆலப அறங்காவலர் சபையினரை இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞான சம்பந்த ஆதீனம்.


## அருள்மழை பெய்யும் அம்மன்



ஆழகிய வயல்வெளிகள், கடல்வளம் சூழவுள்ள மாதகல் பாணாகவெட்டிக் குளத்தருகே கோயில்கொண்டெழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் மாதகலில் உள்ள காலத்தால் முந்திய கோயிலாகும்.

இந்த ஆலயத்தின் மூலமூர்த்தி- புவனேஸ்வரியம்மன், விருட்சம்- மாமரம், தீர்த்தம் - பாணாகவெட்டிக்குளம் ஆகும். இச்சிறப்புக்கள் பொருந்திய இந்த ஆலயத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்து அனுக்கிரகமளித்துவரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை சீரும், சிறப்புமாய் அலங்கார மானதொரு தேவஸ்தானத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டுமெனும் பேரவாவில் ஆலய புனருத்தாரண வேலைகளை மேற்கொண்டு அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகம் செய்யத் திருவுளம் கொண்ட இத்தினம் மகத்தான திருநாளாகும். அமைதியான சூழலில் எழுந்தருளி அருள்மழை பொழியும் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபையினதும் கோயிலின் குருவானவரினதும் பூரண ஒத்துழைப்புடன் அடியார் களால் மனமுவந்து அருள்நிறைந்து நடத்தப்படும் கும்பாபிஷேக நிகழ்வினை என்றும் நினைவுகூருமுகமாக மலரொன்றினை வெளியிடுவது பாராட்டப்பட வேண்டியதாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் இன்று நடைபெறவுள்ள கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற நிகழ எல்லாம்வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் தாள்பணிந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.



## மருதமர நிழலில் அருட்கடாட்சம் புரியும் புவனேஸ்வரி



சைவசமயத்தில் இறைவியான சக்திக்குரிய வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. சக்தி வழிபாட்டை முதன்மைப்படுத்திய 'சாக்த சமயம்' சைவசமயத்தோடு சங்கமித்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றது.

மாதல் பாணாகவெட்டி அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன், அவ்வூர் சைவ சமயத்தவர்களால் காலம் காலமாக வழிபட்டுவரும் ஒரு திருத்தலமாகும். இக் கோயிலுக்கு அழகும் நிழலும் தருபவையாகவும் வெய்யிலைத் தாங்கும் விருட்சமாகவும் கோயிலை அண்டிய குளக்கட்டில் மருத மரங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. மேற்குவீதியில் அமைந்துள்ள கண்ணகையம்மன் கோயில் நீண்ட வரலாறு கொண்டது. அந்நியர் ஆட்சிக்கு முற்பட்ட மன்னர் ஆட்சிக் காலத்திலேயே இவ்வாலயம் சிறப்புற்றிருந்தது. எனினும் பின்னர் சிதைவுற்று அழிந்து போனமை வரலாறு. மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு இறைவியை பிரதிஷ்டை செய்து புனிததலமாக வழிபடும் பாக்கியம் மீண்டும் உருவானது.

சைவமும் தமிழும் மேலோங்கிச் சிறப்புற்றிருக்கும் மாதகலில் இன்று பாணாகவெட்டி அம்மன் ஆலயம் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு குட முழுக்குக் காணவுள்ளது. இவ்வேளையில் இடருற்றிருக்கும் எம் மக்களுக்கு உறுதுணை அளித்து அருள்பாலிக்கவல்ல இறைவிக்கான குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெறுகின்றமை அனைத்து இந்துமத உள்ளங்களுக்கும் பேருவகை ஊட்டுகிறது. இருள் மயப்பட்டிருக்கும் வாழ்வில் ஒளிபெற எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்மனின் அருள் வேண்டி இக் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புடன் நிறைவேற வாழ்த்துகிறேன்.

வி. கயிலாசபிள்ளை,
தலைவர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்.

## அம்மன் திருத்தல வர

கிறிஸ்துவுக்குப் பின் பாணாகவெட்டியில் கண்ணகி வழிபாடு ஆரம்பமாகியது. மாதகலை
உத்தர நட்சத்திரத் திருநாளில் பொங்கிப் படைத்து நேர்த்தியை பூர்த்தியாக்கிக்கொண்டனர்.
போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் அம்மன் ஆலயம் இடிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்
அமைக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டில் பரிபாலனசபை அமைக்கப்பட்டுக் கோயில் அபிவி
பட்டன. 1983ஆம் ஆண்டு அம்மனுக்குச் சித்திரத் திருத்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்ட
பரிபாலக மூர்த்திகளான சந்தானகோபாலர், மகாலட்சுமி, நடேசர் ஆகியோருக்குத் தனித்தனி
போர்த்துக்கேயரால் குளத்தில் வீசப்பட்ட கண்ணகி சிலை மீட்கப்பட்டு பிரதிஷ்டை செய்ய
1992ஆம் ஆண்டு மாதகல் இடப்பெயர்வு காரணமாக நித்திய பூசைகள் கைவிடப்பட்டன.
போது அம்மனின் திருத்தேர் சப்பரம், தளபாடங்கள் சிதைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும்
1998ஆம் ஆண்டு மூலஸ்தானம், தனிக் கோயில்கள் புனரமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேக
ஆண்டு திரும்பவும் புதிதாக சப்பரம் அமைக்கப்பட்டது. 1998ஆம் ஆண்டு தொடக்கம் அடியவ
ஆரம்பிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு பஞ்சதள இராஜகோபுரத்துக்கு அடிக்கல்லு நடப்பட
இராஜகோபுரம் பூர்த்தியாக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேறுகின்றது. அம்மன் 2010 ஆம் ஆ
24.01.2011 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

## சிறப்புமலர் அனு


K.V.S. பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, மாதகல்.

நிது கொம்நெற்
பிரதான வீதி, மாதகல்.

அம்பாள்
ஊறெழு மேற்கு,

ராஜ் என்ரபிறைஸ்
பிறவுன் றோட், யாழ்ப்பாணம்.

விநாயகர் மில்
மாதகல் மத்தி, மாதகல்.


மாதகல் விவசாய
மாதகல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துணை

# ..ணாகவெட்டி ..ஸ்வரி அம்மன் ஆலயம்

## ..கா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 24.01.2011



### அம்மன் அருள் என்றும் நிலைபெறுக!



சிவபூமியாம் யாழ்ப்பாணம் சைவம் வளரும் பூமி ஆகும். யாழ். மாவட்டதின் வட மேற்கின் மாதகல் பதியில் வயலும் வயல் சூழ்ந்த மருத நிலத்திலே எழுந்தருளியிருக்கும் மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன், குளக்கரையில் எழுந்தருளி இருக்கின்றார். ஆயிரம் ஆண்டுகள் வரலாற்றுப் பெருமையுடன் அம்பாள் தன்னை நாடிவரும் அன்பர்கள், அடியார்கள் துயர்போக்கி அவர் தம் வாழ்வு உய்ய அருள் பாலிக்கின்றாள். இந்த ஆலயத்தின் பிரதம குருவாகச் சேவைசெய்யும் பாக்கியம் கிடைத்தது அம்பாளின் பெரும் கடாச்சமாகும். இன்று மகா கும்பாபிஷேகக் கைங்கரியங்களுக்கு என்னை ஈடுபடுத்தி அம்பாளின் கருணை அன்பர்கள், அடியார்களுக்கு கருணை கிடைக்க அம்பாளை இறைஞ்சுகின்றேன்.

மாதகல் வாழ் மக்களின் சிவப்பணி ஓங்கவும் அவர் தம் வாழ்வு சிறக்கவும் எல்லாம் வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் அருளாட்ச்சி என்றும், எங்கும் நிலைபெற வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ செ. சுந்தரேஸ்வரசர்மா, ஆலய பிரதம குரு.

### அம்மனின் அருள் கிடைப்பதாக



சிவபூமியாம் யாழ். மாவட்டத்தில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்து இந்துசமயம் வேரூன்றி பல்கிப்பெருகி வளர்ந்திருக்கின்றது என்பதற்குரிய அழியாத சாட்சியங்களில் ஒன்றாக மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றாள். இத்தனை சிறப்புங் கொண்ட இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். அதனை முன்னிட்டு வெளி யிடப்படும் சிறப்பு மலருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயங்கள் மக்கள் மத்தியில் ஆன்மீகத் தத்துவங்களைப் புரிந்துகொள்ள வைப்பனவாகவும் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பேணும் நிலையமாகவும் விளங்குகின்றன. இதன் மூலம் எமது இளம் சந்ததியினரிடையே சமய, கலை, கலா சாரவிழுமியங்களைப் பரவச்செய்யும் பணியைச்செய்கின்றன. இத்தகைய உயர்ந்த பணியைச்செய்யும் ஆலயங்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்து பராமரிப்பது நமது கடமையாகும்.

அந்த வகையில் மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை சிறப்போடு நடத்தவுள்ள ஆலய பரிபாலன சபையினருக்கு எனது பாராட்டுக் களையும் வாழ்த்துக்ளையும் தெரிவிக்கின்றேன். எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

### அன்பர்கள், அடியார்கள் வாழ்வு உய்ய வாழ்த்துவோம்

ஈழத் திருநாட்டில் பெயர்பெற்ற துறையாக சம்பில்துறை விளங்குகின்றது. இதுபற்றிக் கூறுகின்ற மாகாவம்சம் ''இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னன், சேரன் செங்குட்டுவன் எடுத்த கண்ணகி விழாவில் பங்குபற்றி ஈழம் திரும்பும் போது கண்ணகி சிலையை கொண்டு வந்தான்'' என்று விளம்பி நிற்கின்றது. இச்சிலை சம்பில்துறைமுகம் ஊடாக எடுத்து வந்தபோது அரசனும் பரிவாரங்களும் கண்ணகி சிலையுடன் மாதகல் பாணாகவெட்டி குளக்கரையில் தங்கிச்சென்றமையினால் கண்ணகைக்கு கோயில் எழுப்பப்பட்டு வழிபாடு ஆரம்பா மாகியது. முல மூர்த்தியாக விளங்கிய கண்ணகி அம்மன் காலப்போக்கில் தளக் கோயிலாக எழுந்த ருளப்பண்ணி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் மூல மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இன்று அம்மனுக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேக நிகழ்வு நடைபெறும் இந்த நேரத்தில் ஆலய அறங்காவலர் சபைக்கும், அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் அம்பாளின் அருள்காடாட்சம் கிடைக்க வேண்டு கின்றேன். தொடர்ந்தும் அம்பாளின் சேவைகளில் தங்களை அர்ப்பணிக்கும் தொண்டர்கள், அன்பர்கள், அடியார்கள் வாழ்வுய்ய வாழ்த்துவோம்.

திருமதி காமலம் சிவசுப்பிரமணியம், ஆலய தர்மகர்த்தா.

### .. வரலாறு

..து. மாதகலைச் சூழவுள்ள அடியார்கள் பங்குனி ..கொண்டனர்.
..ஆம் நூற்றாண்டு காலத்தில் கோயில் நிரந்தரமாக ..ாயில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப் ..வள்ளோட்டம் விடப்பட்டது. 1986 ஆம் ஆண்டு ..த் தனித்தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. ..டை செய்யப்பட்டது.
..டப்பட்டன.1996 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த ..கப்பட்டும் களவாடப்பட்டும் காணப்பட்டன. ..ம்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1998ஆம் ..கம் அடியவர்களின் நன்மை கருதி அன்னதானம் ..லு நடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு பஞ்சதள ..2010 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு

### நம்பி வழிபடுவோர் வேண்டியதைப் பெறுவர்

பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் சரித்திரப் பிரசித்திபெற்ற ஓர் ஆலயமாகும். கஜபாகு மன்னரால் இந்தியாவில் இருந்து கொண்டு வரப் பட்ட கண்ணகி அம்மன் சிலை முதன்முதலில் இப்பதியிலேதான் கால்பதித்தாகும். இங்குதான் முதல் கண்ணகிக்குக் கோயில் கட்டப்பட்டது. நாளடைவில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனுக்கும் பெரும் கோயில் கட்டப்பட்டது. இக்கோயிலானது மிகப் பழைமையானது. 1985இல் இவ்வாலய முன்னேற்றம் கருதி ஓர் பரிபாலனசபை நிறுவப்பட்டது. பரிபாலன சபையினரின் அயராத உழைப்பினாலும் அடியவர்களின் தொண்டுகளாலும் நிதி உதவிகளாலும் ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்ந்தது. 1992இல் மாதகல் கிராமமக்கள் யுத்த பீதியால் இடம்பெயர்ந்து மீண்டும் 1996 வைகாசியில் திரும்பிவந்து குடியமர்ந்தார்கள். இக்காலப்பகுதியில் ஆலயம் இடிபாடுகளுக்கு இலக்காகி ஆலயத்தின் வளங்களும் சூறையாடப்பட்டன. 1996இல் மீள்குடியமர்ந்த அடியவர்களின் விடாமுயற்சியினாலும் புலம்பெயர்ந்த வெளிநாட்டு மாதகல் வாசிகளின் தாராள நிதியுதவியினாலும் ஆலயம் சபையினரால் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1998இல் மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ''கோபுரதரிசனம் கோடி புண்ணியம்'' என்பதற்கிணங்கப் பரிபாலனசபையினரின் பெருமுயற்சியாலும் அடியவர்களின் உதவி, ஒத்தாசையினாலும் ஒரு பஞ்சதள இராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டதுடன் இணைந்த மணிமண்டபமும் கட்டி முடிக்கப்பட்டது. இன்று இவை கம்பீரமாகவும் மிகச் சிறந்த வர்ண வேலைப்பாடுகளுடனும் மிளிர்வது பார்ப்போர் உள்ளங்களை மகிழ்விக்கின்றன. அத்தோடு கண்ணகை அம்மனுக்கும் முனீஸ்வரனுக்கும் சந்தான கோபாலனுக்கும் தனித்தனி ஆலயங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்விதம் ஆலயம் அழகு மிளிர்வதுடன் 24.01.2011இல் இராஜகோபுர கும்பாபிஷேகமும் நவகுண்டபட்ச மகா கும்பாபிஷேகப் பெருவிழாவும் நடைபெறும் இந்நாளில் அன்பர்கள், அடியவர்கள் எல்லோருக்கும் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனின் அருள்கிட்டவேண்டுமென்று பிரார்த்திப்பதுடன் பேராதரவு தந்த எல்லோருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

தலைவர், இ.நடராசலிங்கம். செயலாளர் ச.கதிரவேலு, பொருளாளர், வி.சிற்றம்பலம். ஆலய பரிபாலன சபையினர்.

## ..னுசரணை


..ள் கிறேசர்
..ற்கு, சுன்னாகம்.

சேவிஸ் சென்ரர்
சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

சிவா கொமினிக்கேஷன்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

(அ)/5750080


..சாய அமைப்பு
..தகல்.

கணேசன் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

மலர் ரவல்ஸ் அன் ரு
யாழ்.- கொழும்பு வான் சேவை
சங்கானை றோட், அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்



10

விக்கி என்பது யார் வேண்டுமானலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், தகவல்களை வழங்வும் ஏற்படுத்தப் பட்டுள்ள ஒரு சொல். விக்கிபீடியா என்ற இணைய அகராதி கூட இந்த வகையைச் சேர்ந்ததுதான். அதனாலேயே ஒரு சுயாதீனப் பொது இணையம் என்பதைக் குறிக்க விக்கிலீக்ஸ் என்ற பெயர் யூலியனால் தெரிவுசெய்யப்பட்டது.

தன் கொள்கைகளையொத்த நண்பர்களை யூலியன் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈட்பட்டிருந்த போது, பலநாடுகளைச் சேர்ந்த வழக்கறிஞர்களின் பரிச்சயமும் யூலியன் அசாஞ்சேக்குக் கிட்டியது. யூலியனைப்போல தானே அவரது நட்பை நாடிய வழக்கறிஞர்களும் இருப்பார்கள். யூலியன் இணையத்தின் ஆதியில் இருந்து அந்தம் வரை - ஒன்றும் விடாமல் - கரைத்துக் குடித் திருந்ததைப் போன்று, யூலியனைத் தொடர்பு கொண்ட சட்ட அறிஞர்களும் சட்டத்தின் சந்து பொந்துகளையெல் லாம் சுண்டுவிரலில் தெரிந்து வைத்திருந்தனர். அவர்கள் விக்கிலீக்ஸ் போன்ற புலனாய்வு இணையமொன் றின் செயல்வடிவங்களுக்கு சட்டப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியம் என்பதை யூலியனுக்கு விளக்கினர். அதேவேளை சட்டத்தில் உள்ள எந்தெந்த ஓட்டைகளினூடாகச் சிக்கல் களில் இருந்து தப்பித்துக்கொள்ளமுடியும் என்பதை யும் யூலியனுக்குப் போதித்தனர்.

ஏற்கனவே இணையம் என்ற சுனாமியிலேயே சாதுரி யமாகத் தூண்டில் போட்டு மீன் பிடிக்கிற யூலியனுக்கு, வழக்கறிஞர்களின் தொடர்ச்சியான உபதேசத்தால் சட்டத் தின் நெளிவு சுழிவுகளும் அத்துப்படியான தால் விக்கி லீக்ஸின் தகவல் வேட்டைக்கும், அதன் மூலம் ஏற்படப்போகும் சட்டரீதியி லான ஆபத்துகளில் இருந்து எக்காலத்திலும் நழுவுவதற்கும் அதிகமான உந்துசக்தி கிடைத்தது.குறித்த வழக்கறிஞர்களின் ஆலோ சனைகளை தனது வேதவாக்காகக் கொள்வ தால்தான்யூலியன்மீது விக்கிலீக்ஸ் சம்பந்தமாக எந்தவொருவழக்கையும்தாக்கல் செய்யமுடியாது பல நாடுகளும்- குறிப்பாக யூலியனின் பாய்ச் சலால் பாதிக்கப்பட்டவர்களும்- வெறுங் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

சட்ட அறிஞர்களின் ஆலோசனைப்படி தான் சுவீடனில் விக்கிலீக்ஸைப் பதிவுசெய்வ தென்ற முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறு சுவீடனைத்தள மாகக் கொள்ளுமாறு வழக்கறிஞர்கள் பரிந்துரை செய்த தற்கும் காரணம் இருந்தது. ஊடகத் தகவல்களின் ஆதாரங்களைப் பற்றிக் கேள்விகள் எழுப்ப முடியாத சட்ட திட்டங்களைக் கொண்ட நாடுகளில் சுவீடன் முதன் மையானது. எனவே விக்கிலீக்ஸ் இணையத் துக்குத் தகவல்களை வழங்குபர்களைப் பற்றியோ அதை நிர்வகிப்பவர்கள் பற்றியோ எந்த நாடும் கேள்வி கேட்க முடியாது. ஆனாலும் அவ்வாறு தகவல் கொடுப்பவர்கள் பாதிக்கப்பட்ட நாடொன்றில் தம் வாயாலேயே மாட்டுப்பட்டால் , அவர்களுக்கு சிறைக்கம்பிகளை எண்ணும் பாக்கியம் நிச்சயமாகக் கிட்டும்.

தனது வாடிக்கையாளர் விவரங்களை சட்டரீதியாகப் பாதுகாக்கும் சுவீடனைச் சேர்ந்த பி.ஆர்.கியூ (PRQ ) என்ற நிறுவனத்தினூடாக விக்கிலீக்ஸ் தளத் தினைப் பதிவு செய்யுமாறு யூலியனுக்கு சட்ட ஆலோ சகர்களின் உபதேசித்தனர். இதன்படி விக்கிலீக்ஸ் (www.wikileaks.org) என்ற இணையத்தள முகவரி, 2006 ஆம் ஆண்டுயூலியனின் பெயரில் பதிவுசெய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை யூலியனுக்கு வாழ்க்கை ஒளித்துப் பிடிக்கும் விளையாட்டாகவே மாறிப் போய் விட்டது.

சுவீடனில் விக்கிலீக்ஸின் பிரதான இணைய வழங்கியைச் சுவீடனில் பதிவு செய்த சூட்டோடு சூடாக இன்னொரு காரியத்தையும் செய்வதற்கு -பின்னால் வருவதை எதிர்வு சொல்லும் யூலியனின்மூளை - தூண்டியது. அதன்படி விக்கிலீக்ஸின் பதிவு ஸ்வீடனின் பி.ஆர்.கியூ என்ற நிறுவனத்தில் இருந்தாலும்கூட , விக்கி லீக்ஸ் என்ற முகவ ரிக்கு ஏறக்குறைய 20 கோப்பு நிரல்களை விநியோகிக்கும் வழங்கி கள் பெல்ஜியம் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் உள்ளன. இந்த நாடுகள் எல்லாமே தகவல் பரவ லுக்கு சட்டப்படிப் பாதுகாப்பு வழங்குபவை. ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு வழங்கியில் இருந்து விக்கிலீக்ஸ் தளம் செயல்படும். இதனால் அதன் பிரதான வழங்கி எங்கிருந்து தகவல்களை அப்டேட் செய்கிறது என்பதைக் கண்டுபிடிக்க எந்த வொரு தகவல் தொழில் நுட்பக் கொம்பனும் தலையைப் பிய்த்துக் கொள்ளவேண்டி யிருக்கும்.அத்துடன் எந்த நேரத்திலும், எந்த நாட்டின் நிர்ப்பந்தத்துக் காகவும், என்னதான் துன்பம் நேர்ந்தாலும் விக்கிலீக்ஸில் வெளியிட்ட ரகசியத் தகவல்களை நீக்குவ தில்லை என்ற ஜூலியனின் கொள்கை வசதிக்காகவும் இந்த ஏற்பாடு. (சிலவேளை களில் நான் முன் வைச்ச காலை பின் வைப்ப தில்லை என்ற ரஜினிகாந்தின் அனல் தெறிக்கும் வார்த்தை களை யூலியனும் அறிந்திருப்பாரோ என்னவோ ? )ஏதேனும் ஒரு நாட்டில் விக்கிலீக்ஸின் வழங்கியை யாரும் முடக்கி னால் வேறொரு நாட்டில் இருந்து தளம் தடையின்றி செயற் படும் வண்ணம் அதிவிஷேட பாதுகாப்புப் பொறிமுறைக ளுடன் அது வடிவமைக்கப்பட்டது.

இதேவேளை விக்கிலீக்ஸ் தளத்திற்கென முழுநேரமாகப் பணிபுரிவது வெறும் ஐந்து நபர்கள் மட்டுமே (யூலியனின் தேடலின் விளைவாகக் கணடறியப்பட்ட நண்பர்கள்). இதைவிட உலகெங்கும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் தன்னார்வத் தொண்டர்களாக விக்கிலீக்ஸில் எந்தவிதமான வேதனத்தையும் எதிர்பார்க்காது பணி புரிகின்றனர். இவ் வாறு தொடங்கப்பட்ட விக்கிலீக்ஸ் இணையத்தளம் உடனடியாகவே துணிச்சலான செய்தி சேகரிப்பில் இறங்கியது. சேகரிக்கப்பட்ட செய்திகள் அல்லது ஆதரங்கள் யாவற்றையும் ஒருமுறைக்குப் பலமுறை உறுதிப்படுத் தப்பட்டே வெளியிடப்பட வேண்டும் என்பதில் யூலியன் பிடிவாதமாக இருந்தான். புலனாய்வு ஊடகத்துறை யில் இன்னும் வெற்றுப் பரப்பாக நீண்டுகிடக்கின்ற வெளிகளை நிரப்புவதே விக்கிலீக்ஸின் ஒரே நோக்க மாக இருக்கவேண்டும். வெறும் பரபரப்புக்காக தகவல் களை வெளியிடும் மற்றைய ஊடகங்களை விடவும் விக்கிலீக்ஸின் தனித்துவம் அதன் மூலமே வெளிப்படும் என்பதே யூலியன் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகள். இந்த வார்த்தைகளை உதட்டில் இருந்து உதிர்ப்பதோடு மாத்திரம் நின்று விடா மல் செயலிலும் காட்டினான். விக்கிலீக்ஸின் அதிர்டியில் முதலில் வீழ்ந்தவர்தான் இத்தொடரின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட சோமாலிய ஆன்மீகத்தலைவர். *(திரைகள் இன்னும் திறக்கும்)*

ஓளண்யன்


## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

**பதவி வெற்றிடம்: வாகனச் சாரதி**

01. சம்பளக் குறியீட்டு இல. : 312/14
02. சம்பள அளவுத்திட்டம் : 9700-80X10-85X10-11350
03. வயதெல்லை : 18-45 வரை
04. விண்ணப்ப முடிவுத் திகதி : 09.02.2011
05. தகைமைகள்: 5 ஆம் வகுப்புத் தராதரப் பத்திரமும் சாரதிக்கான அனுமதிப் பத்திரமும் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவமும்.
06. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் படாது. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
07. விண்ணப்பங்கள் யாவும் *'பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்'* என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ 09.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**பொது முகாமையாளர்,**
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.
(சி/575090)


# ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் இடைக்காலத் தலைமை தேவை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா கூறுகிறார்

கொழும்பு, ஜன.24

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை களைய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புதிய ஆலோசனை ஒன்றை வழங்கியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது ஐக்கிய தேசியக் கட்சியினருடன் அவர் கலந்துரையாடினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, ஹர்சா டி சில்வா, போதி ரணசிங்க போன்றோருடன் சந்திரிகா கலந்துரையாடல் நடத்தினார்.

இதன் போது கருத்துரைத்த அவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான தலைமைத்துவப் போட்டியில்,யார் வென்றாலும் ஐக்கிய தேசியக்கட்சியை பிளவுப்படுத்த விடக்கூடாது என தெரிவித்தார்.

எனவே கரு ஜயசூரியவை இடைக்கால தலைவராக நியமிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்கலாம் என்ற கருத்தை அவர் முன்வைத்தார். (ம)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.24

உடப்புஸ்ரீருக்குமணி சத்திய பாமா சமேத ஸ்ரீ பார்த்த சாரதி பெருமாள் ஸ்ரீரங்க பார்வதி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று திங்கள் கிழமை முற்பகல் 9.15 மணிமுதல் 10.37 வரை நடைபெறவுள்ளது. (ற-122)

***

வல்வை ஆதி கோவிலடி அருள்மிகு ஆதிவைரவ தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று திங்கள் கிழமை முற்பகல் 10 மணி முதல் 11 வரை நடைபெறவுள்ளது. (ற-122)

***

பருத்தித்துறை வியாபாரி மூலை இன்பர் சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிசேகம் இன்று திங்கள் கிழமை முற்பகல் 11.20 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மகா கணபதி மாணிக்க வாசக் குருக்கள் தலைமையில் கும்பாபிசேக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற-122)




◄ தெல்மே நாட்டியம்

தெல்மே நாட்டியம் தேவல் மதுவ சமயச் சடங்கிற்கே உரித்தான ஒரு நாட்டியமாகும். இது "தேவல்" என அழைக்கப்படும் தெய்வத்தினை சாந்தப்படுத்தி கருணை பெறுவதற்காக ஆடப்படுகின்ற ஒரு நடனமாகும். தெல்மே நாட்டியம், இலங்கையின் தாழ் பிரதேசத்திற்குரிய நாட்டியங்களில் தூய தாளலயங்களுடன் கூடிய சாஸ்திரிய நடன வடிவமாகும். இதில் "யக் பெறய" பிரதான மேளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

யக் பெறய ►

யக் பெறய (றுகுண பெறய, தெவில பெறய, பகதரட்ட பெறய) எனீபது பாரம்பரியமான ஒரு மேளமாகும். இது இலங்கையின் தாழ் பிரதேச நாட்டியங்களுடன் இணைந்த ஒரு கருவியாகும். நீண்ட உருளை வடிவமான இக் கருவி இரண்டு கைகளினாலும் இசைக்கப்படுகிறது.



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
CENTRAL BANK OF SRI LANKA 60 growth & stability


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பசளை ஆக்குவோம்

துண்டு துண்டாய்க் காகிதம்
தரையில் பரவிக் கிடக்குது
கண்ட மனமும் சலிக்குது
குனிந்து அதனைப் பொறுக்குவோம்

பொறுக்கி எடுத்து நாமெல்லாம்
பொதியில் இட்டுக் கொள்ளுவோம்
இருக்கும் குழியில் போடுவோம்
இயற்கைப் பசளை ஆக்குவோம்

பயன்தரும் மரஞ் செடி கொடிகளுக்கு
உரமாய் அவற்றைப் போடுவோம்
நாளும் நல்ல பயனைப் பெற்று
நலமுடனே நீண்ட காலம்
மகிழ்ந்து நாமும் வாழலாம்.

அபிராமி

## நல்ல வரவேற்பு...



ஆசிரியர்களுக்கான மரியாதை : உலக ஆசிரியர் தினத்தையொட்டி வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைநிகழ்வுகளில் மாணவிகளின் வரவேற்புப் பாடல் இசைக்கின்றனர். (7)

# உவமைச் சொற்றொடர்கள்

★ அத்தி பூத்தாற் போல - மிக அரிது
★ அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல - பகைவரைப் பொறுத்தல்.
★ அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல - கூடாத நட்பு.
★ ஆண்டிகள் கூடி மடம் காட்டியது போல - உருவாகாத திட்டம்.
★ இடியேறு கேட்ட நாகம் போல - கலக்கம்
★ இரும்பும் காந்தமும் போல - கவர்ச்சி
★ உயிரும் உடலும் போல - பிரியா நட்பு
★ உருத்திராக்கப் பூனை போல - வெளிவேடம்
★ உள்ளீடற்ற பதர் போல - போலித்தோற்றம்
★ கீரியும் பாம்பும் போல - பகை
★ கல்மேல் எழுத்துப் போல - அழியாமை
★ காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல - எதிர்பாராத சம்பவம்.
★ கனியிருக்கக் காய் கவர்வது போல - நன்மையில் வெறுப்பும் தீமையில் விருப்பும்
★ குன்றின் மேலிட்ட தீபம் போல - பகிரங்க மதிப்பு.

சுரபி

# கிருஷ்ணா புடைவைகரு

(தொடர்ச்சி)





சீடர்களின் தொல்லையைப் பொறுக்காமல், ''நான் வேறு ஒன்று செய்து கொள்கிறேன்; நீங்கள் இதை எடுத்துக் கொள்ளுங்கள்''என்றான் அவன்.

பரமார்த்தரும் மகிழ்ச்சியோடு பாடையில் ஏறி அமர்ந்து கொண்டார்.

இருட்டத் தொடங்கியதும் முட்டாள் கொள்ளிக் கட்டையைத் தூக்கியபடி முன்னே நடந்தான்.

மற்ற சீடர்கள் பாடையைத் தூக்கி வந்தனர்.

சிறிது தூரம் வந்ததும் ''ஒரே தாகமாக இருக்கிறது'' என்றபடி பாடையை இறக்கி வைத்தார்கள் சீடர்கள்.

ஐந்து பேரும் தண்ணீரைத் தேடிச் சென்றபோது, பரமார்த்தர் விழித்துக் கொண்டார். ''என்ன? யாரையுமே காணோம்?'' என்றபடி சீடர்களைத் தேடி வேறு பக்கம் சென்றார்.

அப்போது அந்த வழியாக வந்த நாய் ஒன்று பாடையில் ஏறிப் படுத்துக் கொண்டது.

திரும்ப வந்த சீடர்களோ, எதையும் கவனிக்காமல் பழையபடியும் பாடையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டனர்.

மடத்தை நெருங்கியதும், நாய் விழித்துக் கொண்டது. ''லொள், வள்'' என்று குரைத்தது.

அவ்வளவுதான்! பாடையைத் தொப் என்று கீழே போட்ட சீடர்கள் ''ஐயையோ! இதென்ன அதிசயம்? நம் குரு நாயாக மாறி இருக்கிறாரே!'' என அலறினார்கள்.

''அந்தக் கிருஷ்ணக் கடவுள் தான் ஏதோ மந்திரம் போட்டு விட்டார்!'' என்றான் முட்டாள்.

''நம் மடம் கூடத் தங்கமாக மாறாமல், பழையபடி அப்படியே இருக்கிறதே!'' என்று துக்கப்பட்டான் மண்டு.

அப்போது இருட்டில் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்த பரமார்த்தர், ''புத்திகெட்ட சீடர்களே! என்னைப் பாதி வழியிலேயே விட்டு விட்டு வந்து விட்டீர்களே!'' எனத் திட்டினார்.

''குருநாதா! அந்தக் கிருஷ்ணக் கடவுளை நம்பினோம்! அவரும் பொரி வாங்கித் தின்று விட்டு, நம்மைக் கைவிட்டு விட்டாரோ!'' என்று ஒப்பாரி வைத்தனர் சீடர்கள்.

பரமார்த்தரும் சீடர்களுடன் சேர்ந்து கொண்டு புலம்பினார்!.

(முற்றும்)

## அறிவுக்குச் சில...

| | |
|---|---|
| ★ இலங்கையின் பரப்பளவு | - 65, 610 சதுர கி.மீ. |
| ★ கடற்கரையின் பரப்பளவு | - 1600 சதுர கி.மீ. |
| ★ பிரித்தானியா இரண்டு தீவு பரப்பளவு | - 244, 820 கி.மீ. |
| ★ கியூபா தீவு ஒன்று பரப்பளவு | - 110, 860 கி.மீ. |
| ★ யப்பான் தீவு ஒன்று பரப்பளவு | - 377, 835 கி.மீ. |
| ★ மடகாஸ்கார் தீவு ஒன்று | - 587, 040 கி.மீ. |
| ★ சீசெல்ஸ் சிறு தீவுக் கூட்டங்கள் | - 454 கி.மீ. |
| ★ மாலை தீவு சிறுதீவுக் கூட்டங்கள் | - 298 கி.மீ. |
| ★ கிறின்லாந்து தீவு ஒன்று | - 217, 000 கி.மீ. |
| ★ பீ.ஜி.சிறுதீவுக் கூட்டங்கள் | - 18, 870 கி.மீ. |

சிலையூர் தனம்.

## டக்டக் சத்தம்



டக்டக் சத்தம் போடுமாம்
நாலு காலால் ஓடுமாம்
கொள்ளுப் புல்லுத் தின்னுமாம்
குதித்து குதித்துச் செல்லுமாம்

ஈ ஈ என்று கனைக்குமாம்
கிட்டப் போனால் உதைக்குமாம்
வண்டி இழுக்க உதவுமாம்
வாலைச் சுழட்டி ஆட்டுமாம்

சண்டித்தனமும் செய்யுமாம்
சவுக்கால் அடியும் வாங்குமாம்
அந்த மிருகம் என்னவாம்?
அதுவே குதிரை குதிரையாம்.

அபிஷேன்.

## மாணவர்கள் தெரிந்து கொள்ளச் சில தகவல்கள்

1.மிகப் பெரிய தீவு - கிறீன்லாந்து.
2. மிக உயரமான மலை - எவரெஸ்ற்
3. மிகப்பெரிய கடல் - தென் சீனக்கடல்
4. மிகப்பெரிய வளைகுடா- மெக்சிக்கோ.
5. மிகப்பெரிய விரிகுடா - ஹட்சன்.
6. மிகப்பெரிய பாலைவனம் - சகாரா
7. மிகப்பெரிய கண்டம் - ஆசியா
8. மிக உயரமான அணை - போஸ்டா
9. அதிக மழைபெறும் இடம் - இந்தியா
10. மிக நீளமான நதி - நைல் நதி

க. ஜனனி,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## சிந்தனைத் துளிகள்

★ நீ இயற்கையை நேசித்தால் இயற்கை என்னை நேசிக்கும்.
★ போராடாமல் இருப்பவனை விடப் போராடித் தோல்வியடைபவனே சிறந்தவன்.
★ நீ எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறாயோ அவ்வளவு உன் ஆசைகளையும் குறைத்துக் கொள்.
★ நீங்கள் எவ்வளவு துயரங்களை எதிர்கொண்டாலும் உங்கள் இலட்சியத்திலிருந்து இறங்காதீர்கள்.
★ பார்த்தலோமியாவுக்குப் புயலாக இருந்த முனைதான் வாஸ்கொடகாமாவுக்கு நம்பிக்கையாக மாறியது.

கி. கோபிநாத்.

## பயத்தை அகற்றி வாழ்வோம்

பய உணர்வு என்பது எமக்கு நாமே போடுகின்ற விலங்காகும். இது கூடுதலாகக் குழந்தைகளைப் பாதிப்படையச் செய்கின்றது. தாழ்வு மனப்பாண்மை, சோர்வு, முகமலர்ச்சி இன்மை, ஒதுங்கி வாழ்தல் போன்ற பண்புகள் இவர்களிடத்தில் காணப்படும். வீட்டில் அம்மாவுக்குப் பயம், மாலை நேரம் வேலைவிட்டு வரும் அப்பாவைக் கண்டால் பயம், பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களைக் கண்டால் பயம், வீதியில் போனால் வாகனத்துக்குப் பயம், நாய்க்குப்பயம், பாம்புக்குப்பயம், இப்படி எல்லாவற்றுக்கும் பயந்தால் எப்படி?

''பயம் கொள்ளத் தேவையில்லை பாப்பா'' என்று பாரதியார் கூறியிருக்கிறார். எனவே மாணவர்களே உங்களுக்குள் எவ்வாறு பயம் தோன்றுகின்றது என்று ஆராய்ந்து பாருங்கள். அதிலிருந்து மீண்டு வருவதற்கு முயற்சி செய்யுங்கள்.

உடற்பயிற்சி, தியானம், விளையாட்டு, நண்பர்களுடன் கொண்டாட்டம், குதூகலம் என்று பொழுதைப் போக்கிப் பாருங்கள் ''பயம்'' இல்லாது ஒழிந்து விடும். ''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'' [illegible] தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பயம் என்ற மாயையை அகற்றி விட்டால் நாம் செய்யும் காரியங்கள் யாவும் வெற்றியே.

- க. ஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை அருள்மிகு து

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்

## கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலா





### பிரார்த்தனை உரை

அகில உலக நாயகியாக விளங்குகின்ற தெல்லிப்பழை துர்க்காபுரம் உழுகொடைப் பதி துர்க்கை அம்பாள் சங்கு, சக்கர காரணி,தாரணியாகக் காட்சிதருகின்றாள். உலகம் போற்றும் அம்பிகைக்கு 'குட முழுக்கு விழா' என்னும் பெருஞ்சாந்தி நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

ஸ்ரீ துர்க்காதேவிக்கு முப்போதும் திருமேனி தீண்டி பூசைகள் செய்யவும்,விழாக்கள் செய்யவும் பெரும்புண்ணியப் பேறுபெற்றுள்ளேன். அடியார்களுக்குத் தொண்டு செய்வதனால் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் மகாகும்பாபிஷேக விழாவை அடியார்கள் அனைவரும் பக்தி பூர்வமாகவும்,ஆசார சீலராகவும் வருகை தந்து தரிசித்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்யுமாறு பிரார்த்திப்போமாக.

வா.அகிலேஸ்வரக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்.




### ஆசியுரை

சீர்நிறைந்த தெல்லிப்பழை துர்க்கா தேவியின் மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் பேருவகை கொள்கிறோம். இந்நாட்டில் உள்ள சக்திதலங்களில் இன்று உலகம் அறிந்த கோயிலாக விளங்குகிறது இந்த ஆலயம். இத்திருக் கோயிலில் காலம் தவறாத பூசை, சிவாகம நெறிமுறைக்கமைய சகல நித்திய, நைமித்திய கிரிகைகளும் நடைபெற்று வருவது சிறப்புக்குரியது. தமிழ்வேதமாகிய திருமுறை பாராயணத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கின்ற மேன்மையை இவ்வாலயத்தில் காணலாம். இத்திருக் கோயிலின் உன்னத வளர்ச்சிக்கு பாண்டிமாதேவி போல் அர்ப்பணிப்புடன் உழைத்தவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள். அவரது தலைமைத்துவத்தில் சமூகப் பணிகளையும் இத்திருக் கோயில் நிறைவாகச் செய்து பெருமை பெற்றது. இன்றும் அவர் வழியில் திருக் கோயில் நன்முறையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது பாராட்டுக்குரியது . நிர்வாக சபையின ருக்கும் தலைமையை ஏற்று அன்னை யின் வழியில் தொடரும் திரு.ஆறு திருமுருகன் அவர்களுக்கும் அடியார்களுக்கும் நல்லாசி கூறி அமைகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

நல்லை திருஞானசம்பந்த ஆதீனமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்.




### வாழ்த்துரை

ஆழிசூழ் இப்பூவுலகின் அனைத்துச் செயற்பாடுகளையும் செயற்படுத்தும் சக்தியாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தியின் அம்சமாக விளங்கும் தெல்லிநகர் துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்கா தேவியின் திருக்கோயில் இன்று பூரண பொலிவுடன் "பூலோக கைலாயமாகக்" காட்சி தருகின்றது. ஸ்ரீ துர்க்கா வழிபாட்டின் மூலமாக,இன்று உலகமெங்கும் பரந்து வாழும் தெல்லிநகர் துர்க்கை அடியார்களால் தாம்வாழும் நாடுகளில் ஸ்ரீதுர்க்கா வழிபாட்டை முன்னெடுக்கும் வகையில் பெரும் கோயில்கள் அமைந்துள்ளதை யாமறிவோம். அவ்வகைப் பெருமை அன்னை ஸ்ரீ துர்க்காதேவி திருக்கோயில் முற்றிலும் புதிதாக வர்ணமெழுதி புதிய பல திருப்பணிகளுடன் இன்று நடைபெறும் பெருஞ்சாந்தி விழா சிறப்புடன் நடைபெற்று அன்னை திருவருள் நலம் அன்னை அடியவர்கள் அனைவருக்கும் பலன்தரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபமஸ்து

வேதாகம வித்யாபூஷணம்
பிரம்மஸ்ரீ.விஸ்வ நாராயணசர்மா,
அதிபர், துர்க்கா குருகுலம்.

### ஆசிச் செய்தி

தெல்லியூர் உழுகுடைப்பதியில் கோயில் கொண்டருளும் எம் துர்க்கை அம்மன் மஹிஷாசுர வர்த்தனி ஸ்ரீ துர்க்கா தேவியின் இன்னருள் கூட்டும் இனிய குடமுழுக்கு விழா இன்று நிகழத் திருவருள் கைகூடி உள்ளதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அம்பாள் புதிய வண்ணப் பொலி வுடன் ஆதி சௌந்தரிய அலங்கார ரூபினியாகக் காட்சி தருவது அதியற்புதமாகும். இன்னும் இப் பெருமாட் டியின் முதலாவது குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு மூல விக்கிரகம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்ட போதும் எம் முருகப்பெருமான் ஆலயத் திருப்பணிக்காக வந்தகருங்கற்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க முயன்ற போது எக்கல்லும் பொருந்தா நிலையில் வேம்பின் வேர்களுக் கிடையில் சிக்குண்டிருந்த அக்கல்லே அம்பாளின் திருவுருவ ஆக்கத்துக்கு உகந்தது என கண்டதும் அம்பாளின் மூர்த்திகரச் சிறப்புக்குச் சான்றாகும். மேலும் இற்றைக்கு 190 வருடங்களுக்கு முன்னரே துர்க்கை அம்மனின் விஜயதசமி விழாவின் போது மாவை முருகப்பெருமான் இத்தலத்துக்கு எழுந்தருளி வியாக்கிராவதம் நிகழ்த்தி மீள்வதும் இருதலங்களுக்கும் இடையிலான பழைமைத் தொடர்புக[்]குத்தக்க சான்றாக அமைவது குறி[ப்]பிடத்தக்கதாகும். ஆகவே எம் முருகப்பெருமான் ஆலயத்தில் உருவாக்கப்பட்டு இத்தலத்துக்கு எழுந்தருளி அருளாட்சி புரியும் துர்க்கை ஸ்ரீ மகாவிஷ்ணு துர்க்கையாக காட்சி அளித்து அருள்புரிகின்ற கும்பாபிஷேக விழாவுக்கு அருளாசி வழங்கி ஆசிகூறுகின்றேன். திருவருளுக்கு பாத்திரமாதல் மனித பிறவி எடுத்ததன் பலன் இதற்காக நாம் அனைவரும் சங்கற்பிப்போமாக.

தெல்லியுழு குடையிலொளி நல்கு மன்னை
தேசுடைய துர்க்கையருட் பாதம் போற்றி
வல்லமையே நல்கிவெவர் துக்கம் நீக்கும்
வைஷ்ணவியே ஸ்ரீவிஷ்ணு துர்க்கையம்மா

மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
ஆதீனகர்த்தா, மாவையாதீனம்.

### வாழ்த்துரை

துர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பன்னிரண்டு வருடத்துக்கு ஒரு முறை நடைபெறும் இப் பெருவிழா காண்பதில் இம் மானிடப் பிறப்பு எடுத்ததில் பெரும் புண் ணியமாகும். [துர்க்]காதேவி ஆலயத்தை மையமாகக் கொண்டு இச்சங்கம் 1965, 1981,1997ஆம் ஆண்டு கும்பாபிஷேகங்களில் பெரும்பங்காற்றியிருப்பதையிட்டு பெருமை அடைகின்றோம். ஆலயத்துடன் தொடர்புபட்ட நான்காம் மண்டபம் அமைத்தல், கோபுர அத்திவாரபணி போன்ற முக்கிய பணிகளுக்குச் சிரமதானம், நிதிபங்களிப்பு மூலமாக ஆற்றியிருந்தது. மறைந்த எங்கள் போசகரும் முன்னாள் தேவஸ்தானத் தலைவருமான அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்

KANESAN STORES
கணேசன் ஸ்ரோர்ஸ்
wholesale&Retail Dealers in Textiles
Proprietor: K.Sivanesan
Tel: 021 222 2830
201, K.K.S. Road, Jaffna.

JANA CIVIL
Engineering Construction
K.K.S. Road,
Tellippalai.

ஜெயகிருஸ்ணா ஹாட்வெயர்
கட்டடப் பொருள்கள் ஏக விநியோகஸ்தர்
இல.20, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

சாரங்கா நகைமாடம்
இல.157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212226972
இல.55, செட்டித்தெரு, கொழும்பு- 11
T.P: 0112434971
சிவா நகைமாடம்
மீண்டும் புதுப் பொலிவுடன் இல.14, கண்டி வீதி,
20.01.2011இல் ஆரம்பமாகியுள்ளது.
நவீனசந்தை, சாவகச்சேரி. 021 492298

22கரட் தங்க நகைகள்
பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்
ஜெயதுர்க்கா
நகைத் தொழிலகம்
ஸ்ரேசன் றோட்,
மல்லாகம்.

ஆர்.வி.ஜி. ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2226606
R.V.G.மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2129

மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய
விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள
துவாரகா
பல்பொருள் வாணிபம்
உரிமையாளர்: பரமேஸ்வரன்
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

சகல விதமான உணவு வகைகளையும்
குறித்த நேரத்தில் ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள
சயன்
உணவகம்
உரிமையாளர்: ரவி
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

ANNA
OHO JEEVAKARAM
உடனடிச் சத்துணவு
அண்ணா
தொழிலகம், இணுவில்
தொ.பே: 021 222 3565,
021 720 0800.

லிங்கம் கிறீம் கவுஸ்
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அபிஷேக்
மல்ரி ஸ்போட்
இராமநாதன் கல்லூரி முன்பாக,
மருதனார்மடம்.
தொ.பே: 0718565540.

பத்திரிகை முகவர்
உப்புமடம் சந்தி.
ராஜன் ஹாட்வெயார்
பெயின்ற் சொப்
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
உரிமையாளர் A.யோகராசா

ஆதித்யா
அறுசுவை சைவ
உணவகம்
369, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மணியம்
பல்பொருள்வாணிபம்
மணியம்
ரயர் வேக்ஸ்
ஸ்ரேசன் றோட்,
மல்லாகம்.

அம்பாள்
மரக்காலை
Nal/DS/842
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## சிறப்பு மலர் - 24.01.2011

### மண்டலாபிஷேகம் தினமும் பகல் 10.00 மணிக்கு நடைபெறும்



கூறியிருந்த பாடல்வரி "இளைஞர் பணி சிறக்கக் கண்டேன்" எனத் தெரிவித்திருந்தார். அவ்வகையில் நிகழவிருக்கும் இக்கும்பாபிஷேகப் பெருவிழா அம்பாளின் திருவருளால் சிறப்பாக நடைபெறப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்
இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.

தெல்லிநகர் துர்க்கையின் குடமுழுக்குக் கண்டு கரம்கூப்பி மகிழ்வீர்.

அன்னையருள் ஒளிதுலங்க
ஆலயமும் மிருந்தோளிர
இன்னுமெமை ஆண்டருளும்
இனியவிஷ்ணு துர்க்கையருள்
நன்றுபெற நாற்றிசையும்
நனினமுற வேண்டியுமே
சின்னமெனத் திரிசூலம்
தாங்கியுமே சிங்கமதில்
உன்னத நற் காட்சிதரும்
உத்தமியாள் குடமுழுக்கும்
மின்னுமருட் கோலவெழில்
மிகைப்படவே சிந்தியுமே
நன்மைதர வேண்டுமென
நாடியவள் தாள்பணிந்தே
உன்னியவள் அருட்கோலம்
கண்டுதினம் துதிப்போமே

கவியாக்கம்: சு.குகதேவன்
தெல்லிப்பழை.

குடமுழுக்கு காணும் தெல்லிநகர் துர்க்கையே!

தெல்லிநகர் வீற்றிருக்கும் வீரதுர்க்கையே!
பல்லுயிரும் பாங்காய் வாழ பாரினிலே வந்தவளே!
கல்லுக்குள் ஈரமும் கசியுமம்மா உன் கருணையாலே
நெல்லுக்குமாய் ஓடி நீண்டஆயுள் தந்திடுவாய் தாயே!

உன் அருட்கடாட்சம் பெற நாங்கள்
என்றும் நாடுகிறோம் உனை தாயே!
நின் பாதம் பணிந்திட்டோம் நிதம் தாயே - நாம்
ஒன்றுமறியோம் நீயே அருள்வாய்

சங்கடங்கள் தீர்த்தெமை சந்ததமும் உனைத் தொழ
மங்காப்புகழுடன் வாழவழிகாட்டிடுவாய்
இங்கிதமாய் நீயும் ஈய்ந்திடவே நாங்கள்
சங்கையுடன் பாடிடுவோம் உன்புகழ் தினமும்.

(தெல்லியூர்த் தேவி.)

#### பிரார்த்தனை உரை



தெல்லிப்பழை துர்க்கை அம்பாளுக்கு இன்று மகாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுகின்றது. கும்பாபிஷேகவிழா அல்லற்பட்டு துயருறும் பக்தகோடிகளுக்கு ஒரு பெருஞ்சாந்திவிழாவாகும். சர்வதேச சைவத்தமிழ் அன்பர்கள் வழி நின்ற அற்புதத் தெய்வம். கண்கண்ட தெய் வமாக விளங்கும் துர்க்கை அம்பாளின் வரலாறு மாவிட்டபுரம், கீரிமலை போன்ற பழைமை வாய்ந்த திருத்தலங்களோடு தொடர்புடையது. துர்க்கை அம்மன் வரலாறு எழுத வேண்டுமானால் மாவைக்கந்தன் ஆலய வரலாறு அத்தியாவசியமானது. சமூகக் கோயிலாக உள்ள துர்க்கை அம்மன் கோயில் பொதுக்கோயிலாக மாற்ற உதவிய பரோபகாரி, கதிரேசு உடையார் நாகநாதர் என்பவரே ஆகும். பூரணத்துவமான கோயிலாக விளங்கும் துர்க்கை அம்மன் கோயிலின் சித்திரத்தேர், வானுயர் இராஜகோபுரம், தீர்த்தத்தடாகம் என்பனவற்றை அமைத்துத் திருத்தொண்டாற்றிய பெருமை சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரையே சாரும். ஒளிமயமான உச்சநிலையைத் தந்த சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் தனாதிகாரியாக, நிர்வாகசபைத் தலைவராக, தர்மகர்த்தாசபைத் தலைவராக அரும் பெரும் பணியாற்றி ஒரு பெருநிலையைத்தந்தார். அந்நிலை இன்று பெருநிதியைத்தந்து துர்க்கை அம்பாளின் திருக்கோயிலை பொலிவு செய்கின்றது. எண்ணிறைந்த அடியார்களுக்கு அனுக்கிரகித்த இன்றைய மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில் துர்க்கை அம்பாள் திருவருள்மழை பொழிவதாக என்று பிரார்த்திப்போமாக.

கா.சிவபாலன்.

#### நிரந்தர அமைதி உருவாகட்டும்



தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கா தேவியின் மகாகும்பாபிஷேகம் குறித்துச் சைவ உலகம் பெருமகிழ்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை. முந்நூறு வருடங்களுக்குமேல் பழைமை வாய்ந்த இத்திருக் கோயிலின் பெருமை அனைவரும் அறிந்ததே. காசி யாத்திரை மேற்கொண்டு கங்கைக்கரையில் அருந்தவமிருந்து கதிர்காமர் என்ற ஞானியார் பற்றை வளவில் உழுகுடைப்பதியில் இலுப்பை மர நிழலில் ஆரம்பிக்கப்பட்ட தலமே இன்று பெருங் கோயிலாக பெருமை பெற்று விளங்குகிறது. இக்கோயில் முகாமையாளராக விளங்கிய ஸ்ரீமான் கதிரேசபிள்ளை நாகநாதர் என்ற பெரியார் இக்கோயிலைப் பொதுவுடைமையாக்கினார். தர்மகர்த்தா சபை நிர்வகித்துப் பின் நிர்வாகசபை நிர்வகித்து வருகிறது. இக்கோயிலின் உன்னத வளர்ச்சிக்கு வித்திட்டவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இவரது அர்ப்பணிப்புமிக்க தொண்டினால் குடிசையிலிருந்த கோயில் பெரும் தேவஸ்தானமாக மிளிர்ந்தது. கடவுள் பக்தியும் சொல்லாற்றலும் நல்லாளுமையும் நிறைந்த அம்மையார் அவர்கள் 43 வருடங்களுக்கு மேலாக இவ்வாலய வளர்ச்சியில் கண்ணை இமைகாப்பது போல காத்து வந்தார்கள். நிர்வாகசபையில் தனாதிகாரியாக விளங்கிப்பின் 1978 முதல் தலைமை ப் பொறுப்பு ஏற்று பெரும்பணிகளை நிறைவேற்றினார்கள். ஆலயப் பணியை சமூகப்பணியுடன் இணைத்து புதிய அத்தியாயத்தை உருவாக்கியவர் அன்னை அவர்கள். இப் பெரியாரின் ஆற்றல்படுத்தலில் வளர்ந்த சிறியேன் இன்று அம்மையாரின் பொறுப்பை ஏற்று அன்பர்களின் பூரண ஒத்துழைப்புடன் எம்மால் இயன்ற பணியை நிறைவேற்றிவருகிறேன். குறிப்பாகத் துர்க்கா தேவியின் நிறைந்த அருளும், நிர்வாகசபை, தர்மகர்த்தாசபை மற்றும் தேவஸ்தானத் தொண்டுப் பணிக்கு உதவுகின்ற தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர்சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம், பணியா ளர்கள் அனைவரது பரிபூரண ஒத்துழைப்பால் துர்க்கா தேவியின் திருப்பணி வேலைகளைச் சிறப்பாக நிறை வேற்றக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. துர்க்கா தேவியின் பக்தர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் நிறைந்த காணிக்கைகளை வழங்கி தேவஸ்தானப் பணி சிறக்கப் பெரும்பங்கு வகித்து வருவது நன்றிக்குரிய விடயமாகும். மகாகும்பாபிஷேகம் நன் முறையில் அமைய எமக்கு வழிகாட்டியாக நெறிப்படுத்தும் மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ து.சண்முகநாதக் குருக்களின் சேவைக்கு யாம் நன்றியுடையோம். பெரியாரின் ஆசியோடு பலநூறு சிவாச்சாரியார்கள் பக்திபூர்வமாக மகா கும்பாபிஷேகத்தில் பங்குபற்றுவது எமக்குப் பெருமை தருகிறது. எங்கள் தேவஸ்தானத்தில் சிறுவனாக இணைந்து வளர்ந்து இன்று பெரும் சிவாச்சாரியராக மிளிரும் சிவஸ்ரீ .வா. அகிலேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக மகா கும்பாபி ஷேகத்தை நடத்துவதும் அம்பாளின் திருவருளே. கடந்த ஆவணி மாதம் வருடாந்த திரு விழா நிறைவடைந்து ஆறாவது நாள் பாலஸ்தாபனம் செய்து திருப்பணி வேலைகளை ஆரம்பித்தோம். கடந்த நான்கு மாதங்களாக இரவு, பகலாகத் திருப்பணி வேலை நடைபெற்றது. தென் இந்திய சிற்பக்கலைஞர்கள் அறுபது பேர் வரை ஆலயத்தில் தங்கியிருந்து திருப்பணி வேலையில் ஈடுபட்டனர். எமது தேவஸ்தானத்துடன் மிக நீண்டதொடர்புடைய உள்நாட்டுக் கலைஞர்களும் பங்குகொண்டு உழைத்தனர். தென் இந்திய சிற்பக்கலைஞர் சிதம்பரம் கொள்ளிடம் திரு.புருஷோத்தமன் அவர்களின் தலைமையில் பல்வேறு சிற்பவேலைகளுடன் கூடிய வாயில் மணி மண்டபம் அமைக்கப்பட் டுள்ளது. லண்டனில் வாழும் அம்பாள் அடியார்களின் உதவியால் ஆயிரம் கிலோ எடையுடைய பெரிய மணி உருவாக்கப்பட்டு புதிய மணிக்கூட்டுக் கோபுரம் உரு வாக்கப்பட்டுள்ளது. ஆலய உட்பிரகாரம் யாவும் புனர் நிர்மாணம் செய்யப் பட்டுள்ளது. மூலஸ்தானம் முழுவதும் இந்தியாவிலிருந்து கருங்கல் மாபிள் எடுக்கப்பட்டு அழகாகப் பொருத்தப்பட்டுள்ளது. ஆலய வசந்த மண்டப வெளி வாசலில் புதிய மண்டபமும் சிறிய கோபுர வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்தல மண்டப கூரை யாவும் மரச்சிற்பங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. பரிவாரத் தெய்வங்கள் உட்பட ஆலய முகப்புகள் பித்தளை, வெள்ளி வேலைகளால் திருவாசிகள் அலங்காரமாக அமைக்கப்பட்டுள்ளது.ஆலய வெளிச் சுற்றுமதில் வர்ணக் கூடுகள் அமைக்கப்பட்டு சிற்பவேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆலய உள்வீதி, வெளி மண்டபம் யாவற்றின் நில வேலைகள் புதிதாக ரெராசோ கல் பதிக்கப்பட்டு அழகாக்கப்பட்டுள் ளது. முற்று முழுதாக நவீன மின்சார அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளது. மகாகும்பாபிஷேகத்திற்கு பயன் படுத்தப்பட்டுள்ள சகல குடங்கள், கும்பங்களுக்கான செம்புகள் அடியார்களின் அன்பளிப்பில் முற்றுமுழு தாகப் புதியன பயன்படுத்தும் பேறு கிடைத்தது. இந்தியாவிலிருந்து மூன்று சிவாச்சாரிய வேத விற்பன்னர் களும் திரு முறை ஓதுவாரும் வருகை தந்துள்ளமை மேலும் கும்பாபிஷேகத்துக்கு சிறப்புத் தருகிறது.

அம்பாளின் மகாகும்பாபிஷேகத்தின் சிறப்போடு இந்நாடு முழுமையான அமைதிபெற்று அனைவரும் நிறைந்த வாழ்வு வாழ பிரார்த்திக்கிறோம். பன்னிரண்டு ஆண்டுக் கொருமுறை நடைபெறும் இப்பெரு விழாவில் பெருந் தொகையான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்வார்கள் என்பது திண்ணம். அம்பாளின் மகாகும்பாபிஷேகத்தோடு நாட்டில் நிரந்தர அமைதி உருவாகப் பிரார்த்தித்து அமைகிறேன்.

யாவர்க்குமாம் இன்னுரைதானே.

ஆறு திருமுருகன்
தலைவர்.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஜெயா
கல்லுடைக்கும் ஆலை
உரிமையாளர்: ஜெயராஜ்
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை.
0213218622

ஈஸ்வரி
மர அரிவு ஆலை
சகலவிதமான மரத்தளபாடம் குறித்த நேரத்தில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

சிறி
இரும்பு தொழிலகம்
சகல விதமான கேற், யன்னல் உட்பட குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
பிரதான வீதி, மல்லாகம்.

தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம்
(வ.து) கூட்டுறவு நகர்
உள்நாடு:
021 222 3053, 021 222 3054.
வெளிநாடு:
0094 212223053, 0094 212223054, 060 2212341.
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

ரமணன்
கட்டட பொருள் விற்பனை நிலையம்
325, 528, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9296.

HARINI
Net cafe
High Speed internet Browsing
K.K.S. Road, Kokuvil Junction, Kokuvil.
T.P: 077 9456528.

அனோஜன் ரேடர்ஸ்
ANOJAN TRADERS
சிமெந்து, பெயின்ற், கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்.
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
Mobil: 0776606877
T.P No.021 3205132.

செ.இராசரத்தினம்
S.R.P. பம்புகள்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில், தாவடி.

சீலன் அலுமினிய பிற்றிங்
DOHA, DUBAI இல் 10 வருட அனுபவமுள்ளவர்...
No.54, K.K.S. Road, Kokuvil Junction.
Tel: 021 4902561, 0778050918, 0789119220.

பரணிகா
மல்ரி சென்ரர்
K.K.S.Road, Mallakam.

Jayam
Electronics
339,K.K.S. Road, Jaffna.
T.P: 0774041910

PSB
Communication
337 (555), K.K.S.Road, Jaffna.
T.P. 021 222 7477

Mathanky
Pharmacy &
Grocery
K.K.S. Road, R.D.S.View Mallakam.
மாதங்கி பார்மஸி-குரோசறி- மல்லாகம்.

ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

தரம்1,2, 3, 4, 5, (வெற்றிஇலக்கு)
தயா அச்சகம்
138, நாவலர் வீதி; 575, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய போட்டிக் கேள்வி அறிவித்தல்-15

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## வடக்கின் துரித மீட்சித் திட்டம் (ENReP)
## கடன் இலக்கம்: 4676 LK

01. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து வடக்கின் துரித மீட்சித் திட்டச் செலவினத்துக்காக கடன் பெற்றுள்ளது. இதில் ஒரு பகுதியை கீழ்க்காணும் ஒப்பந்த வேலைக்கான கொடுப்பனவைச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. துரித மீட்சித் திட்ட திட்டப் பணிப்பாளரினால் கீழ்க்காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வேலைக்குத் தகுதியுள்ள கேள்விதாரரிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் வரவேற்கப்படுகின்றன.

| S.N | Contract No | Contract Name | Bid Security Amount | Required ICTAD Grade | Implementing Agency |
|---|---|---|---|---|---|
| 1 | ENReP/PMU/J/Build/560/2011 | Reconstruction of Library Building in J/Point Pedro Sithivinayagar Vidyalayam, Jaffna(9.3Mn) | 100,000.00 | M6/C7 or above (Buildings) | Dept of Education, Jaffna |
| 2 | ENReP/PMU/J/Build/561/2011 | Reconstruction & Improvements to Assembley Hall & library building in J/Hartley College, Jaffna(13.2Mn) | 150,000.00 | M5/C6 or above (Buildings) | Dept of Education, Jaffna |
| 3 | ENReP/PMU/J/Build/562/2011 | Reconstruction of Ward Blocks in Divisional Hospital, Maruthankerney, Jaffna(24.1Mn) | 270,000.00 | M4/C6 or above (Buildings) | Dept of Buildings, Jaffna |
| 4 | ENReP/PMU/J/Build/563/2011 | Reconstruction of 4 nos of MPCS Outlet Braches at Maruthankerney, Jaffna(9.1Mn) | 100,000.00 | M6/C7 or above (Buildings) | Dept of Buildings, Jaffna |
| 5 | ENReP/PMU/J/Road/564/2011 | Rehabilitation of Internal Roads in Maruthankerney, Jaffna- Package 5(41.9Mn) | 460,000.00 | M4/C5 or above (Road) | R/ACLG, Jaffna |
| 6 | ENReP/PMU/J/Road/565/2011 | Rehabilitation of Internal Roads in Maruthankerney, Jaffna- Package 6(35.8Mn) | 390,000.00 | M4/C5 or above (Road) | R/ACLG, Jaffna |
| 7 | ENReP/PMU/J/Road/566/2011 | Rehabilitation of Internal Roads in Maruthankerney, Jaffna- Package 7(32.8Mn) | 360,000.00 | M4/C5 or above (Road) | R/ACLG, Jaffna |
| 8 | ENReP/PMU/J/Road/567/2011 | Rehabilitation of Internal Roads in Valikamam North, Jaffna- Package 2(27.1Mn) | 300,000.00 | M4/C5 or above (Road) | R/ACLG, Jaffna |
| 9 | ENReP/PMU/K/Build/568/2011 | Renovation & Improvements to Co-operaty Building at Kilinochchi(7.8Mn) | 90,000.00 | M6/C7 or above (Buildings) | Dept of Buildings, Kilinochchi |
| 10 | ENReP/PMU/K/Irri/569/2011 | Rehabilitaion of Dri Aru Tank in Kilinochchi(25.2Mn) | 280,000.00 | M4/C5 or above (Irrigation) | Provincial Irrigation, Kilinochchi |
| 11 | ENReP/PMU/Mn/Road/570/2011 | Rehabilitation of Internal Roads in Manthai West, Mannar- Package 5(28.3Mn) | 310,000.00 | M4/C5 or above (Road) | R/ACLG, Mannar |
| 12 | ENReP/PMU/Mn/Road/571/2011 | Rehabilitation of Internal Roads in Madhu, Mannar- Package 5(17.2Mn) | 190,000.00 | M5/C6 or above (Road) | R/ACLG, Mannar |
| 13 | ENReP/PMU/Mn/Road/572/2011 | Rehabilitation of Internal Roads in Musali, Mannar(22.9Mn) | 250,000.00 | M4/C6 or above (Road) | R/ACLG, Mannar |
| 14 | ENReP/PMU/Mn/Irri/573/2011 | Rehabilitation of Periyapandivirichchan Tank, Mannar(96.7Mn) | 1,060,000.00 | M3/C4 or above (Irrigation) | Provincial Irrigation, Vavuniya |
| 15 | ENReP/PMU/V/Build/574/2011 | Reconstruction & Renovation to School Buildings at Vavuniya(13Mn) | 140,000.00 | M5/C6 or above (Buildings) | Dept of Education, Vavuniya |
| 16 | ENReP/PMU/V/Road/575/2011 | Rehabilitation of Internal Roads in Vavuniya- Package 4(20.7Mn) | 230,000.00 | M4/C6 or above (Road) | R/ACLG, Vavuniya |
| 17 | ENReP/PMU/V/Irri/576/2011 | Rehabilitation of Panichchankulam & Nochchikulam Minor Tanks in Vavuniya(8.43Mn) | 90,000.00 | M6/C7 or above (Irrigation) | ACAD, Vavuniya |
| 18 | ENReP/PMU/V/Irri/577/2011 | Rehabilitation of Katkulam & Velankulam Minor Tanks in Vavuniya(8.85Mn) | 100,000.00 | M6/C7 or above (Irrigation) | ACAD, Vavuniya |
| 19 | ENReP/PMU/V/Irri/578/2011 | Rehabilitation of Kathirankulam & Pavaddankulam Minor Tanks in Vavuniya(8.61Mn) | 90,000.00 | M6/C7 or above (Irrigation) | ACAD, Vavuniya |
| 20 | ENReP/PMU/V/Irri/579/2011 | Rehabilitaion of Nagarkulam & Parasankulam Minor Tanks in Vavuniya(4.68Mn) | 50,000.00 | M7/C8 or above (Irrigation) | ACAD, Vavuniya |
| 21 | ENReP/PMU/Mu/Build/580/2011 | Reconstruction of Herbal Garden at Mallavi, Mullaitivu(8.37Mn) | 90,000.00 | M6/C7 or above (Buildings) | Dept of Buildings, Mullaitivu |
| 22 | ENReP/PMU/Mu/Build/581/2011 | Reconstruction & Renovation of RDD Building Complexes at Mullaitivu(19.18Mn) | 210,000.00 | M5/C6 or above (Buildings) | RDD, Mullaitivu |
| 23 | ENReP/PMU/Mu/Build/582/2011 | Reconstruction of a block in Mu/Mullaitivu RCTMS School Building at Mullaitivu(5.59Mn) | 60,000.00 | M6/C7 or above (Buildings) | Dept of Education, Mullaitivu |
| 24 | ENReP/PMU/Mu/Build/583/2011 | Reconstruction of a block in Mu/Chilawaththai School Building at Mullaitivu(5.57Mn) | 60,000.00 | M6/C7 or above (Buildings) | Dept of Education, Mullaitivu |
| 25 | ENReP/PMU/Mu/Road/584/2011 | Rehabilitation of Internal Roads in Maritimepattu, Mullaitivu- Package 5(6.7Mn) | 70,000.00 | M6/C7 or above (Road) | R/ACLG, Mullaitivu |
| 26 | ENReP/PMU/Mu/Road/585/2011 | Rehabilitation of Internal Roads in Thunukkai, Mullaitivu- Package 1(18.3Mn) | 200,000.00 | M5/C6 or above (Road) | R/ACLG, Mullaitivu |

03. உலக வங்கியின் கேள்வி வழிகாட்டு நூலின் தேசிய போட்டிக்கேள்வி விதிமுறைகளுக்கமைய தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர்களுக்கும் இக் கேள்வியானது திறந்திருக்கிறது.

04. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும், கேள்விக் கோவைகளையும் கீழ்வரும் காரியாலயத்தில் வேலை நாள்களில் **காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை 11.02.2011 முதல் 07.03.2011 வரையான காலப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.**

05. கேள்விதாரர்கள் ICTAD நிறுவனத்தில் மேலே வேலைகள் அட்டவணையில் சொல்லப்பட்ட அல்லது அதற்கு கூடுதலான பதிவினைக் கொண்டிருப்பதுடன், இவ்வேலையின் நிர்மாணத்துக்குத் தேவையான கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயந்திர உபகரணங்களை உடையவராகவோ அல்லது வாடகைக்குப் பெறக்கூடியவராகவோ இருத்தல் வேண்டும். மேலும் கேள்விதாரர் சார்பில் வேலைத்தளத்துக்கான பொறுப்பாளரது குறைந்தபட்ச தகைமையாக தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமையும் மூன்று வருட அனுபவமுடையவரை வேலைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

06. முழுமையாக ஆங்கில மொழிமூலம் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பின்வரும் விலாசத்தில் 11.02.2011 தொடக்கம் 07.03.2011 வரை வேலை நாள்களில் (மு.ப.9 மணி தொடக்கம் பி.ப.3மணி வரை) மீளளிக்கப்படாத ரூபா 3000.00 கட்டணத்தைப் பணமாகவோ அல்லது "திட்டப் பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம், வவுனியா" என்பவருக்கு எழுதப்பட்ட காசோலை வரைவாகவோ செலுத்தி எழுத்து மூலமான விண்ணப்பத்தைக் கீழ் உள்ள முகவரியில் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும். கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபால் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ கீழ் உள்ள முகவரியில் சமர்ப்பிக்க முடியும்.

07. கேள்வி முன் ஆலோசனைக் கூட்டம் 21.02.2011ஆம் திகதி முற்பகல் 11மணிக்குத் திட்டப்பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித்திட்டம், புகையிரத நிலைய வீதி, வவுனியாவில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இக்கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு முன்பு வேலை இடங்களை உரிய திணைக்களப் பிரதிநிதிகளின் உதவியோடு பார்வையிட்டுக் கூட்டத்தில் பங்குபற்றவும்.

08. கேள்விப் பத்திரமானது 08.03.2011 அன்று பி.ப. 2 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ திட்டப் பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித்திட்டம், திட்ட முகாமைத்துவப் பிரிவு, புகையிரத நிலைய வீதி, வவுனியா எனும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரமானது அதே தினம் பி.ப. 2 மணிக்குப் பிரசன்னமாகும் கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. அனைத்துக் கேள்விகளும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியான பிணைப்பணச் சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் 05.07.2011 வரை செல்லுபடியாகத்தக்கதாய் இருத்தல் வேண்டும்.

10. ஒரு ஒப்பந்தக்காரருக்கு மூன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள், அவரால் ஏற்கனவே வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலைகளின் முன்னேற்றத்தையும், திறனையும் அடிப்படையாகக்கொண்டு வழங்கப்படலாம்.

**கலாநிதி (எந்திரி) ச.சு.சிவகுமார்,**
**திட்டப்பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம் (ENReP), புகையிரத நிலைய வீதி, வவுனியா.**
**தொலைபேசி: 024-3248330/024-2225827 மின்னஞ்சல்: pd@enrep.lk**

குறிப்பு: வடக்கின் துரித மீட்சித்திட்டம் (ENReP) தொடர்பான எதுவிதமான முறைப்பாடுகளும் ஆலோசனைகளும் complaints@enrep.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## முதுகலைமாணி கற்கைநெறி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் உயர்பட்டப் படிப்புகள் பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி கற்கைநெறி 2009/2010 ஆம் ஆண்டுக்கான வாய்மொழித் தேர்வு எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. குறித்த கற்கைநெறியின் பொது நிர்வாக இணைப்பாளரிடம் விவரங்களைப் பெறலாம் என்று உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ற-311)


## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 93
திகதி - 22.01.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: K — அதிர்ஷ்ட இலக்கம்: 10 — வெற்றி இலக்கம்: 9 1 0 8 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K 10 9 1 0 8 6 | ரூ. 8,137,468.00 | - |
| 1 பரிசு | 10 9 1 0 8 6 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 9 1 0 8 6 | ரூ. 100,000.00 | 01 |
| 3 பரிசு | 1 0 8 6 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 0 8 6 | ரூ. 1,000.00 | 264 |
| 5 பரிசு | 8 6 | ரூ. 50.00 | 2635 |
| 6 பரிசு | 6 | ரூ. 20.00 | 25347 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 9 1 0 8 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 9 1 0 | ரூ. 100.00 | 274 |
| 9 பரிசு | 9 1 | ரூ. 50.00 | 2677 |
| 10 பரிசு | K | ரூ. 20.00 | 10544 |
| 11 பரிசு | K 10 | ரூ. 100.00 | 1159 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,764,720.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.8,137,468.00

## Sales Rep

பிரபல உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு வட மாகாணம் முழுவதும் சென்று விற்பனை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதி தேவை.

Note:
- ★விற்பனைத் துறையில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம் தேவை.
- ★தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.
- ★ 20,000/-இற்கு குறையாத சம்பளமும் மேலதிகக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- ★விற்பனைத்துறையின் அனுபவச் சான்றிதழுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- 0214925727

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 27.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

- ★சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
- ★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
- ★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109460)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1262 சிகப்பு

வெற்றி இலக்கங்கள்: கும்பம் 12 19 30 49 — 21-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 4,169,150/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 246,826 | 20/- | 4,936,520/- |
| 2 இலக்கங்கள் | 22,637 | 40/- | 905,480/- |
| 1 இல. + லக்கினம் | 22,331 | 60/- | 1,339,860/- |
| 2 இல. + லக்கினம் | 2,055 | 200/- | 411,000/- |
| 3 இலக்கங்கள் | 597 | 1000/- | 597,000/- |
| 3 இல. + லக்கினம் | 60 | 10,000/- | 600,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 4,169,150/- | 4,169,150/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 13,559,010/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 670 | | 733,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 295,180 | | 14,292,010/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்: மகரம் 11 16 28 35

ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 666 | 500/- | 333,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 670 | | 733,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 600,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org